# மரண இருளின் பள்ளத்தாக்கில்

சகோதரி சாந்தி பொன்னு

சத்தியவசன வெளியீடு

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* **இலவசமாக (மத்தேயு 10:8)** உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely **free of cost (Matt 10:8)** forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

# மரண இருளின்
# பள்ளத்தாக்கில்

எழுதியவர்:

**சகோதரி சாந்தி பொன்னு**

**சத்தியவசனம் வெளியீடு**

**SATHIYA VASANAM**

P.O. BOX 55, 9, VENKATRAMAN STREET,
CHINNA CHOKKIKULAM, MADURAI 625 002.
Ph.0452-2532316; email:svmadurai@eth.net
web:www.sathiyavasanam.in

தலைப்பு : மரண இருளின் பள்ளத்தாக்கில்
Title : Valley of the Shadow of Death

எழுதியவர் : சகோதரி சாந்தி பொன்னு
Written by : Sister Shanthi Ponnu

முதற் பதிப்பு : 2006 ஜூன் - 4500 பிரதிகள்
First Edition : 2006 June - 4500 Copies

வெளியீடு : சத்தியவசனம்
Published by : Sathiya Vasanam

# பொருளடக்கம்


| அத்தியாயம் | பக்கம் |
|---|---|
| முகவுரை | - 05 |
| உங்களோடு ஒரு வார்த்தை ..... | - 06 |
| 1. இருளிலும் ஒளியானார்! | - 09 |
| 2. துயரத்திலும் துதியாவார்! | - 21 |
| 3. வனாந்தரத்திலும் வழியாவார்! | - 34 |
| 4. நெரிந்த நாணலை முறியார்! | - 41 |
| 5. தனிமையில் உறவானார்! | - 53 |
| 6. ஒன்றுமில்லாமையில் எல்லாமுமானார்! | - 65 |
| 7. பாதாளவாசலிலும் பாதுகாவலராவார்! | - 75 |
| 8. ஆபத்திலும் ஆசானானார்! | - 83 |
| 9. ஒப்புரவாகுதலின் தேவன்! | - 93 |
| 10. சாவின் பிடியிலும் சாட்சியாய் நிறுத்துவார்! | - 99 |
| 11. இறுதியாக... | - 108 |

"தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்களின் ஆத்துமாக்களை மரணத்திற்கு விலக்கிவிடுவிக்கவும், பஞ்சத்திலே அவர்களை உயிரோடே காக்கவும், கர்த்தருடைய கண்கள் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கிறது."

(சங்.33:18,19)

# முகவுரை

**நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன், தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர், உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும் (சங்கீதம் 23:4).**

கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள சகோதர சகோதரிகளுக்கு

மீட்பர் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

சகோதரி சாந்தி பொன்னு அவர்கள் எழுதிய மரண இருளின் பள்ளத்தாக்கிலே என்ற இப்புத்தகத்தை வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறோம். இப்புத்தகம் 2003 ஆம் ஆண்டிலே இலங்கை சத்தியவசன ஊழியத்திலிருந்து வெளியிடப்பட்டதாகும். தற்போது இப்புத்தகத்தை மதுரை சத்தியவசன ஊழியத்திலிருந்து மறுபதிப்பு செய்துள்ளோம். சத்தியவசன இலக்கிய பணியிலே சகோதரி சாந்தி பொன்னு அவர்களின் பங்கு இன்றியமையாத ஒன்றாகும். அவர்கள் எழுதுகிற தியானங்கள் மற்றும் சஞ்சிகையில் அவர்கள் எழுதுகிற கட்டுரைகள் ஆகியவற்றின் மூலமாக அநேக தேவனுடைய பிள்ளைகளின் ஆவிக்குரிய வாழ்வு கட்டப்பட்டு வருகிறதை நாங்கள் கண்கூடாக கண்டு வருகிறோம். இப்பணி இன்னும் சிறக்க தேவன் இன்னும் அவர்களை வல்லமையாய் எடுத்து உபயோகிக்க நம் ஜெபங்களில் அவர்களைத் தாங்குவோம்.

சத்தியவசன ஊழியத்தின் வாயிலாக இதுவரை வெளிவந்த புத்தக வெளியீடுகளிலே இப்புத்தகம் சிறிது வித்தியாசமான ஒன்றாகும். நாங்கள் வெளியிட்ட புத்தகங்களெல்லாம் முழுவதுமாக வேதவிளக்கங்களாகவும், பிரசங்கங்களாகவும் அமைந்திருந்தது. ஆனால் இப்புத்தகத்தில் அருமையான சகோதரி அவர்கள் தான் மரண இருளின் பள்ளத்தாக்கின் வழியாக செல்ல நேர்ந்தபோது பெற்ற ஆவிக்குரிய அனுபவத்தை வேதவசனத்தோடு ஒப்பிட்டும் அதை விளக்கியும் எழுதியுள்ளார்கள். இப்புத்தகத்தை வாசிக்கிற நீங்களும் இப்படிப்பட்ட வேதனையும் கண்ணீருமான அனுபவத்திற்கூடாக செல்ல நேரிட்டிருக்கலாம் அல்லது தற்போது சென்று கொண்டிருக்கலாம். உங்கள் உள்ளத்தில் எழும் ஒவ்வொரு உணர்வுகளுக்கும் கேள்விகளுக்கும் இப்புத்தகம் நிச்சயமாய் பதில் கொடுப்பதாய் அமையும் என்பதில் சந்தேகமில்லை.

தேவனுடைய கிருபை நம்மனைவரோடுங்கூட இருப்பதாக!

கே.பழனிவேல் ஆபிரகாம்
சத்தியவசன பொறுப்பாளர்

## உங்களோடு ஒரு வார்த்தை ...

**"பர்வதங்கள் எருசலேமைச் சுற்றிலும் இருக்குமாப்போல், கர்த்தர் இதுமுதல் என்றென்றைக்கும் தம்முடைய ஜனத்தைச் சுற்றிலும் இருக்கிறார்." (சங்.125:2)**

கர்த்தர் தம்முடைய ஜனத்தைச் சுற்றிலும் என்றென்றும் பாதுகாப்பாக இருக்கிறவர் என்பதை வெளிப்படுத்தும்படிக்கே, எருசலேமைச் சுற்றிலும் என்றென்றும் அசைக்கப்பட முடியாத கன்மலைகளை தாமே சிருஷ்டித்தாரோ என்று எண்ணத்தோன்றுகிறது. சங்கீதக்காரன் அனுபவித்த இந்த பாதுகாப்பின் அனுபவம் கடந்துபோகும் காற்றைப் போன்றதல்ல. இது சத்தியம். சூழ்நிலைகள் அசைந்தாலும், இந்த சத்தியம் ஒருபோதும் மாறாது.

பயங்கரமான சூழ்நிலைகள், வியாதிகள், மரணப் போராட்டங்கள் போன்றவை நம்மை இலகுவில் அசைத்துப் போடலாம். ஆனால் வெறுமனே நாம் அழிந்து மாண்டுபோக தேவன் ஒருபோதும் அனுமதியார். நமது சரீர மரணம் இயற்கை விதிப்படி நேர்ந்தாலும், அந்த மரணத்தையும் தமது மகிமைக்கேற்றபடியும், அநேகருக்குச் சாட்சியாகவும் மாற்றிப்போட நம் தேவன் வல்லமையுள்ளவரே! தமக்கு அருமையான அநேக பிள்ளைகள் கோதுமை மணிகளாக அழிக்கப்பட தேவன் அனுமதித்திருப்பதை நாம் மறுக்கமுடியாது. ஆனால் அழிக்கப்பட்ட ஒவ்வொரு மணியிலிருந்தும் எத்தனை ஆயிரம் மணிகள் உயிர்பெற்றன என்பதற்கு சரித்திரமே சாட்சி கூறும். தம்முடைய ஒரேபேறான குமாரனை நமக்காகவே மரணத்திலூற்றி விட்டவர், அவரைக் கைவிடவில்லை. பர்வதங்கள்போல அவரைச் சூழ்ந்திருந்தார். அதனாலே அவர் உயிரோடே எழுப்பப்பட்டார். இதன் பலனாக இன்று நாமும் ஜீவன் பெற்றிருக்கிறோம்.

**"என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும், உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்"** எரே.33:3.

ஒருநாள் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன். அவரும் கிருபையாகப் பதிலளித்தார்; ஆனால் நான் கேட்டுக்கொண்டபடியல்ல. பெரிய பெரிய காரியங்களைச் செய்துமுடித்தார்; ஆனால் நான் விரும்பியபடியல்ல. எண்ணிமுடியாத அதிசயமான கிரியைகளை என் வாழ்வில் நிறைவேற்றினார். நான் எண்ணியபடியல்ல. இந்த தேவன், இன்று உங்கள் வாழ்விலும் கிரியைசெய்ய வல்லமையுள்ளவராக இருக்கிறார்.

நமது சரீரம் இருக்கிறதே, அது ஒரு முட்டையின் ஓடு போன்றது. இதனை உணராதவர்களாகவே நாம் இந்த சரீரத்தின் இச்சைகளுக்கு அடிமைப் பட்டிருக்கிறோம். ஒரு பெரிய புற்றுநோய் அல்ல, ஒரு சிறு தலைவலியே போதும். வீராதி வீரர்களும் ராஜாதி ராஜாக்களும்கூட அடங்கி ஒடுங்கிவிடு வார்கள். தாங்கொணாத வேதனையால் துடிதுடித்துப் போய்விடுவர். நம்பிக்கை இழந்து தவித்துப்போய்விடுவர். இதுவரை வாழ்ந்தது வீண் என்ற ஞானம் அப்போதுதான் துளிர்விட ஆரம்பிக்கும்.

வியாதி பாரபட்சமற்றது. உலகம் முழுவதையும் தமக்குள் அடக்கிவிடத் துடித்த அநேகர் வியாதி கண்டதனால் தடுமாறி, தவித்து தற்கொலை செய்துகொண்ட சம்பவங்களும் உண்டு. வியாதியினிமித்தம் மந்திரவாதிகளையும் சூனியக்காரரையும் நாடுபவர்கள் இன்றும் உண்டு. ஆனால் ஒரு தேவபிள்ளையின் விஷயமோ வித்தியாசமானது. நோயிலும் நேயமாய், வேதனையிலும் தேவவல்லமை விளங்கும் பாத்திரமாய் அவன் விளங்குகி றான். இது தேவனுடைய சுத்தமான கிருபையேயல்லாமல் வேறொன்றும் இல்லை.

என் வாழ்வில் நடைபெற்ற ஒரு உண்மைச் சம்பவமே, இதனை எழுத என்னைத் தூண்டியது. எனக்கேற்பட்ட வியாதியில் என் தேவன் எனக்குப் போதுமானவராய் இருந்தார். அவரே சகலருக்கும் போதுமானவர். இச்சிறுநூல், விசேஷமாக வியாதியால் துடிதுடிக்கும் ஒவ்வொருவருக்கும் ஒரு நம்பிக்கையின் வாசலாக இருந்து, அவர்களைப் பெலப்படுத்தும் என்று இயேசுவுக்குள் விசுவாசிக்கிறேன்.

இதனை எழுத ஆரம்பித்த வேளை, முன்னர் சத்தியவசன நிர்வாக இயக்குனராகக் கடமையாற்றியவரும், இப்போது தமது முதுமையிலும் தேவ ஊழியத்தில் ஓய்ந்துபோகாதவருமாகிய **திருமதி மெடோஸ் அம்மா** அவர்கள் என்னை அதிகமாக ஊக்குவித்தார்கள். அவருக்காக என் தேவனைத் துதிக்கிறேன். இதனை வாசிக்கின்ற உங்கள் ஒவ்வொருவரையும் ஆண்டவர் ஆசீர்வதித்து, வியாதிகள் துன்பங்கள் சூழும்போது உங்களை அதிகமதிகமாக தாங்கிக்கொள்வாராக.

சகோதரனே, சகோதரியே, நீ கிறிஸ்துவை அறியாதவனா? அறியாதவளா? இது ஒரு கிறிஸ்தவ புத்தகம் என்று எண்ணித் தள்ளிவிட வேண்டாம். இதிலே உனக்கும் செய்தி உண்டு. கிறிஸ்து உன்னையும் நேசிக்கிறார். அவர் தமது இறைமை, தேவத்துவம் யாவற்றையும் விட்டு உனக்காக தம்மையே தந்திருக்கிறார்.

கிறிஸ்தவர்களே, கிறிஸ்து உங்களுக்கு யார்? அவர் உங்கள் மதத்தின் கடவுளா? அல்லது உங்கள் சொந்த இரட்சகரா? கிறிஸ்துவை கிறிஸ்துவாக அறிந்து ஏற்றுக்கொள்ளும்வரைக்கும் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்வதில் அர்த்தம் இல்லையே!

ஆம், நமது ஆண்டவர் கடவுள் மாத்திரமல்ல, இந்த பாடு நிறைந்த வாழ்விலே நமக்கு எல்லாவற்றுக்கும் எல்லாமாகவும் இருக்கிறார். நீ உன்னையே இழந்துவிட்டாயா? அவரே உன் மீட்பராவார். நீ தனித்திருக்கிறாயா? அவரே உனக்குத் துணை. ஆதரவின்றி தவிக்கிறாயா? அவரே உன் நேசர். திசைதெரியாமல் தடுமாறுகிறாயா? அவரே உன் மேய்ப்பர். நீ அறிவில் குறைவுபட்டவனா? அவரே உன் ஆசான். நீ வியாதிப்பட்டிருக்கிறாயா? அவரே உன் பரிகாரி.

கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருந்த நானோ கிறிஸ்துவை அறிந்திருக்கவில்லை என்பதை, அவரை அறிந்துகொண்ட பின்னரே உணர்ந்தேன். ஆலோசனையின்றி அலைந்தேன். நல்ல மேய்ச்சலின்றி அவதியுற்றேன். அமர்ந்த தண்ணீரின்றி தாகமுற்றேன். அன்புக்காக ஏங்கினேன். சத்தியத்தை அறியாமல் சக்தியற்றிருந்தேன். என் முப்பத்தி யெட்டாவது வயதிலே என் இயேசு என் வாழ்வில் வந்தார். என் வெறுமையில் என்னைக் கண்ட அவர், என் வழிகளில் என்னைத் தடுத்து நிறுத்தினார். என் வாழ்வு மாறியது, யாவுமே மாறியது. அதுவரை சுமந்து சுமந்து தவித்திருந்த எனது பாரங்களும் பாவமூட்டைகளும் கழன்று சுழன்று விழுந்து உருண்டோடியதால் பெருத்த விடுதலை உண்டாயிருந்ததை உணர்ந்து, என் தேவனைத் துதித்தேன். இதுவரை தேடியலைந்த அத்தனையும் என் இயேசுவில் கண்டேன்.

இந்த இயேசு, நமக்கு நேரிடும் எல்லா சூழ்நிலையிலும் தமது வல்லமையை நம்மில் வெளிப்படுத்தி, நம்மையே தமக்கு சாட்சிகளாக நிறுத்த வல்லமையுள்ளவராயிருக்கிறார். தேவனுக்கே மகிமை யுண்டாவதாக.

கிறிஸ்துவுக்குள்

சாந்திபொன்னு

(ஆசிரியை)

அத்தியாயம் 1

# இருளிலும் ஒளியானார்!

**"பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாயிருந்தது, ஆழத்தின்மேல் இருள் இருந்தது, தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக் கொண்டிருந்தார்." (ஆதி.1:2)**

தேவன் படைத்த பூமியானது ஒழுங்கற்றதாயும், ஆழத்தின் மேல் இருளுள்ளதாயும் இருந்தது. இந்த இருளை ஒரு நொடிப் பொழுதில் அகற்றிவிட படைத்தவரால் முடியாதா? முடியும். ஆனால் தேவனோ இருளின் மத்தியிலும் கிரியைசெய்ய வல்லவராயிருந்தார். ஆம், அந்த இருள் சூழ்ந்தவேளையிலும் தேவ ஆவியானவர் அங்கே அசைவாடிக் கொண்டிருந்தார்.

"வெளிச்சம் உண்டாகக்கடவது" என்று தேவன் கட்டளையிட்டாரே தவிர, "இருளே அகன்றுவிடு" என்று சொல்லவில்லை. நாமோ இருளை அகற்ற எவ்வளவு பாடுபடுகிறோம். வெளிச்சம் வரும்போது இருள் தானாகவே இல்லாமல் போய்விடும். இதனை உணராத நாமோ, "இருளே என்னை விட்டுப் போய்விடு" "துன்பமே தூரப்போ" "வியாதியே விலகிவிடு" "பிசாசே அப்பாலே போ" என்று ஏதேதோ கூறிக் கொண்டிருக்கிறோம். ஆனால் நம் வாழ்வில் வெளிச்சம் ஒளிவீசுவதற்கு நாம் அனுமதிக்கும் வரைக்கும் இருள் அகன்றுவிடவும் மாட்டாது, தேவ பிரசன்னம் நம் வாழ்வை நிறைக்கும் வரைக்கும் சாத்தானும் நம்மை விட்டு விலகவும் மாட்டான்.

வெளிச்சம் நல்லது என்று கண்ட தேவன் இருளை முற்றிலும் அகற்றிவிட்டாரா? இல்லை. நல்லது என்று கண்ட வெளிச்சத்திலிருந்து இருளைப் பிரித்துவைத்தார். பிரித்து வைத்தாரே தவிர இருளை நல்லது என்று அவர் சொல்லவில்லை. மனுஷ வாழ்விலே அந்த இருள் சூழ்ந்த இரவையும் நன்மையாக மாற்றி வைத்திருக்கிறார் ஞானத்தின் உறைவிடமாகிய நம் தேவன். எப்படி என்று கேட்கிறீர்களா? பகலின் வேலையினால் களைப்படைந்த மனுஷன் உறங்கி ஓய்வெடுத்து மறுநாளை மகிழ்வுடன் சந்திக்க தேவன் வழிவகுத்தார். (நம்மில் பலருக்கோ பகலில் உறக்கம், இரவில் மயக்கம்!)

இப்படியிருக்க, ஏன் இந்த இருள்? ஏன் இந்த துன்பம்? ஏன் இந்த வியாதி என்றெல்லாம் நாம் கேள்விகள் எழுப்புவதென்ன? இரவு

வந்ததும் அமைதியாகப் படுத்து உறங்குகிறோமே. அதுபோல துன்ப இருள் நம்மைச் சூழும் வேளையிலும் நமக்கு ஒரு இளைப்பாறும் இடம் உண்டு. இருளைத் தேவன் அனுமதித்ததற்கும் ஒரு நோக்கம் இருக்கு மானால், இருள் போன்ற வேதனைகளையும் அனுமதிக்கவும் தேவனுக்கு ஒரு நோக்கம் இருக்குமல்லவா? இந்த இருள் எப்போதும் ஆட்சி செய்வதில்லை. இருளின் மத்தியில் வெளிச்சத்தை உண்டாக்கியவர், நமக்கு ஏற்படும் துன்பம் துயரம் வியாதி மத்தியிலும் கிரியை செய்ய வல்லவராயிருக்கிறார்.

இன்னுமொரு முக்கிய காரியம் உண்டு. சிருஷ்டிப்பின் முதல் நாளிலேயே பகலையும் இரவையும் வேறாக்கிய தேவன், நான்காம் நாளிலே தான் அதனை ஆளுவதற்காக சுடர்களை சிருஷ்டித்தார் என்று காண்கிறோம். (ஆதி.1:14-18) அதாவது சூரியன் படைக்கப்பட்டதால் வெளிச்சம் உண்டாகவில்லை. உண்டாக்கப்பட்ட வெளிச்சத்தை ஆண்டு கொள்ளவே சூரியன் படைக்கப்பட்டது. இதனை உணராத நாமோ, இருள்போன்ற இடுக்கங்கள் நம்மைத் தாக்கும்போது, எல்லாவற்றுக்கும் மூலகாரணராக விளங்கும் தேவனுடைய வெளிச்சத்திற்காக ஜெபிக்காமல், வெறும் ஆதாரங்களுக்காகவே ஜெபிக்கிறோம். வியாதி ஏற்பட்டால், ''பிதாவே, உமது வல்லமை விளங்குவதாக'' என்று ஜெபிக்காமல், ''நல்ல வைத்தியனைத் தாரும், சுகம் தாரும்'' என்று ஜெபித்து அவரது மகாவல்லமையைக் குறைவாக எடைபோட்டுவிடுகிறோம்.

இந்த இருளை ஆளுவதற்கு தேவன் எதைப் படைத்தார் என்று பார்த்தீர்களா? இருளின் மத்தியிலும் ஒளிதரும் ஊடகம் ஒன்றையே தேவன் படைத்தார். அந்தச் சந்திரன் இன்றும் இருளில் பிரகாசிக்கிறதல்லவா! இரவில் நாம் காணும் நட்சத்திரங்கள்தான் எத்தனை! இந்தச் சந்திரனும் சூரியனும் ஒருநாள் இல்லாமல் போகலாம். நட்சத்திரங்களும் விழுந்து போகலாம். ஆனால் நமது வாழ்வில் ஒளிவீசும் நம்பிக்கை நட்சத்திரமாகிய அந்த விடிவெள்ளி நட்சத்திரமோ ஒருபோதும் மாறிடவும்மாட்டார், மறைந்திடவும் மாட்டார். **அவர்தான் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து!**

இந்த விளக்கம் யாவும் நமக்கு எதற்கு? தேவன் தாம் படைத்த இயற்கைக்கூடாக நம்மோடு பேசுபவர். இருள் சூழக்கூடிய தருணங்களும் நம் வாழ்விலே உண்டு என்பதை நாம் உணரவேண்டும். பட்டப்பகலிலும் இருள்மேகம் சூரியனை மறைப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? அப்படியே ஒளிவீசும் நம் வாழ்விலும் இருள் சூழலாம். நல்ல திட்டங்களை வகுத்தி ருக்கும்போது எதிர்பாராமலே வியாதி ஏற்பட்டு கட்டிலில் சாய்ந்துவிடலாம். பிரியமானவர்களே, இருள் மேகம் சூழ்ந்துவிட்டால் இரவு வந்துவிடுமா? அல்லது அந்த சூரியனே இல்லாமல் போய்விடுமா? துன்பம் ஒன்று

வந்துவிட்டால் வாழ்க்கையே இருண்டுவிடுமா? இல்லை. அந்த மேகத்தினூடாகவும் சூரியனின் மகிமைநிறைந்த ஒளி ஊடுருவிப்பாயும் காட்சி அற்புதம் அல்லவா! அதைப்பார்க்கிலும் நமது தேவன் அந்த இருள் நிறைந்த நமது வாழ்விற்கூடாக ஒளி வீசும்போது அது மகா அற்புதமே!

## இருள் சூழ்ந்தது

ஓமனில் வேலை பார்த்துக்கொண்டிருந்த நான் விடுமுறைக்காக இலங்கைக்கு வந்திருந்தேன். அன்று 1990ம் ஆண்டு, ஆடி மாதம், ஆறாம் தேதி. என் சகோதரியின் மகளைப் பார்க்க பதுளைக்குச் சென்றிருந்த நான் அந்த வீட்டு முன்மண்டபத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே பேசிக் கொண்டிருந்தேன். என் மகிழ்ச்சிக்குக் காரணம் இருந்தது. ஒன்று, என் அக்கா மகளுக்கு ஒரு சின்ன மகள். அவளைப் பார்க்கப் பார்க்க என் உள்ளம் இனம்புரியாத மகிழ்ச்சியினால் துள்ளியது. அடுத்ததாக, ஓமனிலே தொழில் புரிந்த காலப்பகுதியில், என் இரட்சகரை அறிந்து அனுபவிக்கும் வாய்ப்பு அதிகமதிகமாய் எனக்கு உண்டாயிருந்தது. ஆனாலும் அவருடைய வார்த்தைகள் என் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப்போல் என் இருதயத்தில் இருந்தது, அதைச் சகித்து இளைத்துப்போனேன். (எரே.20:9) ஆம், அந்த வார்த்தை என் வாழ்வில் எண்ணிமுடியாத மாற்றங் களை உண்டாக்கியிருந்தது.

வாழ்க்கையின் முக்கிய காலத்தை வீணிலே கழித்துவிட்டபோதும், இப்போதாவது தேவஅன்பைப் பெற்றுக்கொண்டுவிட்ட மகிழ்ச்சி என்னை நிறைத்திருந்தது. இந்தவேளையில் திடீரென எனது உடலிலே வலி சுளீரிட்டது. எனது இடதுபக்க இடுப்பின் பின்புறப் பக்கவாட்டில் அசாதாரணமான வலி உண்டாயிருந்ததை உணர்ந்தேன். ஏதோவொரு எச்சரிப்பின் தொனி என்னுள்ளத்திலே கேட்டது. எனது கிறிஸ்தவ வாழ்வின் ஆரம்ப ஓட்டத்திற்கும், எனக்குள்ளே கட்டப்பட்டுக்கொண்டிருந்த விசுவாசக் கோட்டைக்கும் சவாலாக அமைந்திருந்தது அந்த வலி. உடல்ரீதியாகவும் உளரீதியாகவும் என் வாழ்வு தகர்க்கப்படக்கூடிய அபாய ஒலி ஒன்று என் காதுகளில் ஒலித்தது. ஆனாலும் தளராத உள்ளத்துடனும், வலிநிவாரண மாத்திரையுடனும் கொழும்பு வந்து சேர்ந்தேன். விட்டுவிட்டு அதிகரித்த இந்த வலியினால் இனம்புரியாத ஒரு மந்தாரம் என்னைச் சூழ்ந்துகொள்வதை உணர்ந்தேன்.

'தெய்வீக சுகம்' என்பதைக் கேள்விப்பட்டும் போதிக்கப்பட்டும் இருந்ததால் எனக்கும் அது கிடைக்கும் என்று நம்பி, வலி கண்ட இடத்திலே

வலது கையை வைத்து, வல்லமையாக ஜெபித்தேன். பாடினேன், துதித்தேன். ஆனால் வலியோ அதிகரித்துக்கொண்டிருந்தது. அற்புதத்தைக் காண விரும்பிய எனக்கு அழுகைதான் மிஞ்சியது. இருள் மேகம் ஒன்று என்னை மூடிக்கொள்ள ஆரம்பித்தது. இது சொற்ப வேளையில் அகன்றுவிடும் மேகக்கூட்டமா? அந்தகாரத்தின் ஆரம்பமா? எதுவுமே புரியாத நிலையில் விழித்தேன். ஏன் அந்த அற்புதம் நிகழவில்லை??? மனது குழம்பியது.

இரு ஆண்டுகள் சம்பளமில்லாத விடுமுறை பெற்று ஓமன் சென்றிருந்த நான் விடுமுறைக்கு இலங்கை வந்திருந்தேன். மறுபடியும் எப்படியும் ஓமனுக்குச் சென்றபின் எதுவும் நிகழட்டும் என்ற எண்ணம் எனக்கு. விசுவாசத்தால் எதனையும் சாதித்துவிடலாம் என்ற எண்ணத்தால் என் சுயமான விருப்பம் நிறைவேறவேண்டும் என்பதற்காக என் விசுவாசத்தையே பணயம் வைத்து போராடிக்கொண்டிருந்ததை அப்போது நான் உணரவில்லை. "என் நினைவுகள் உங்கள் நினைவுகளல்ல, உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல" (ஏசா.55:8) என்று கர்த்தர் கூறியது மெய்யே. அதற்காக அவர் தமது வழிகளை நமக்கு மறைத்துவைக்கவில்லை. அவற்றைத் தேடிக் கண்டுபிடித்து, அதன் வழி நடப்பதை விட்டுவிட்டு, என் வழி கர்த்தருக்குச் சித்தமில்லை. என் வியாதி குணப்படுவது தேவனுக்குப் பிரியமில்லை, ஏதோ அவர் சித்தப்படி ஆகட்டும், என்று பெருமூச்சுடன் முணுமுணுக்கிறோம்.

எனக்கு மிகவும் அருமையான ஒரு நண்பியின் வீட்டிற்குப் போயிருந்தேன். என் வலி அதிகரித்ததனால் அவளின் தாயார் மிகுந்த கவலையோடு எண்ணெய் பூசி ஜெபித்தார்கள். ஆனாலும் பலனில்லை. முப்பத்தியெட்டு வருடங்களுக்குப் பிற்பாடு நான் அடைந்த இரட்சிப்பிற்கும் பங்கம் ஏற்படக்கூடுமே என்ற தவறான எண்ணமும் எனக்குள்ளே முளைவிட ஆரம்பித்தது. இந்த எண்ணத்திற்கு என் மனதிலே இடமளித்த அந்த வேளையிலேயே என்னைச் சூழந்துகொள்ள ஆரம்பித்திருந்த இருள் அந்தகாரமாக உருவெடுத்ததை உணர்ந்தேன். பிரியமானவர்களே, கர்த்தர் சொல்லுவது என்ன?

**'பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கின்றனவோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது"**

இப்படியிருக்க, நாம் தேவனுடைய வழிகளைக் குறித்துத் தப்புக் கணக்குப் போடலாமா? ஏக்கப்பெருமூச்சு நம்மில் பொங்கலாமா? அல்லது விதி விளையாடுகிறது என்று முறுமுறுக்கலாமா?

## மறக்கமுடியாத நாள்

என் பள்ளி நாட்களில் இத்தலைப்பிலே, நான் மழையில் நனைந்ததைப்பற்றியும், என் செல்ல நாய்க்குட்டி செத்துப் போனதைப் பற்றியும் யோசித்து யோசித்து கட்டுரைகள் எழுதி அதிக மதிப்பெண்கள் எடுத்தபோது, என் சொந்த வாழ்விலேயே மதிப்பு வாய்ந்த மறக்கமுடியாத நாட்கள் இனியும் வரும் என்று நான் நினைத்திருக்கவில்லை. ஆம், என் வாழ்வில் குறிப்பாக நான்கு நாட்களை எனக்கு மறக்கவேமுடியாது. ஒன்று தேவகிருபையினால் என் பாவங்கள் மன்னிக்கப்பட்டு மறுபிறப்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொண்ட நாட்கள்; இரண்டாவது. அதனை பகிரங்கமாக அறிவித்த என் ஞானஸ்நானத்தின் நாள்; மூன்றாவது, தம்மோடு ஒய்ந்திருக்கும்படிக்கு கர்த்தர் எனக்கு அனுக்கிரகம் பண்ணிய வியாதிப்பட்ட நாட்கள்; இறுதியாக என் தாயாரின் மரண நாள்.

அன்று 1990ம் ஆண்டு, ஆடி மாதம், 18ம் நாள். வலி மிகவும் அதிகமாயிருந்தது. மனம்விட்டு யாருடனும் பேசவும் முடியாததொரு சூழ்நிலையில் தனித்திருந்து தாங்கிக்கொண்டேன். மிகுந்த சிரமத்துடன் இரு இட்லிகளை சாப்பிட்டுவிட்டு, "ஆண்டவரே, தாங்கிக்கொள்ளும்" என்று ஜெபித்துவிட்டு, சிறுபிள்ளைபோல் தூங்கிவிட்டேன்.

சடுதியாக கண்விழித்தபோது, வலியைவிட வாந்தி அதிகமாக என்னை வருத்தியது. இது சிறுநீரகக் கோளாறாக இருக்குமோ என்ற எண்ணம் என்னுள்ளத்தை உறுத்த, கண்களை உயர்த்தி கடிகாரத்தைப் பார்த்தேன். நடுநிசி 11.30மணி. அத்துடன் அந்தகாரமும் என்னைச் சூழ்ந்துகொண்டது. அமைதியாகக் கண்ணீர்விட்டேன். மறுநாள் காலையிலே என் அன்பு அக்கா, அவரது கணவர் ஆகியோரின் உதவியுடனும் தளராத நம்பிக்கையுடனும் வைத்தியரை நாடினோம். வைத்தியத்தின் ஆரம்பமே என் நம்பிக்கையைத் தகர்த்துவிட்டதால், அந்தகாரத்தின் இருளுக் குள்ளேயே தள்ளப்பட்டுவிட்டதை உணர்ந்தேன்.

என்றாலும், ரட்ணம் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டு துரிதமாக வைத்தியமும் ஆய்வுகளும் ஆரம்பமாயின. ஊசிமூலமாக ஏற்றப்பட்ட மருந்து என் இரத்தத்துடன் கலக்க, வலியும் சிறிது சிறிதாகக் குறைந்தது. விதம்விதமான கதிரியக்கப் படங்கள் எடுக்கப்பட்டன. 'ஸ்கேனிங்' என்ற நவீன சோதனையும் மேற்கொள்ளப்பட்டது. எல்லாம் முடிந்ததும், வைத்தியரின் வரவுக்காகக் காத்திருந்தோம்.

20ம் தேதி மாலை 6மணி இருக்கும். யாவரும் திகைத் தவர்களாகக் காணப்பட்டனர். நானோ, வைத்தியசாலைக் கட்டிலிலே படுத்திருப்பதையே ஜீரணிக்கமுடியாதவளாக, செயலற்றிருந்தேன். புறத்திலும் அகத்திலும்

இருள் சூழ்ந்திருந்த அந்த நேரத்திலே ஜெபிக்கவும் திராணியற்றவளாக திடுக்குற்றிருந்தேன். இப்படியான சூழ்நிலைக்குள் நீங்களும் அகப்பட்டிருக்கிறீர்களா?

வந்த வைத்தியர் ஆய்வுக் குறிப்புக்களைப் பார்த்துவிட்டு, எதுவும் பேசாமல் வெளியே செல்ல, மற்றவர்களும் அவரைத் தொடர்ந்து சென்றுவிட்டனர். அந்த ஒவ்வொரு விநாடியும் எனக்கு ஒவ்வொரு யுகம்போல இருந்தது. இறுதியில் என் வேண்டுகோளுக்கிணங்க வைத்தியரான என் அக்காவின் மருமகன் விபரத்தைக் கூறினார். இடது புறத்தில் சிறுநீரகம் வியாதிப்பட்டு பெருத்துவிட்டதுமன்றி, ஏற்பட்டிருந்த முழுஅளவிலான தடையினால் செயலற்றிருப்பதாகவும், வலது புறத்துச் சிறுநீரகம் முற்றாகச் சிதைந்து காணப்படுவதாகவும் சொன்னார். மெய்யாகவே ஒருகணம் திடுக்குற்றேன். இதனை நம்புவதற்கு என்னுள்ளம் மறுத்தது. வாழ்வின் கனவுகள் யாவும் சிதைந்தன. ஓராயிரம் சம்மட்டிகளால் தாக்கப்பட்டதுபோல துடித்தேன். சூழ்ந்துகொண்ட அந்தகார இருள் என்னை விழுங்கிப்போட்டதுபோல இருந்ததுமன்றி, இப்போது மரணப்பள்ளத் தாக்கினுள் தள்ளப்பட்டுவிட்டதையும் உணர்ந்தேன்.

என் உறவினர்களைத் திரும்பிப் பார்த்தேன். கண்ணீர்மல்கும் அவர்களது முகங்கள் என் துக்கத்தை இன்னும் அதிகரித்தது. என்னுள்ளம் ஓலமிட்டது. என்னை ஆட்கொண்ட இருளின் பிடியிலிருந்து விடுபடமுடியாமல் நான் தவித்தேன். ‘இந்த இருளிலே யார் எனக்கு ஒளி கொடுப்பார்? ஆண்டவரே, உமது முகமும் மறைக்கப்பட்டுவிட்டதே’ என்று மவுனமாக அலறினேன். இருள், எங்கும் இருள், காரிருள்! சூரியனைத் தேடினேன், ஒளியில்லை. சந்திரனைத் தேடினேன், பலனில்லை. நம்பிக்கையின் விடிவெள்ளியைத் தேடினேன். இருள்மேகம் அதனை மறைத்திருந்தது. கண்களைக் கசக்கிவிட்டுக்கொண்டேன். சகல நம்பிக்கையும் அற்றவளாக இருளுக்குள் இருளாக என்னை மறைத்துக் கொண்டேன்.

புற்றுநோய் தங்களுக்கு வந்துவிட்டதை அறிந்துகொண்ட அன்பான சகோதர சகோதரிகள் அநேகர் இவ்விதமாக தமது வாழ்வே அஸ்தமித்துவிட்ட நிலையில் தவிப்பதை நான் இன்று காணும்போது, அவர்களது வேதனையை என்னால் நன்கு புரிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது. இப்படியான இருளுக்குள் சங்கமமாக நேரும்போது நாம் இதிலிருந்து தப்பி ஒளிந்து கொள்ளமுடியாது. முகம் கொடுத்துத்தான் ஆகவேண்டும்.

பிரியமானவர்களே, அரசனோ ஆண்டியோ நோயின் கோரப் பிடிக்குள் அகப்படுகிறவன் நொந்துருகிப்போவான். நீங்களும் இன்று

இப்படியான வேதனையிலோ, அல்லது இதைவிட இன்னும் அதிக நெருக்குதலிலோ தள்ளப்பட்டிருக்கலாம். வியாதியா? மரணபயமா? கைவிடப்பட்டு, நம்பிக்கையிழந்து, நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறீர்களா? சரீர வேதனையைப் பார்க்கிலும், உளரீதியாகவும் நீங்கள் பாதிக்கப்பட்டிருக்கலாம். கலங்கவேண்டாம், அழவேண்டாம் என்று நான் சொல்ல வரவில்லை. நன்றாக அழுங்கள். உணர்ச்சிகளை அடக்கி வைப்பது ஆபத்தையே விளைவிக்கும். பலவேளைகளில் நாம் மனம்விட்டு அழும்போது எந்த மனுஷனும் தரமுடியாத பெரிய ஆறுதல் நமக்கு நிச்சயமாகவே தோன்றும். என்றாலும், உங்கள் தனிமையிலும் தேவ பாதத்தில் அமர்ந்திருந்து உங்கள் உள்ளத்தை ஊற்றி அழுங்கள். அது ஆச்சரியமான அமைதியைத் தரும். அதற்காக முறுமுறுப்போடு அழவேண்டாம். ஆத்திரம் அழுகையாக மாறவும்வேண்டாம். அது ஆபத்தை விளைவிக்கும்.

பிரியமானவர்களே! கர்த்தரால் பெயர்க்கக்கூடாத மலைகள் இல்லை. கர்த்தரால் அடக்கமுடியாத புயலும் இல்லை. அவரால் நிவர்த்தியாக்க முடியாது என்று எதுவுமே இல்லை. நமது கண்கள் இருண்டுவிட்டதனால் சூரியனே இருளடைந்துவிட்டது என்று சொல்லலாமா? அல்லது சந்திரன் தேய்ந்துபோவதுபோலத் தெரியும்போது சூரியனும் தனது ஒளியை இழந்துவிட்டது எனலாமா?

பிரியமானவர்களே, **"துன்பத்தின் இருண்ட மேகங்களே ஆசீர்வாதத்தின் மழையைப் பொழிகின்றன"** ஆகவே அழுதாலும் நம்பிக்கையைத் தளரவிடாதிருங்கள். காலையிலல்ல, அதிகாலையின் நம்பிக்கையின் நட்சத்திரத்தை உற்று நோக்குங்கள். அது உங்களுடன் பேசும். அதிகாலையின் விடிவெள்ளி ஆண்டவரின் அன்பை உங்களுக்கு உறுதிப்படுத்தும்.

## இருளிலும் ஒளி பிரகாசித்தது

என்றுமில்லாதவாறு அந்த நதி பொங்கிப் பிரவாகித்து ஓடியது. அதன் கரையிலே நின்றிருந்த ஜனங்கள் திகைத்துத் தடுமாறினார்கள். சிலர் முறுமுறுத்தனர். அதிபதிகள் வந்து ஜனங்களை நோக்கி, "கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற மனிதரைக் கண்டதும் நீங்களும் அவர்கள் பின்னே செல்லுங்கள். ஆனால் அதற்குச் சமீபமாகச் செல்லவேண்டாம். இதற்கு முன்னே நீங்கள் ஒருபோதும் இந்த வழியாய் நடந்து போகவில்லை" என்றனர். பெட்டி புறப்பட்டது. ஜனங்களும் சென்றனர். யோர்தான் நதியோரம் வந்ததும் நின்றனர். கரை புரண்டு ஓடிக்கொண்டிருந்த நதி தேவனுடைய ஆசாரியர்களைக் கண்டதும்

பயந்துவிடவில்லை. உடன்படிக்கைப் பெட்டியைக் கண்டதும் நடுங்கிவிடவும் இல்லை. அது ஓடிக்கொண்டே இருந்தது. தலைவன் யோசுவா முன்னே வந்தான். அவன் முகத்தில்தான் எத்தனை பிரகாசம். வந்தவன் பேசினான். ''சம்பவிப்பது என்னவென்றால், சர்வ பூமிக்கும் ஆண்டவராகிய கர்த்தரின் பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர்களின் உள்ளங்கால்கள் யோர்தானின் தண்ணீரிலே பட்டமாத்திரத்தில், மேலேயிருந்து ஓடிவருகிற யோர்தானின் தண்ணீர் ஒரு குவியலாக நிற்கும்'' என்றான். ஜனங்கள் பிரமித்துப்போயினர்.

பிரியமானவர்களே, சர்வ பூமிக்கும் ஆண்டவராகிய கர்த்தருடைய பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர்கள் சாதாரணமானவர்களா? நாம் ஒன்றை மறந்துபோகிறோம். இன்று அந்த உடன்படிக்கைப் பெட்டி நம்மிடம் இல்லை. அன்றிருந்த ஆசாரியர்களும் இல்லை. ஆனால் நாம் யார்? இன்று தேவசந்நிதானத்தில் நின்று செய்யும் அந்த ஆசாரிய ஊழியத்தைத் தேவன் நம்மிடம் கொடுத்திருக்கிறார் அல்லவா. உடன்படிக்கையின் வார்த்தைகள் பெட்டிக்குள் அல்ல, சதையாகிய நமது இருதயத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க நமக்குத் தயக்கம் ஏன்? வசனம் கூறுவது என்ன? தேவனுடைய வார்த்தையின்படி, கர்த்தரின் பெட்டியைச் சுமந்த ஆசாரியர்களின் **கால்கள் தண்ணீரின் ஓரத்திலே பட்ட மாத்திரத்தில்,** மேலேயிருந்து ஓடிவந்த தண்ணீர் நின்றது. குவியலாகக் குவிந்தது. உப்புக்கடலுக்கு ஓடிவருகிற தண்ணீர் வேறுவழியாய்ப் பிரிந்து சென்றது. ஆம், அற்புதம் நிகழ்ந்தது. ஆரவாரம் செய்த ஜனங்கள் தண்ணீர் இல்லாத உலர்ந்த தரையிலே கெம்பீரத்தோடு நடந்து, யோர்தானைக் கடந்து சென்றனர்.

கண்களைக் கசக்கிவிட்டேன். கட்டிலிலே படுத்திருந்த என் முன்னேயே இந்த அற்புதம் நடப்பதுபோலிருந்தது. ஆசாரியர்களின் கால்களை உற்றுக் கவனித்தேன். வரிசை வரிசையாக நின்றவர்களின் கால்களை நோக்கிய என் கண்கள் முன்வரிசையிலே நின்ற ஆசாரியர்களின் கால்களையும் முகங்களையும் உற்றுக் கவனித்தது. வெற்றிக்களிப்பும் விசுவாசத்தின் திடமும் அவற்றிலே தெரிந்தது. ''இது புதிய வழி'' என்றார் கர்த்தர். அப் புதிய வழியைக் காண அவர்கள் விரைவது தெரிந்தது. ''**அவர்களது கால்கள் தண்ணீரில் பட்ட மாத்திரத்திலே**'' என்ற பகுதி திரும்பத் திரும்ப என் செவிகளிலே ஓயாமல் ஒலித்தது.

இப் புதிய வழியை அவர்கள் தாமாக தெரிந்தெடுக்கவில்லை. கர்த்தரே அவர்களை நடத்தினார். அப்படியான வழியில் இந்தப் பெரிய தடை வரலாமா?. நடக்கமுடியாது, நீந்தமுடியாது, செங்கல் அறுத்த கைகளுக்குப் படகுகள் செய்யப் பெலன் ஏது? படகு செய்தாலும் பொங்கிப்

பிரவாகித்து ஓடுகின்ற நதியிலே எப்படி அதனை ஒட்டுவது? இந்த நிலைமையிலே கட்டளை வருகிறது. ஒன்று உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கவேண்டும். அடுத்தது தண்ணீரில் படும்படிக்குக் கால்களை வைக்கவேண்டும்.

இது ஒரு சின்ன வேலைதான், ஆனால் அதனைச் செய்வதற்கும் விசுவாசம் அவசியம். அன்று குஷ்டரோகியாகிவிட்ட படைத்தளபதி நாகமானிடம், யோர்தானில் ஏழுதரம் மூழ்கி எழும்படி சொல்லப்பட்டபோது அவன் எழுந்து போனானா? இல்லை. 'நான் குளிப்பதற்கு என் நாட்டிலே தண்ணீர் இல்லாமலா இத்தனை தூரம் வந்தேன்' என்று கோபம் பொங்க கர்ச்சித்தான். இறுதியில் ஊழியக்காரனின் சமயோசித புத்தியினால் நாகமான் அப்படியே செய்து பூரண சுகம் பெற்றான் அல்லவா. (11ராஜா.5:1-14)

இந்த யோர்தான் நதியின் ஓரத்திலேதான் இஸ்ரவேலின் ஆசாரியர்கள், கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து பெரிய அற்புதத்தைக் கண்டார்கள் என்பதை அந்த நாகமான் முதலிலேயே அறிந்திருந்தால் தானும் உடனே கீழ்ப்படிந்திருப்பானோ! தேவ வார்த்தையின் மகத்துவத்தை அறிந்திருந்தும் கூட நம்மில் எத்தனைபேர் அதனை நம்பாமல் அதன் வல்லமையை அனுபவிக்கத் தவறிவிடுகிறோம்.

என்னைச் சூழ்ந்திருந்த அந்தகாரத்தின் மத்தியிலே ஒரு ஒளிக்கீறல் தெரிந்தது. என் ஜீவியத்தை முற்றுமாய் மாற்றிப்போட்ட என் கர்த்தர், புதிய வழியிலே என்னை நடத்தி வருவதை உணர்ந்தேன். இந்த சொற்ப காலத்துள் இப்படியானதொரு தடையைச் சந்திப்பேன் என்று நான் நினைத்திருக்கவில்லை. உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்தவளாக நின்ற என்முன்னே, இருளுக்குள் என்னைத் தள்ளிவிட்ட 'வியாதி' என்ற தடை நதிபோல பிரவாகித்துப் பயமுறுத்தியது. அந்தகாரத்திலிருந்து ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு கிருபையாக வழிநடத்தப்பட்ட என் புறவாழ்வில் இருள் சூழ்ந்தபோது தடுமாறியேவிட்டேன். ஆனால், இருளிலும்கூட தமது வார்த்தையின் வெளிச்சத்தைத் தந்து கர்த்தர் நடத்துவார் என்ற உண்மையையும் அப்போதுதான் உணர்ந்துகொண்டேன்.

அப்போது என் உள்ளுணர்வு விழித்துக்கொண்டது. 'என் எதிர்கால நம்பிக்கையை அமிழ்த்திப் போடுவதாகப் பயமுறுத்தும் வியாதி என்னும் நதிக்குள்ளே நான் என் கால்களை வைப்பேன். என் தேவன் மீதியைச் செய்வார்' என்ற விசுவாசம் எனக்குள் பலப்பட்டது. விசுவாசம் கிரியையை ஆரம்பிக்கும்போதெல்லாம் விழித்துக்கொள்ளும், அவிசுவாசத்தின் அதிகாரிக்கு நான் மாத்திரம் விதிவிலக்கா? இருள் சூழ்ந்தது. 'ஏய்! சர்வ பூமிக்கும் ஆண்டவராகிய கர்த்தரின் பெட்டியைச் சுமக்கின்ற ஆசாரியர் களின் உள்ளங்கால்கள்தான் வேண்டுமேதவிர உன்னுடையதல்ல. நீயோ

சேற்றின் உளையிலே புரண்டு கொண்டிருந்தவளாச்சே.' நானோ என் கண்களை இறுக மூடிக்கொண்டேன். அந்தவேளையிலும் நான் தேற்றப்பட்டேன். "என் இயேசு என் பாவங்களைக் கழுவிவிட்டார். நான் உளையான சேற்றிலே கிடந்தாலும் இப்போது தூக்கி யெடுக்கப்பட்டு, இயேசு என்ற கன்மலையிலே நிலையாக வைக்கப்பட்டு, கல்வாரி பாதையிலே உறுதிப்படுத்தப்பட்டவள். என் தேவனைத் துதிக்கும் புதிய பாடல் என் நாவிலே உண்டு. (சங்.40:2,3) பாடலைத் தந்தவர் இன்று எனக்குள்ளே வாசம்பண்ணுவதால் நானே அவரது ஆலயம், அந்த உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிறவளும் நானே." இந்த சிந்தனை எனக்குள் நிறைந்தபோது, ஒரு நம்பிக்கையின் நட்சத்திரம் என்மேலே ஒளிவீசுவதை உணர்ந்தேன்.

வார்த்தையாகிய அந்த ஜீவ ஒளி, இருளின் மத்தியிலும் என்னைச் சுற்றிலும் பிரகாசித்தது. இருளானது ஒன்றும் செய்துவிடவில்லை. அந்த வார்த்தையைப் புரிந்துகொண்டபோது, புத்திக்கெட்டாத தெய்வ சமாதானத்தால் நிறைக்கப்பட்டேன். சகலத்தையும் தாமே சுமக்க என் ஆண்டவர் ஆயத்தமாய் இருப்பதை உணர்ந்து நன்றியோடு அவரைத் துதித்தேன். பிதாவே, உமது வார்த்தைப்படி என் கால்களை எடுத்து வைக்கிறேன். என் பலத்தாலும் அல்ல, பராக்கிரமத்தாலும் அல்ல. இயேசு என்ற நாமத்தினாலே மாத்திரமே மரணத்திற்கேதுவான இந்த வியாதி என்ற நதியிலே என் கால்களை வைக்கிறேன். என்னை நடத்தும்" என்று ஒப்புவித்தேன். இவை உணர்ச்சிவசப்பட்ட வார்த்தைகளோ அல்லது அர்த்தமற்ற வசனிப்புக்களோ அல்ல.

என் உள்ளத்திலே எழுந்த இந்த ஜெபமானது, இருளின் மத்தியிலே வார்த்தையினாலே ஏற்றி வைக்கப்பட்ட ஒளியின் சுடரைப போலிருந்தது. அந்த ஜீவ ஒளியின் பிரகாசத்தை இறுதிமட்டும் இழந்து விடாதபடி தூயஆவியானவரின் கிருபையினாலே ஏறெடுக்கப்பட்ட இந்த அர்ப்பணத்தின் ஜெபமானது விசுவாசத்தைக் கட்டியெழுப்பும் அஸ்திபாரமானது.

இதனை வாசிக்கும் தேவபிள்ளையே, உனக்கு வியாதி குணமாகா திருக்கலாம். தெய்வீக குணத்திற்காக ஜெபித்தும்கூட அது நடைபெறா திருக்கலாம். அதற்காக சோர்ந்துபோகாதே. நம்பிக்கையோடு உன்னை ஆண்டவரின் கரத்தில் அர்ப்பணம் செய். நம்பிக்கையோடே கால்களைத் தூக்கி முன்னே வை. சுகம் கிடைக்குமா, கிடைக்காதா என்பதல்ல காரியம். என்ன நடந்தாலும் ஏது நடந்தாலும், உன் தேவன் உன்னோடே இருந்து உன் யுத்தத்தை நடத்துவார் என்ற உறுதி உனக்குள் வருவதே காரியம். அதன்பின் வாழ்வென்ன சாவென்ன!

என் உடலிலே நான் பலத்த வேதனையை அனுபவித்த வேளையில்கூட எனக்குள் ஏற்றிவைக்கப்பட்ட அந்த சமாதானத்தின் ஒளி இறுதிவரையிலும் மங்கிப்போகவில்லையே. மெய்யாகவே அது ஆச்சரியமான அனுபவம்தான்.

**"என் மலைகளையெல்லாம் வழிகளாக்குவேன்;**
**என் பாதைகள் உயர்த்தப்படும்"**
**(ஏசா.49:11)**

ஆம், ஆண்டவர் மலைகளை அகற்றுவேன் என்று கூறி விடவில்லை. அகற்றிவிட அவராலே கூடாதா? கூடும். ஆனால் தடையாயிருக்கிற மலைகளையே வழிகளாக்குவது இன்னும் மிகுந்த ஆச்சரியமல்லவா! நமக்கு வரும் தடைகளின்மேலேயே நம்மை நடத்தி, உன்னதத்திற்கு அழைத்துச் செல்லுகிறவர் நமது ஆண்டவர். அன்று யோர்தான் நதியைத் தவிர்த்து வேறு பாதையிலே தமது மக்களை கர்த்தர் நடத்திச் சென்றிருக்கலாம். அது அதிசயமா? அல்லது தடையாய் நின்ற நதிக்கூடாக நடத்திச் சென்று நமக்கெல்லாம் நம்பிக்கையூட்டியது, அது அதிசயமா? ஒரு மலையையே குடைந்து அதற்கூடாக வழியை ஏற்படுத்தும் நம் தேவனுடைய வல்லமையை நாம் குறைவாக எடைபோடலாமா?

பிள்ளைகளே! நமது விசுவாச வாழ்வையும், அர்ப்பணமுள்ள ஜெபங்களையும் அவித்துப்போடாதிருப்போமாக. தடைகளா? வியாதியா? மரணப்போராட்டங்களா? இதுவே தேவன் கிரியை செய்யும் தருணம் என்பதை விசுவாசியுங்கள். தேவசித்தம் நம்மில் வெளிப்பட நம்மை அர்ப்பணிக்கவேண்டும். அப்படி அர்ப்பணித்தபின் தேவனுக்கு நாமே ஆலோசனை கூறுவது எப்படி?

நாம் இப்போது ஜெபிப்போமா? **"பிதாவே, நீர் எனக்குள் வாசம் பண்ணுகிறவர் என்கிற விசுவாசத்தோடே என் கால்களை, இந்த வியாதி என்ற நதிக்குள்ளே வைக்கிறேன். உமது நாமத்தை மகிமைப் படுத்தும். இயேசுவின் நாமத்தில் ஆமென்"**

ஜெபித்துவிட்டீர்களா? உங்கள் கால்களைத் தைரியத்தோடு தூக்கி முன்னே வையுங்கள். அதாவது வியாதி வந்துவிட்டது என்று கலங்கிநிற்காமல், அடுத்தது என்ன செய்யவேண்டுமோ அதை நம்பிக்கை யோடே செய்யுங்கள். பொறுப்பெடுத்தவர் நடத்துவார். அப்போது "வார்த்தை"யாகிய ஒளி உங்களைச் சூழ்ந்துகொள்ளும்.

பிரியமானவர்களே, தடைகளை நீக்கிவிடவும் தேவனாலே கூடும், தடைகளுக்கூடாக நடத்தவும் அவராலே கூடும். தடைகளை மிதித்து அதன்மீதே உங்களை நடத்தவும் அவராலே கூடும். தைரியமாக எழுந்து நில்லுங்கள். இருள் சூழ்ந்தாலென்ன! இடி இடித்தாலென்ன! தேவன்

உங்களுக்கு நித்திய ஒளியாயிருப்பார். சரீர வேதனைமத்தியில் அவரை நம்புவது கடினம்தான். அதிலும் மரணத்திற்கேதுவான வியாதி என்று காணும்போது உள்ளத்தின் உணர்வுகளைக் கட்டுப்படுத்துவது மிகக் கடினமே. ஆனாலும் நீங்கள் ஜீவனுள்ள தேவனை நம்பி அவரையே பற்றிப் பிடிக்கவேண்டிய நேரம் இதுதான் என்பதை நான் நிச்சயமாகக் கூறுவேன். தேவன்தாமே இருளிலும் நமக்கு ஒளியாவார். ஆகவே நாம் தைரியமாக முன்னேறுவோமாக.

**கர்த்தர் நல்லவர்,**
**அவர் கிருபை என்றுமுள்ளது.**

**கர்த்தர் பெரியவர், அவர் உண்மை**
**தலைமுறைகளுக்குமுள்ளது.**

**கர்த்தர் வல்லவர், அவர் மகிமை**
**சதாகாலமுமுள்ளது.**

**கர்த்தர் உயர்ந்தவர், அவர் மாட்சிமை**
**சொல்லிமுடியாதது.**

**கர்த்தர் மாறாதவர், அவர் பிரசன்னம்**
**என்றும் நிலைத்து நிற்கும்.**

**ஆமென்.**

❖❖❖❖❖❖❖❖❖

அத்தியாயம் 2

# துயரத்திலும் துதியாவார்!

**"துன்ப துயரத்திலும் துக்க சமயத்திலும்**
**இன்பமுறும் பொழுதும் எல்லாம் உனக்கவரே"**

இப் பாடலை நமது சிறுவயது தொடங்கி எத்தனை தடவைகள் பாடியிருப்போம். இதன் ஆழமான அர்த்தத்தை உணர்ந்து, அதைக் குறித்து சிந்தித்திருக்கிறோமா?

**"...சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்கு சாம்பலுக்குப் பதிலாக சிங்காரத்தையும், துயரத்திற்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாக துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார்" (ஏசா.61:3)**

என் வியாதியின் நாட்களில் இந்த வசனம் என்றுமில்லாதவாறு மிகுந்த அர்த்தம் பொதிந்ததாக எனக்குத் தெரிந்தது. நமது தேவன் இருளின் மத்தியிலும் ஒளிதருபவர் மாத்திரமல்ல, சகலத்தையுமே எதிர்மாறாக மாற்றிப்போடவும் அவராலே கூடும். துயரத்துக்குப் பதில் மகிழ்ச்சி; முறிந்துபோன ஆவிக்குப் பதில் துதியின் கீதம்; அதிலும் மேலாக துயரத்தின் மத்தியிலும், நொருங்குண்ட நிலைமையின் மத்தியிலும்கூட அவரையே துதிக்கும் துதியினால் நம்மை அவர் நிரப்புகிறாரெனில், அது அவராலே மாத்திரமே முடியும்.

யோர்தானின் உன்னத அனுபவத்தை சிந்தித்துக் கொண்டிருந்த நான் சமாதானத்துடன் படுத்திருந்தாலும், அடுத்தது என்ன? என்ற கேள்வி ஒன்று மனத்திரையில் தொங்கி நின்றதை மறுக்கவும்முடியாது. ஆழ்ந்த சிந்தனையில் கண்களை இறுக மூடிக்கொண்டேன். நினைவுகள் கடந்த நாட்களை நோக்கி சிறகடித்துப் பறந்தன.

ஓமன் பிரதேசத்திலே கிறிஸ்தவர்கள் ஆராதனைக்காகக் கூடுகின்ற மண்டபம் அன்று நிறைந்து வழிந்தது. டாக்டர் ஜான் பால் என்ற தேவஊழியர் தேவனுடைய வார்த்தைகளை வல்லமையோடு முழங்கிக்கொண்டிருந்தார். நானோ அங்கே அமர்ந்திருந்தவர்களின் முகங்களை உற்றுக் கவனித்தேன். அப்பப்பா! எத்தனை விதவிதமான முகஜாடைகள்! அவற்றுள் ஒரு முகம் என்னைக் கவர்ந்தது! அந்த முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தேன். அறியாத ஏதோவொன்றை அறிந்துகொள்ளும் ஆர்வத்துடன், ஆனால் எந்தவித சலனத்தையும் வெளிக்காட்டாமல் செய்திக்குச் செவிகொடுத்துக்கொண்டிருந்தது அந்த

முகம். துதி என்பது என்ன? ஏன்? எப்படி? எதற்காக? இப்படியே பிரசங்கம் தொடர்ந்தது. சற்று நேரத்தின் பின்னர் எதனையோ உணர்ந்து விட்டதொரு திருப்தி அந்த முகத்தில் தென்பட்டது.

**"சாதகமான சூழ்நிலைகளில் தேவனை விசுவாசிப்பது இலகு, ஆனால் பாதகமான சூழ்நிலையிலும் நீ அவரை தொடர்ந்தும் விசுவாசிப்பாயா?"**

**"மகிழ்ச்சியான வேளைகளில் தேவனைத் துதிப்பது இலகு, ஆனால் துன்ப துயரத்திலும் நீ அவரை தொடர்ந்தும் துதிப்பாயா?"**

சவாலாக எழுந்த இக் கேள்விகளைக் கேட்ட மாத்திரத்தில் தன் குறிப்புப் புத்தகத்தை எடுத்து அவள் எதையோ எழுதினாள். "துதி என்பது மந்திரமுமல்ல, நுனி நாவிலே எழும்பும் வெறும் வார்த்தையுமல்ல. அது தேவனுடைய மகிமையை, அவரது குணநலன்களை எடுத்துரைத்து அவரை மேன்மைப் படுத்துவதாகும். இப்படியிருக்க துன்புறும்வேளையில் துதி பாட வார்த்தை வருமா? துதித்தால் துயர் நீங்கும் என்ற தவறான போதனைகளினாலே தடுமாறவேண்டாம். அப்படியானால் எப்படித் துதிப்பது? நம்மை வாட்டும் வேதனையையே சிந்திப்பதை சற்று நிறுத்திவிட்டு, நாம் நடந்து வந்த வனாந்தர பாதையைச் சற்று பின்நோக்கிப் பார்ப்போம். பாவத்திலிருந்து அவர் நம்மைத் தூக்கியெடுத்த நாளையும், பாதகமான சூழ்நிலைகளில் நம்மைத் தாங்கியதையும் நினைத்துப் பார்ப்போம். அப்போது எந்தவித புறத்தூண்டுதலுமின்றி துதி தானாகவே நமது உள்ளத்திலிருந்து எழும்பும். இப்போது ஏற்பட்டிருக்கும் வியாதியோ வேறுவித சூழ்நிலைகளோ இன்னுமொரு தடவையும் ஏற்படும் என்பதற்கு என்ன நிச்சயம். ஆகவே கிடைத்துவிட்ட இத் தருணத்திலும் உன்னால் துதிக்க முடியும் என்பதை நீ ஏன் சோதித்துப் பார்க்கக்கூடாது? *கர்த்தரை நான்* ***எக்காலத்திலும்*** *ஸ்தோத்தரிப்பேன். அவர் துதி* ***எப்போதும்*** *என் வாயில் இருக்கும். ...என்னுடைய* ***எல்லாப் பயத்துக்கும்*** *என்னை நீங்கலாக்கிவிட்டார்*' (சங்கீதம் 34:1-4) பிரசங்கம் தொடர்ந்தது.

இப் பிரசங்க வார்த்தைகளைக் கேட்டதும், அது சரிதான் என்பதுபோல் தலையசைத்தாள் அவள். **எக்காலமும், எப்போதும், எல்லாப் பயத்துக்கும்** என்ற வார்த்தைகளைக் கேட்டதும் அவளது முகத்திலே ஒரு உற்சாகம் பிறந்ததைக் கவனித்தேன். அந்த முகத்தை உற்று நோக்கினேன். அது வேறுயாருடையதுமல்ல, என்னுடைய இந்த முகமேதான். திடுக்கிட்டுக் கண்விழித்தேன். இது கனவுமல்ல, கற்பனையுமல்ல, ஏற்கனவே நடந்த இந்த சம்பவத்தை தூக்கமற்ற என் கண்கள் அசைபோட்டுக் கொண்டிருந்தன. வியாதிப்பட்டிருந்த எனக்கு மெய்யாகவே இது ஒரு சவாலாகவே அமைந்தது.

## எல்லாப் புத்திக்கும் மேலான....

இவ்விடத்தில் சற்று நிறுத்திவிட்டு, சில ஆண்டுகள் பின்னோக்கி உங்களை அழைத்துச்செல்ல விரும்புகிறேன். இங்கிலாந்தின் அப்போஸ்தலன் என்று அழைக்கப்பட்டவரும், மெதடிஸ் சபைக்கு அஸ்திபார மிட்டவருமாகிய ஜான் வெஸ்லி ஐயர் அவர்களின் அனுபவம் ஒன்றை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். பக்திமிகுந்த கிறிஸ்தவ குடும்பத்திலே பிறந்து வளர்ந்த இவர், போதகராகப் பணிபுரிந்த காலம் அது. ஆண்டவர் பணியிலே தீராத வாஞ்சைகொண்ட இவர் அமெரிக் காவிலே ஜார்ஜியா என்னுமிடத்தில் மிஷனரி ஊழியம் செய்யவென்று 1735ம் ஆண்டு அக்டோபர் மாதம் 18ம் நாளன்று கப்பல் ஏறினார். அக் கப்பலிலே மொரேவியரான சிலரும் தங்கள் மனைவி மக்களோடும் பயணம் செய்தனர்.

எதிர்பாராதவிதமாக கடலிலே பயங்கரமான புயல் வீச ஆரம்பித்தது. கொந்தளிக்கும் கடலிலே கப்பல் சிக்கித் தவித்தது. ஜான் வெஸ்லி ஐயர் அவர்கள் மனக்குழப்பத்தினாலும் மரணபயத்தினாலும் கலங்கிநின்றார். கப்பலிலிருந்த யாவரும் கூடி ஜெபித்தனர். சீறிக்கொண்டிருந்த புயல் காற்றில் கப்பலின் பாய் கிழிந்து, கப்பல் உடைந்துவிடக்கூடிய அபாயமும் ஏற்பட்டது. அப் புயலின் கோரத்திற்கு இரும்புபோல திடமனமுள்ளவரும் அச்சம்கொள்ளாமல் இருக்கமுடியாது. மரண ஆபத்து நெருங்கியதால் எல்லோரும் கதறிக்கொண்டிருந்த அந்த சமயத்திலும், அந்த மொரேவியரோ முழு அமைதியுடன் தொடர்ந்து பாடிக் கொண்டிருந்தனராம். அந்த மக்களுக்குள் இருந்த அமைதலான விசுவாசத்தையும், கலக்கமற்ற சமாதானத்தையும் கண்ட வெஸ்லி ஐயர் ஆச்சரியமடைந்தாராம்.

இதைக் குறித்து அவர் எழுதியதாவது: **"எல்லாப் புத்திக்கும் மேலான சமாதானத்தைப்பற்றி இதுவரை முற்றிலும் அறியாத அந்நியனாக அன்றுவரையிலும் இருந்துவிட்டதை அந்த சமயத்திலேதானே நான் உணர்ந்துகொண்டேன்"** என்பதாகும். வெஸ்லி ஐயர் விழித்துக்கொண்டார். புயல் அடங்கிய பின்னர் வெஸ்லி ஐயர் ஒரு மொரேவியரை அணுகி, "நீங்கள் கொஞ்சமேனும் பயப்படவில்லையா?" என்று கேட்டாராம். அதற்கு அந்த மனிதர், "நாங்கள் பயப்படவில்லை. அதற்காக நாங்கள் தேவனைத் துதிக்கிறோம்." என்றாராம். ஐயரோ விடவில்லை. "உங்கள் பெண்கள் பிள்ளைகள்கூட பயப்படவில்லையா?" என்று தொடர, அந்த மொரேவியரோ "ஆம், அவர்களும் பயப்படவில்லை. ஏனெனில் அவர்களுக்கு மரணபயம் இல்லை" என்றாராம். இச்சம்பவம் வெஸ்லி ஐயரின் வாழ்வின் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அந்த மக்களிடம் இருந்த ஏதோவொன்று தன்னிடம் இல்லாததை அவர் அன்று உணர்ந்தார். (சகோ. யோசுவா

தானியேல் அவர்களால் தொகுத்தளிக்கப்பட்ட வெஸ்லி ஐயரின் வாழ்க்கை சரிதை அடங்கிய நூலிலிருந்து எடுக்கப்பட்டது.)

மரணம் நெருங்கிய வேளையிலும் அந்த மொரேவியர்களைப் பாடவைத்தது எது? தேவனைத் துதிக்கும்படிக்கு அவர்களைத் தூண்டியது எது? துதித்துப் பாடினால் குதிக்கும் கடலும் அடங்கிவிடும் என்று நினைத்தா துதித்தார்கள். இல்லை. துதி என்பது என்னவென்று அவர்கள் அறிந்திருந்தார்கள். அவர்களுக்குள் இருந்த **எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம்**, அதுவே அவர்களைத் துதிக்க வைத்தது. இந்த காற்றுக்கும் கடலுக்கும் அதிபதியானவர் நம் தேவன் என்று எண்ணினால் நாம் துதிக்காமல் இருக்கமுடியுமா? மரணத்தினதும் பாதாளத்தினதும் திறவுகோல் நம் ஆண்டவர் கையிலுள்ளது என்பதை நினைத்தால் நாம் துதிக்காமல் இருக்கமுடியுமா? நித்திய ஆக்கினைக்கென்று நியமிக்கப்பட்ட நம்மை அவர் மீட்டிருக்க, இந்த நிலையற்ற வாழ்வின் நிந்தனையென்ன! வேதனையென்ன! வியாதியென்ன! வியாகுலமென்ன! நம்மை எதுவும் அசைக்க முடியாது என்பதை நாம் நினைப்பதில்லை.

துன்பத்திலும் துதிபாட நமக்கு விசுவாசம் தேவை. தேவனை முற்றுமாக நம்பவேண்டும். அவரது வல்லமையைச் சந்தேகமின்றி விசுவாசிக்கவேண்டும்.

*"இராக்காலங்களில் கர்த்தருடைய ஆலயங்களில் நிற்பதுவும், துக்கத்தில் தேவனுக்கு வணக்கம் செலுத்துவதும் கடினமானதே. ஆனால் அதிலேதான் ஆசீர்வாதமும் இருக்கிறது. அதுவேதான் பூரணவிசுவாசத்தின் பரீட்சையுமாகும். எனக்கு நல்ல காலம் இருக்கையில், நான் கெம்பீர கீதம் பாடுகையில், வாழ்க்கை பயனுள்ளதாக இருக்கையில் கடவுளை வணங்குவது எளிதா யிருக்கிறது. வாழ்க்கை பயனற்றதாகி பாடல்கள் ஓயும்போது, என் இதயம் எனக்குள் பாடுமா? இராக்காலங்களில் நான் கர்த்தருடைய வீட்டில் நிற்பேனா? அவருடைய இரவில் அவரை நேசிப்பேனா? அவருடன் கெத்சமெனேயில் ஒரு மணிநேரமாவது விழித்திருக்கக்கூடுமா? அவரது துக்க பாதையில் சிலுவையைச் சுமக்க நான் உதவிபுரிவேனா? அவரது மரணவேளையில் மரியாளோடும் மற்ற சீஷரோடும் நிற்பேனா? நிக்கோதேமுபோல மரித்த கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வேனா? அப்போது என் வணக்கமும் துதியும் பூரணமானவைகளே. அவருடைய தாழ்மையில் என்னுடைய அன்பு சேர்ந்தது. அவருடைய தாழ்வில் என் விசுவாசம் அவரைக் கண்டது. அந்த விசுவாசம் எந்த சூழ்நிலையிலும் அவரை நம்பும். அவரையே சார்ந்திருக்கும். நான் அவருடைய ஈவுகளையல்ல, அவரையே விரும்புகிறேன். நான் அவரை, அவருக்காகவே ஏற்றுக் கொண்டுள்ளேன்."*

*- ஜார்ஜ் மக்தீசன்*

ஆம், துதி என்பது மந்திரமுமல்ல, சூழ்நிலைகளை முறியடிக்கும் ஒருவித தந்திரமுமல்ல. அப்படியானால் அந்த மொரேவியர்கள் செய்தது என்ன? சீறிப்பாயும் புயலுக்கும், வானுயர எழும்பிய கடலலைகளுக்கும் பயப்படாமல் அவற்றை ஆளுகைசெய்யும் அதிபதியை நோக்கிப் பார்த்தார்கள். உடைந்துகொண்டிருந்த கப்பலை தலைகுனிந்து நோக்காமல், உன்னதமானவரின் சிறகுகளை தலைநிமிர்ந்து பார்த்தார்கள். அநித்தியமான இந்த அற்ப வாழ்வை விடுத்து, நித்திய வாழ்வைத் தேடினார்கள். இதுதான் அவர்களது துதிகீதத்தின் இரகசியம். இதுவே இரட்சிப்பின் இரகசியம். அவர்களுக்குள் இருந்த புத்திக்கெட்டாத சமாதானத்தின் இரகசியமும் இதுவே. இதன் பின்னர் வெஸ்லி ஐயரின் அனுபவத்தைப் படித்தால், “ஆவியானவர் தமது பூரணமான கிரியையை வெஸ்லி ஐயரின் உள்ளத்தில் செய்துமுடித்தார். கிருபையானது அவரது ஆத்துமாவிற்குள் பாய்ந்தோடியது. விசுவாசம் - ஜீவனுள்ள விசுவாசம் அந்த நருங்குண்ட நொறுங்குண்ட இதயத்துள் பிரவாகித்தது. பயம் அவிசுவாசம் ஆகிய கட்டுக்கள் முறிந்து விழுந்தன. மிகுந்த தூய்மையும் அனலுமுடைய தேவஅன்பு அவரது இருதயத்தினுள் பாய்ந்தது” என்று வாசிக்கிறோம்.

பவுலையும் சீலாவையும் இடைமறித்த ஆவியானவர், அவர்களைப் பிலிப்பு பட்டணத்திற்கு அனுப்பினார். ஆவியானவர் அனுப்பியதற்காக அவர்களுக்கு மாலையும் வரவேற்புமா கிடைத்தது. பதிலுக்கு தொழுமரமும் சிறைவாசமுமே கிடைத்தது. அதற்காக தேவனை சபித்தார்களா? இல்லை. துதித்தார்கள். பாடினார்கள். ஏன் அவர்கள் துதிக்கவேண்டும்? கிடைத்த சிறைவாசத்திற்காகவா? அல்லது விழுந்த அடிகளுக்காகவா? இல்லை. இந்த சிறையிலும் தேவபிரசன்னம் அவர்களுடன் இருந்தது. அதன் எதிரொலி அவர்களது இதயத்திலிருந்து பாடலாக வெளிவந்தது. அந்தத் துதியானது கால்பூட்டுக்களை சாட்சியின் திறவுகோல்களாக மாற்றி, சிறைச்சாலைக் காரனைப் பூட்டியிருந்த பாவப்பூட்டுக்களைத் திறந்துவிட்டது.

## நானும் என் தேவனைத் துதித்தேன்:

தூசியாகிய என் வாழ்வின் துயர வேளையிலும், வியாதியின் மத்தியிலும் என் தேவன் என் நாவிலும் துதியின் கீதத்தைக் கிருபையாக ஈந்தார். நான் அடிக்கடி சிந்திக்கும் ஒரு விஷயம் என்னவெனில், கர்த்தர் கிருபையாக என்னை மீட்டெடுப்பதற்கு முன்னர் இந்த வியாதியின் பிடிக்குள் அகப்பட்டிருந்தால், வேதனையினிமித்தம் தேவனை தூஷித்தே மாண்டிருப்பேன். இப்போது என் மீட்பரே எனக்கு எல்லாமாகிவிட்டதனால்,

“எக்காலத்திலும், எந்நேரத்திலும் கர்த்தரைத் துதிப்பேன்” என்ற வார்த்தையின் அர்த்தத்தையும் புரிந்துகொண்டேன். பலவித இடர்களையும் மரண பயமுறுத்தல்களையும் சந்தித்த தாவீதினால் எப்படித் தேவனைத் துதிக்க முடிந்தது என்பதையும் தெரிந்துகொண்டேன்.

சோர்வுற்ற என் இதயத்தை ஏதோவொன்று அசைத்தது. இரண்டு ஆண்டுகளின் முன்னே நான் மீட்கப்பட்டதையும், இதுவரையிலும் என்னைவிட்டகலாத கரங்களையும் நினைத்துக்கொண்டேன். எப்படி துதிக்காமல் இருப்பது? மருத்துவமனையை மறந்தேன். வியாதியின் கொடுமையை மறந்தேன். என் அசைக்க முடியாத கால்கள், தொழுமரத்தில் மாட்டப்பட்ட பவுலினதும் சீலாவினதும் கால்களை நினைவுபடுத்தின. அவர்களுடன் சேர்ந்து நானும் பாடினேன்.

*“தினம் தினம் உம்மருளால் தீமைகள் வெல்லுவேனே,*
*கனம் மகிமை யாவும் உமக்கே செலுத்துவேனே*
*உம்மாலே ஒருவனாக சேனைக்குள் பாய்ந்திடுவேன்.*
*வாழ்நாளெல்லாம் நீர் என் தஞ்சம் வழிநடத்தும் இயேசையாவே”*

உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக’ என்று இயேசு கூறினார். அதற்காக கலக்கம் வரும்போது எப்படி...எப்படி கலங்காமல் இருப்பது! கலங்குவது தவறு அல்ல. கலக்கத்தின் மத்தியிலும் தேவனே ஆளுகை செய்பவர் என்பதை மறப்பதுதான் தவறு. மகிழ்ச்சியான வேளையில் கர்த்தரைத் தேடுவதும், துன்பவேளையில் அவரைத் துதிப்பதும், எந்நேரமும் நேசரீன் மார்பிலே சார்ந்திருப்பதும் அற்புதமான அனுபவங்களாகும். நான் வியாதிப்பட்டிருந்த நாட்களில் நான் கற்றுக்கொண்ட சில உன்னத அனுபவங்களை, வியாதிப்படும் வேளைகள் வரும்போது பிரயோஜனம் உண்டாகவும், இப்போது வியாதிப்பட்டிருப்பவர்களுக்கு ஆறுதல் தரவும், தேவ நாமம் மகிமைப்படவும் உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

## 1. *பெருகும் விசுவாசம்:*

*“நமக்கு விசுவாசம் உண்டோ என்பதை நம்முடைய சோதனைக் காலத்தில்தான் நாம் அறியக்கூடும்”* - சி.எஸ். ஸ்பர்ஜன்

ஒரு தடவை என் நண்பி என்னிடம் ஒரு கேள்வி கேட்டாள். “விசுவாசம் என்றால் என்ன?’ திடீரென எழுந்த கேள்வியால் நான் சற்று தடுமாறிவிட்டேன். அவளோ தொடர்ந்தாள். “கர்த்தருடைய வார்த்தையை அப்படியே நம்புவதே விசுவாசம்” என்றாள். கேள்வியும் பதிலும் எத்தனை எளிமையானவை! “*அவனுடைய இக்கட்டிலே நான் அவனோடே இருப்பேன்.*” இது வாக்குத்தத்தம். இதனை அப்படியே நம்பவேண்டுமானால்,

‘‘ஏன் இந்த இக்கட்டு? ஏன் இந்த வியாதி?’’ என்ற கேள்விகளுக்கு இடமேது? ஆபத்திற்குத் தப்புவிப்பது ஒன்று, ஆபத்தின் மத்தியிலும் காத்து இரட்சிப்பது இன்னொன்று. தேவகரம் நம்முடன் இருப்பதை விசுவாசித்தால், வியாதியின் மத்தியில் ஏக்கம் ஏற்படுமா? அல்லது எதிர்பார்ப்புடன்கூடிய மகிழ்ச்சி ஏற்படுமா?

*‘‘தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு அரிய பாடங்களைக் கற்பிக்கவே துன்பங்களைப் பயன்படுத்துகிறார். நாம் பயிற்சி பெறவே துன்பங்கள் வருகின்றன. அவற்றின் வேலை முற்றுப் பெற்றபின், அவற்றின்மூலம் மகிமையான பிரதிபலன் வரும். அவற்றில் இனிமையான களிப்பும் மேன்மையும் விளங்கும். அவற்றை அவர் இக்கட்டுகள் என்று எண்ணுவதில்லை. உபயோகிக்கக்கூடிய நற்சமயங்கள் என்றே எண்ணுகிறார்.’’*

**~ சார்ல்ஸ் இ. கௌமென் அம்மையார்.**

விசுவாசவீரர் ஆகவேண்டும் என்ற வாஞ்சை இருக்குமானால், அதற்கான அரிய சந்தர்ப்பங்கள் கிடைக்கும்போது ஏன் தடுமாறவேண்டும்! லாசரு மரித்து அடக்கம்பண்ணப்பட்டது தெரிந்தும், ‘‘நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்’’ என்று சொன்னார் ஆண்டவர். தேவனுடைய வார்த்தையையும் வாக்குத்தத்தங்களையும் விசுவாசிப்பது என்பது ஒரு நொடிப்பொழுதில் நிகழ்வதல்ல. அனுதினமும் படிப்படியாக அது வளரவேண்டும். செங்கடலின் முன்னே தத்தளித்த தமது ஜனத்தைக் கண்ட தேவன்தாமே இரவுமுழுவதும் வேலைசெய்து, அவர்களை வெட்டாந் தரையிலே நடக்கச்செய்தார். அவர்களும் தேவனுடைய கரத்தின் கிரியையை அனுபவித்துத் துதித்தார்கள். ஆனால் யோர்தான் நதியண்டையிலே வந்தபோது, தேவன், தமது பிள்ளைகளையே வேலைசெய்யப் பழக்குவித்தார். அதன்படி அவர்கள் கால்களே தண்ணீரில்படவேண்டும் என எதிர்பார்த்தார். இப்போது அவர்களும் வார்த்தையை நம்பி, கீழ்ப்படிந்து, தேவ வல்லமையை அனுபவித்தார்கள். இவ்விரு சந்தர்ப்பங்களுக்கும் இடையே எத்தனைவிதமான பாடுகளின் பாதைகளிலே தேவன் அவர்களை நடத்தியிருந்தார். அப்படியே, தமக்குள் வளர்ந்திருந்த விசுவாசத்தைப் பரீட்சை பார்ப்பதற்கு, தடையாகத் தெரிந்த யோர்தானின் சம்பவமே அவர்களுக்கு உதவியது. அவர்களும் தமது கால்களை விசுவாசத்துடன் எடுத்துவைத்தார்கள். பின்னர் எரிகோவின் மதிலை அணுகியபோது இன்னும் வித்தியாசமான பாடத்தைத் தேவன் கற்றுக்கொடுத்தார்.

குழந்தைகளாக இருந்தபோது தாமே முன்னின்று நடத்தியவர், விசுவாசத்தில் வளரும்போது தாமும் நின்று அவர்களைக்கொண்டு வேலை செய்வித்தவர், பின்னர் மேலான பரீட்சைக்குட்படுத்துகிறார். ‘‘எரிகோவையும் அதன் ராஜாவையும் ஒப்புக்கொடுத்தேன்’’ என்று கர்த்தர் கூறியபோது,

யோசுவா, கண்களை ஏறிட்டு நோக்குகிறான். வானளாவிய எரிகோ மதில்கள் அப்படியே நிற்க, கர்த்தரோ, **"ஒப்புக்கொடுத்தேன்"** என்றார். யோசுவாவின் விசுவாசக் கண்கள் திறந்தன. அப்போது தேவன் தமது திட்டத்தை விளக்குகிறார். ஆயுதங்கள், போர் தந்திரங்கள் எதுவுமில்லை. எக்காளம் கேட்கும்போது ஜனங்கள் ஆர்ப்பரிக்கவேண்டும், அவ்வளவுதான். சிவந்த சமுத்திரத்தண்டை முறுமுறுத்தவர்கள், யோர்தான் நதியோரம் தயங்கியவர்கள், இப்போது எரிகோ கைப்பற்றப்பட்டதை விசுவாசித்து ஆர்ப்பரித்தார்கள்; எரிகோ அவர்களது கைகளில் விழுந்தது.

இவ்விடத்தில் நாம் ஒன்றைக் கவனிக்கவேண்டும். எரிகோ மதில்கள் விழுந்தது அற்புதம்தான், ஆனால் அதிலும் மேலாக தேவன் தம்முடன் இருப்பதை விசுவாசித்த ஜனங்கள், யோசுவா கூறியது, தேவனுடைய வார்த்தைதான் என்பதை நம்பினதால் எந்தவித கேள்வியும் எழுப்பவில்லை. இது விசுவாசத்தின் உச்சக்கட்டம் எனலாம். ஆர்ப்பரிப்பின் சத்தத்திற்குப் பயந்து அந்த மதில் இடிந்து விழுந்ததா? இல்லை, தேவன் தம்மை நம்பிய மக்களுக்காக தமது கரத்தை உயர்த்தினார். கானானில் அவர்களைச் சேர்ப்பதாக சொன்ன கர்த்தர், இத்தனை பாடுகளுக்கூடாக அவர்களை நடத்தியது ஏன்? தான் அவர்களுடன் இருப்பதை நம்பி, தன்னை மாத்திரமே அவர்கள் சார்ந்திருக்க, தேவன் அவர்களைப் பயிற்றுவித்தார். எந்த சூழ்நிலையிலும் தேவன் நம்மோடிருக்கிறார் என்ற அசைக்கமுடியாத விசுவாசம் நமக்குள் இருக்குமானால் அதுவே வாழ்க்கையின் வெற்றி என்று நான் கருதுகிறேன்.

வியாதி, என்ற வேதனையான சமயங்கள், நாம் நம்முடைய விசுவாசத்தில் வளரக்கூடிய நற்சமயங்களாகும். என் விஷயத்தில் அற்புத சுகம் கிடைக்கவில்லை. நொடிப்பொழுதில் வேதனை நீங்கவில்லை. ஆனால் ஆண்டவர் என்னைப் பரீட்சைக்கு அனுமதித்து நன்கு பயிற்றுவித்தார். என் தேவன் என்னோடே இருக்கிறார் என்ற விசுவாசம் என்னை நிறைத்திருந்தது. வியாதி என்ற தடையாகிய மதிலை துதியின் மத்தியிலே, தேவன் நிர்மூலமாக்குவார். "எரிகோ மதில்கள் முன்னே நின்றாலும் இயேசு எந்தன் முன்னே செல்கிறார்." இந்த விசுவாசம் நமக்கு வேண்டும்.

## உ. காத்திருத்தலின் கருப்பொருள்:

கடின வேலையைவிட, காத்திருத்தல் அல்லது அமர்ந்திருத்தல் அதிக கடினமே! வெளிநாட்டில் என் வேலை இல்லாமல் போவதற்கு முன்பதாக வைத்தியத்தை முடித்துக் கொண்டு மீண்டும் ஓமன் நாட்டுக்குச் சென்றுவிடவேண்டும் என்று அவசரப்பட்டேன். ஆனாலும், என்னுள்ளத்தின் ஆழத்திலே 'அமர்ந்திரு' என்ற ஒரு சத்தம் ஒலித்துக்கொண்டேயிருந்தது.

'அமர்ந்திருத்தல்' அல்லது 'காத்திருத்தல்' என்பதுதான் என்ன? பேச்சின்றி செயலின்றி ஒரு மூலையில் முடங்கி இருப்பதா? அப்படியல்ல. நமது அனுதின ஜீவிய ஓட்டத்திலே ஓடிக்கொண்டே, தேவகரத்தில் ஒப்புவிக்கப்பட்ட குறிப்பிட்ட காரியத்திற்காக நம்பிக்கையோடே பார்த்திருக்க வேண்டும். ஆனால் நாமோ பதறிப் போய் காரியங்களைக் கெடுத்து விடுகிறோம். முழு உள்ளத்தோடு கர்த்தரை மாத்திரமே சார்ந்திருத்தலே காத்திருத்தலாகும். இதனையே, "உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு" (சங்.37:5) என்று தாவீதும், "உன் சுயபுத்தியின் மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கை யாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரையே நினைத்துக் கொள்" (நீதி.3:5,6) என்று சாலொமோனும் கூறிவைத்தார்கள். ஆம், இக் காத்திருத்தலை செயல்முறைப்படுத்துவதும் ஒரு அரிய பாடம்தான். காத்திருத்தலின் கருப்பொருள் என்ன தெரியுமா?

## *"பொறுமை - நீடியபொறுமை"*

நிர்மலமாய் ஓடுகின்ற நீரோடைபோன்ற வாழ்விலே பொறுமையைக் கற்றுக்கொள்வது கடினம். துன்பம் என்ற புயலில் அகப்படும்போதும், வியாதி என்ற கடலில் அமிழும்போதும் பொறுமை என்ற அரிய பொக்கிஷத்தை மெய்யாகவே கண்டுகொள்ளலாம். அதாவது, சீக்கிரமாக விடுவிக்கப்பட வேண்டும் என்று நாம் துடிதுடிக்கும் உச்சநேரமே, பொறுமை என்ற கனி நம்மில் தோற்றுவிக்கப்படக்கூடிய தகுந்த நேரமாகும்.

வியாதி குணமடைந்தாலும் இல்லாவிட்டாலும், நீண்டதொரு வைத்திய முறைமைக்குள் நான் உட்பட்டாகவேண்டும் என்ற செய்தியைக் கேள்விப்பட்டபோது, அவசரப்பட்ட என் தலையில் ஆயிரம் சம்மட்டிகள் ஒன்றாகத் தாக்கியதுபோலிருந்தது. பெருங்காற்றுக்கும், பூமி அதிர்ச்சிக்கும், அக்கினிக்கும் எலியா தடுமாறியிருந்தால், அவற்றின் பின்னால் வந்த மெல்லிய சத்தத்தைக் கேட்டிருப்பானா? பல பாடுகளுக்கூடாகக் கடந்துசென்ற கௌமென் அம்மையாரின் ஆக்கத்தில் என்னைக் கவர்ந்த சில வரிகள் இதோ:

"நம்பிக்கைக்காகக் காத்திருப்பதும், காரியம் கைகூடாததுபோல் காணப்படும்போது கைநெகிழவிடாதிருப்பதும், காரிருள் மூடியிருப்பினும் விண்மீன் தோன்றலாமென்று ஜன்னலைத் திறந்துவைப்பதும், என் இதயம் வெறுமையாயிருந்தும் தாழ்வானதொன்றும் அதை நிரப்ப விரும்பாதிருப்பதும் அதிக உன்னதமான பொறுமையே."

"துன்ப அனுபவத்தில் ஒரு தெய்வீக இரகசியம் உண்டு. அதிக பாடனுபவிக்காத எந்த ஆத்துமாவும் பரிசுத்தம் அடையவில்லை. பாடனுபவிக்கும் ஆத்துமா அதைப்

**பொருட்படுத்தாமல் அமர்ந்த, இனிய நிலையை அடையும்போது, தன் பாடுகளை எண்ணி, தனக்குள்ளேயே புன்னகை புரியும்போது, தன் பாடுகளை விலக்கும்படி தேவனிடம் வேண்டுதல்கூட செய்யாதிருக்கும்போது, அது தனது பாக்கிய ஊழியத்தை நிறைவேற்றி முடித்திருக்கும். அப்பொழுது பொறுமை பூரணமாய் கிரியை செய்கிறது. சிலுவை ஒரு கிரீடமாக மாறுகிறது."**

எவ்வளவு அர்த்தம் பொதிந்த வார்த்தைகள்! என் ஆவிக்குரிய வாழ்விலே மிகவும் குழந்தையாக இருந்த என்னை, குழந்தையைப்போலவே எல்லாவற்றுக்கும் அடம்பிடித்த என்னை, மருத்துவமனையின் கட்டிலிலே கிடத்தி, பொறுமை என்ற அரிய பொக்கிஷத்தையும், காத்திருக்குதலின் மேன்மையையும், தேவனுக்குள்ளே அமர்ந்திருக்கும் வளம் மிகுந்த பாடத்தையும் கற்றுத்தந்த தேவனை நான் எப்படித் துதிக்காமல் இருப்பது?

*சோதனைகள் பெருகினாலும் வியாதியுன்னை வருத்தினாலும்*
*பாதாளமே வாவென்றாலும் அமர்ந்திரு ஆத்துமாவே.*
*பாதாளத்தை ஜெயித்தவர் சாவின் கூரை ஒடித்தவர்*
*ஜெயமுனக்களிப்பவர் இருப்பதால் அமர்ந்திரு.*
*ஆழ்கடலில் அமிழ்ந்தாலும் அலையுன்மீது புரண்டாலும்*
*ஆயிரம்தான் சூழ்ந்தாலும் அமர்ந்திரு ஆத்துமாவே.*
*கடலுக்கும் அதிபதி கர்த்தர் இயேசு அறியாயோ,*
*கடந்து வா அலைமீதே குரல் கேட்டு எழுந்திடுவாய்.'*

### 3. நானே தகுதியானவன்:

தனது மூன்று மகன்களிடத்திலும் மிகுந்த பாசம்காட்டிய தொழிலதிபரான தந்தை, அவர்கள் வாலிபர்களானதும் தன்னை மாற்றிக் கொண்டார். அடிக்கடி கோபங்கொண்ட அவர் மிகுந்த கண்டிப்புடன், ஒரு ரூபாய் காசுக்கும் கணக்குக் கேட்க ஆரம்பித்தார். தந்தையின் மாற்றத்தினால் தடுமாறிய மூத்தவன், "இந்த வீட்டில் சுதந்தரமோ சந்தோஷமோ இல்லை" என்று வெறுப்படைந்தவனாக, தன் சொந்த வழியே போய்விட்டான். மற்றவனோ தாயாரிடம் முறுமுறுத்துக்கொண்டும், தன் தந்தையைக் குற்றப்படுத்திக் கொண்டும் நாட்களைக் கடத்தினான். ஆனால் கடைசி மகனோ, தனது தந்தை அநியாயமாக செயற்படுவதுபோலத் தெரிந்தும், அமைதியாகவும் அதேசமயம் நிதானமாகவும் இருந்தான்.

அச்சமயத்தில் நேர்மை நெறி தவறாத கணவனின் இந்த மாற்றம், எல்லாவற்றையும் கவனித்து தனக்குள் குழம்பித் தவித்த தாயின் பொறுமையைச் சோதித்தது. இறுதியிலே அவள் தன் கணவனிடம் கேட்டு விட்டாள். புன்னகைப் புரிந்த கணவனோ, மனைவியை அன்போடு அணைத்துக்கொண்டு, தனது மூன்றாவது மகனைக் காட்டி, "எனக்கு ஒரு

வாரிசு உருவாகிக் கொண்டிருக்கிறான்'' என்றார். ஒன்றும்புரியாத மனைவியோ விழித்தாள். ஆம், நான் மூன்று பையன்களையும் சோதித்துப் பார்த்தேன். என் தொழிலை பொறுப்பேற்று நடத்தக்கூடியவன் யார் என்ற தேர்வு நடத்தினேன். ''பரீட்சையிலே நமது மூன்றாவது மகன் தேறிவிட்டான்'' என்று பெருமையோடே கூறினார். ''இதற்காகவா நம் பிள்ளைகளை இப்படி வேதனைப்படுத்தினீர்கள்'' என்று வெளிப்படையான கோபத்துடன் கூறினாலும், தன் கணவனைக் குறித்தும், இளையமகனைக் குறித்தும் பெருமிதம் கொண்டாள் அந்தத் தாய்.

நாம் மேல்நிலைக்குத் தகுதியானவர்களா என்பதை ஒரு பரீட்சை மண்டபமே நிர்ணயிக்கிறது. ஆனால் பரீட்சை நமது திராணிக்குத்தக்கதாக இருந்தாலும், அதனைச் சந்திப்பதும், அதற்கூடாகக் கடந்துசெல்லுவதும் இலகுவல்ல. என்றாலும், நாம் கடந்துசெல்லும்வரை நமக்கு மேன்மையும் இல்லை. தன் வாலிப வயதிலேயே ராஜாவாக அபிஷேகம் பெற்றுவிட்ட தாவீது, உடனேயே சிங்காசனம் ஏறினானா? இல்லை. எத்தனை பரீட்சைகள், உபத்திரவங்கள், மரண ஆபத்துக்கள்! இத்தனை பயமுறுத்தல்கள் மத்தியிலும் அவன் தேவனை விட்டுவிடவில்லை. துன்பத்தின் மத்தியிலும் தேவனைப் பாடவும் மறக்கவில்லை. தேவைகள் மத்தியிலும் தேவனுக்குள் தன்னை திடப்படுத்தத் தவறவுமில்லை. அவனே ராஜாவாகுவதற்குத் தகுதியானவன் என்று தேவன் கண்டார். இத்தனை பாடுகள் மத்தியில் அவனை ஆயத்தப்படுத்தினார். அப்படியே நம் ஒவ்வொருவர் வாழ்விலும் தேவன் ஒவ்வொரு நோக்கம் வைத்திருந்தாலும், அதற்காக அவற்றை அப்படியே தூக்கி நம்மிடம் தருகிறவரல்ல. ஆபிரகாம், 'விசுவாசத் தந்தை' என்ற பெயரைப் பெற்றுக்கொள்வதற்கு மோரியா மலைவரைக்கும் போகவேண்டியிருந்தது.

தகுதிகாணும் பரீட்சைகள் ஒரே மாதிரியானவைகள் அல்ல, நமது தகுதிக்கு மேற்பட்டவையும் அல்ல. அத்துடன் இன்னுமொரு காரியமும் உண்டு. ''குறிப்பிட்ட ஒடுக்கமான பாதையில் நடக்கவும், அதன் மத்தியிலும் தேவனைத் துதிக்கவும் என்னையே தகுதியானவனாக என் தேவன் கண்டார். அல்லது, குறிப்பிட்ட கடின பாதையிலே, தேவநாமத்தில் ஜெயம் எடுப்பேன், என்று என் தேவன் என்னில் நம்பிக்கை கொண்டுள்ளார்.'' இப்படியாக நாம் எண்ணக்கூடுமானால் அது எத்தனை சந்தோஷத்தைத் தரும் என்பதை நீங்கள்தான் அனுபவத்தில் கண்டுகொள்ளவேண்டும்.

*''துன்பம் வரட்டும், நான் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவள். தரித்திரம் என் வாசலில் வரலாம், ஆனால் தேவன் என் வீட்டிற்குள் இருக்கிறார். வியாதி உள்ளே வரலாம், ஆனால் அதற்குரிய ஔஷதம் வைத்திருக்கிறேன். தேவன் என்னையே தெரிந்து கொண்டார், கண்ணீரின் பள்ளத்தாக்கிலே*

*என்ன நேரிட்டாலும் அவர் என்னைத் தெரிந்தெடுத்துள்ளார் என்பதை நான் அறிவேன்"* கௌமென் அம்மையாரின் இந்த வரிகள் சாதாரண மானவையல்ல. அனுபவத்திலே ருசிபார்க்கப்பட்டவைகள். இந்தப் பாத்திரம் நீங்கும்படி செய்யும் என்று ஜெபித்த ஆண்டவர், தாம் சுமக்க வேண்டிய பாத்திரத்தையோ, அதனைச் சுமப்பதற்கு தாம் ஒருவரே பாத்திரர் என்பதையோ மறந்துவிடவில்லை. எனவேதான், "ஆனாலும் என் சித்தமல்ல' என்று ஜெபித்துமுடித்தார்.

மரணத்திற்கேதுவான இந்த கிட்னி வியாதிக்கூடாகக் கடந்து செல்லவும், அதன் மத்தியிலும் தேவனை மகிமைப் படுத்தவும் இந்த ஏழையே தகுதியானவள் என்று ஆண்டவர் என்னைத் தெரிந்துகொண்டார் எனவும், வேறு ஏதோ ஒரு உயரிய காரியத்திற்குத் தகுதியானவள்தானா என்பதை உறுதிப்படுத்தவுமே தேவன் இதை அனுமதித்தார் எனவும் என் உள்ளுணர்வு உணர்த்தியது. முத்துக் குளிப்பவர்களைப் பார்த்திருக்கிறீர்களா? அவர்களது முதுகிலே பெரியதொரு பாரம் அவர்களுடன் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கும். அந்த பாரம் அவர்களை அமிழ்த்திக் கொன்று போடவல்ல. மாறாக, ஆழத்திலே தொடர்ந்து அமிழ்ந்திருக்க அது உதவுகிறது. இறுதியில் விலைமதிக்கமுடியாத முத்தைக் கண்டுபிடிக்கிறார்கள். இந்த முத்திற்கு முன்னே அந்தப் பாரம் அவனுக்கு ஒரு பொருட்டல்ல. பாரத்தைச் சுமக்க ஆயத்தம் இல்லாதவன் முத்துக் குளிக்கவோ, முத்துக்களைப் பெற்றுக் கொள்ளவோ தகுதியற்றவன். சகோதரனே, நோயின் பிடியில் சிக்கித் தவிக்கும் சகோதரியே, இந்த வேளையிலும் தேவனை மகிமைப்படுத்த நீயே தகுந்த பாத்திரம் என்று தேவன் காண்கிறார். இதற்குப் பின்னே நிச்சயமாக ஆண்டவருக்கு, உன்னில் ஒரு நோக்கம் இருக்காமல் போகாது.

பாத்திரமற்ற பாத்திரமாம் என்னை
பாத்திரனாக்கிட்ட பாத்திரனே,
பாடுகள் மத்தியில் பரன் உம்மைத் துதித்திட
பாட்டுகள் பாடுறேன் ஏற்றிடுமே.

## பு. பிறருக்கு ஆறுதலுண்டாகும்படிக்கு...

*"தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங் களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்."* (11கொரி.1:4) ஒரு ஆங்கிலப் புத்தகத்தில் வாசித்த குறிப்பு இது, "துக்கத்தில் வியாதியில் வேதனையில் துடிதுடிக்கும் ஒருவனுடைய மனஉணர்வைப் புரிந்துகொள்ள வேண்டுமானால், அவன் அணிந்திருக்கும் காலணிக்குள் நமது கால்களை

வைக்கவேண்டும்." அதாவது அவன் இருக்கும் சூழ்நிலையில் நம்மை நிறுத்திப் பார்க்கவேண்டும்.

இதிலே நிறுத்திப்பார்ப்பது ஒன்று, அதே அனுபவத்தினுடாகக் கடந்துசெல்லுவது இன்னுமொன்று. சூடுகண்டவனுக்குத்தான் நெருப்பின் அகோரம் தெரியும். அறிவு நல்லது, அனுபவமோ அதிலும் மேலானது. நான் வியாதிப்பட்டிருந்த நாட்களில் சரீர வேதனை, நோவு, நோயின் மத்தியில் ஏக்கம் போன்ற பல காரியங்களை அனுபவித்துக் கற்றுக் கொண்டேன். முன்னர் யாருக்காவது வியாதி என்று கேள்விப்படும்போது வெறும் அனுதாபமே உண்டாகும். இப்போது அனுதாபத்துடன் உள்ளத்தின் ஆழத்திலே ஒருவித பாரமும் உண்டாகும். விசேஷமாக கிட்னிவியாதி என்று கேள்விப்பட்டால், அதிக அழுத்தம் ஏற்படும். இப்போதெல்லாம் வியாதிப்பட்டவர்களுக்காக ஜெபிக்கவேண்டிய பாரத்தையும், அவர்கள் மத்தியில் செய்யப்படவேண்டிய ஆறுதலின் ஊழியத்தின் கட்டாயத்தையும் உணருகிறேன்.

ஆம், என் வியாதிப்படுக்கையினூடாக, வியாதிப்படுகிறவர் களுக்கும், மரண அவஸ்தைக்குள்ளாகிறவர்களுக்கும் ஆறுதல் தரக்கூடிய திராணியைத் தேவன்தாமே கிருபையாக ஈந்துள்ளார். நமது ஜெபவேளை களில், பிதாவே நான் ஜெபிக்கின்ற இந்தவேளையிலே மரண வேதனைக் குள்ளாகி யாராவது இருப்பார்களானால் இப்போதே அவர்களைச் சந்தியும்' என்று உருக்கமாக ஜெபிக்கக் கற்றுக்கொண்டால் எத்தனை நல்லது!

பிரியமானவர்களே, இது கடைசி நேரமானாலும் பரவாயில்லை. இந்த நேரத்திலாவது கர்த்தருக்காகச் செய்துவிட ஏதாவது இருக்கின்றதா என்று பாருங்கள். அது நிறைய மகிழ்ச்சியைக் கொடுக்கும். அப்போது, உங்கள் நோவின் மத்தியிலும் நாவு கருத்துடன் பாடும். *நான் உயிரோடிருக்கு மட்டும் என் கர்த்தரைப் பாடுவேன். நான் உள்ளளவும் என் தேவனைக் கீர்த்தனம் பண்ணுவேன்* (சங்.104:33). தேவபிள்ளையே, எந்த நிலைமையிலும் தேவனைத் துதிக்க தூயஆவியானவர்தாமே நமக்குக் கற்றுத்தருவாராக. நம் தேவனைத் துதிப்போம், நம் இரட்சகரைப் பாடுவோம், நம் பெலனாகிய தூயஆவியானவரைப் போற்றுவோம்.

❖❖❖❖❖❖❖❖

## அத்தியாயம் 5

# வனாந்தரத்திலும் வழியாவார்!

***"கர்த்தருடைய வழி சுழல்காற்றிலும் பெருங்காற்றிலும் இருக்கிறது; மேகங்கள் அவருடைய பாதத்தூளாயிருக்கிறது" (நாகூம் 1:3).***

கொந்தளிக்கும் உணர்வுகளுடன் போராடிக்கொண்டிருந்த என்னை கொழும்பு தேசியமருத்துவமனைக்கு மாற்றிவிட்டார்கள். என் கண்களையே என்னால் நம்பமுடியவில்லை. முன்னொரு காலம் இந்த மருத்துவமனைக்குள்ளேயே சுற்றிச்சுற்றி நடந்து, நோயாளிகளைப் பார்த்து, ஆறுதல்கூறிய நானே இப்பொழுது ஒரு நோயாளியாக அனுமதிக்கப்பட்டதை என்னால் ஜீரணிக்கமுடியவில்லை. ஒரு மருந்தாளராக ஆயிரமாயிரம் நோயாளிகளுக்கு மருந்து கொடுத்த நாட்களைத் திரும்பிப்பார்த்தேன். ஒரு உதவி வைத்தியராக மரண ஆபத்தில் இருந்த எத்தனையோ நோயாளிகளுக்கு வைத்திய உதவிபுரிந்து, சுகம்காணும் அவர்கள் சுகத்திலே மகிழ்ந்திருந்து, வைத்தியப்பணியில் மனநிறைவு பெற்றிருந்த நான் இப்போது மருத்துவமனைக் கட்டிலிலே படுத்திருப்பதை நம்பமுடியவில்லை. சுற்றுமுற்றும் கண்களைச் சுழற்றினேன். படுத்துறங்கியவரோ சிலர். இரவிலும் விழித்திருந்தவர்களோ பலர். இவர்களுக்கு மத்தியில் நான்தானா என்று என்னை நானே தட்டிப் பார்த்துக்கொண்டேன். வேதனையின் முனகல்களும், மரணஓலங்களும், புதிய நோயாளிகளின் கதறல்களும் என் தூக்கத்தைக் கலைத்தன.

இவையெதுவும் கனவல்ல, நிஜந்தான் என்றுணர்ந்த மறுகணமே புயலினால் தாக்குண்டவள்போல கட்டிலிலே தொப்பென்று விழுந்தேன். இதிலிருந்து தப்பமுடியாது என்பது மனதில் நிச்சயமானதும் என்னைச் சுற்றிலும் வெறுமை சூழ்ந்துகொண்டது. திரும்பும் திசையெல்லாம் எனக்கு வனாந்தரமாய் தெரிந்தது. தாபரிக்க இடமுமில்லை. தாகம் தீர்க்கத் தண்ணீரும் இல்லை. வழியும் தெரியவில்லை, வழிநடக்கத் துணையுமில்லை. தனித்துவிடப்பட்டுக் கதறினேன், சத்தமோ கேட்கவில்லை. வாழ்வே வனாந்தரமாகிவிட்ட தவிப்பினால், அழுதழுது ஓய்ந்துவிட்ட குழந்தையைப் போல சிறிதுநேரத்தில் அமைதியாகத் தூங்கிவிட்டேன்.

மறுநாளிலே 'டயாலிஸிஸ்' என்றழைக்கப்படும் இரத்தச் சுத்திகரிப்பு வைத்தியத்தை ஆரம்பித்தார்கள். இதற்காக முதலில் வலதுகாலிலே இரு குழாய்களைப் பொருத்திவிட்டனர். அதனை 'ஷன்ற்' என்றழைப்பர்.

வலிதாங்கமுடியவில்லை. அன்றுதான் முதலாவது 'டயாலிஸிஸ்'. அந்த வேதனையை எழுத்தில் வடிக்க வார்த்தையே இல்லை.

நாட்கள் நகர்ந்தன. வியாதியும் அதிக பலங்கொண்டது. அந்த நிலையிலும் அருகிலிருந்த நோயாளிகளுடன் பேச்சுக்கொடுத்தேன். ஆஸ்துமா வியாதியால் அவதிப்பட்ட ஒரு அம்மா, பேசுவதேயில்லை. மறுபுறத்தில் ஒரு கன்னியாஸ்திரி படுத்திருந்தார்கள். அவரும் ஒரு சிறுநீரக வியாதிஸ்தர் என்றும், சிறுநீரக மாற்று சிகிச்சைக்காகக் காத்திருக்கிறார் என்றும், அவருடன் இரட்டையாகப் பிறந்த மற்ற சகோதரியே தனது ஒரு சிறுநீரகத்தைத் தானம் செய்யப்போகிறார்கள் என்றும் அறிந்துகொண்டேன். இந்நாட்களில் இவையெல்லாம் மிக சாதாரணமான காரியமாகும். அந்நாட்களிலோ இவை ஆச்சரியமான காரியமாகும். இப்போது நோயாளியை மறந்துவிட்டு, அவரது சகோதரிமேலே கவனம் சென்றது. ஓ! மானிட சகோதரியே! உன் மாம்சீக சகோதரிக்காக உன் சொந்த உறுப்பையே நீ கொடுக்குமளவிற்கு இவ்வளவாய் நீ அவளை நேசித்தால், எனக்காக தன் ஜீவனையே கொடுத்துவிட்ட என் இயேசு எவ்வளவாய் என்னை நேசிக்கிறார் என்று நினைத்துக்கொண்டேன்.

நோயாளியான அந்த சகோதரியின் துக்கம் தோய்ந்த முகம் என் வேதனையை மறக்கச்செய்துவிட்டது. அவர் தன் வாழ்வையே கிறிஸ்துவுக்காய் முற்றும் அர்ப்பணித்திருந்தபோதும், வனாந்தரம் போலாகிவிட்ட அவரது நிலைமைக்கு ஆறுதல் கூற அதிகமாக உள்ளத்தில் ஏவப்பட்டேன். அந்த வார்டிலே அநேகருடைய வாழ்க்கை இப்படியே வனாந்தரமாகிவிட்டிருந்தது.

### அன்று ஞாயிற்றுக்கிழமை:

என் இரத்தத்திலே யூரியா 230 ஐயும் தாண்டிவிட்டிருந்தது. மனம் மிகவும் குழம்பிவிட்டிருந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை.

**"ஓ முன்னே பண்டிகையை ஆசரிக்கிற ஜனங்களோடேகூட நடந்து, கூட்டத்தில் களிப்பும் துதியுமான சத்தத்தோடே தேவாலயத்திற்குப் போய்வருவேனே; இவைகளை நான் நினைக்கும்போது என் உள்ளம் எனக்குள்ளே உருகுகிறது." (சங்.42:4)**

தாவீதின் அன்றைய ஏக்கம் அன்று என்னுடையதாயிற்று. என்றாலும் தம்மை நோக்கிக் கூப்பிடுகிறவர்களுக்கு தேவன் சமீபமாயிருக்கிறார். மிகுந்த சிரமத்தோடும், தைரியத்தோடும் கண்ணாடியை மாட்டிக்கொண்டு வேதாகமத்தைத் திறந்தேன். சிலநாட்களுக்கு முன் வாசித்துவிட்டு நிறுத்தியிருந்த பக்கத்தைத் திருப்பி, 'என்னோடே பேசும் கர்த்தாவே' என்ற ஜெபத்துடன் வாசிக்க ஆரம்பித்தேன்.

*“தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்களின் ஆத்துமாக்களை மரணத்திற்கு விலக்கி விடுவிக்கவும், பஞ்சத்தில் அவர்களை உயிரோடே காக்கவும், கர்த்தருடைய கண் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கிறது.”* (சங்.33:18,19)

என் உள்ளம் கொழுந்துவிட்டெரிய ஆரம்பித்தது. *‘‘ஆம் பிதாவே, என் ஆத்துமா உமக்கே காத்திருக்கிறது, நீரே எனக்குத் துணையும், எனக்குக் கேடகமுமானவர். நான் உமது பரிசுத்த நாமத்தை நம்பியிருப்பதால் என் இருதயம் உமக்குள் களிகூருகிறது.’’* என்று ஜெபித்துக்கொண்டேன். வழி தெரியாதிருந்த என் வனாந்தரப் பாதையில் ஒரு ஒளிக்கீறல் தெரிய ஆரம்பித்திருந்தது.

**“இருளில் அவரை நம்புங்கள்; நமக்கு விளங்காத விதமாய்க் காரியங்கள் நடந்தபோதிலும் உறுதியான விசுவாசத்தால் அவரைக் கனப்படுத்த வேண்டும். அப்படிப்பட்ட விசுவாசத்திற்கு வரும் பலன், கழுகுக்கு மறுபடியும் இளமையும் பலமும் உண்டாகும்வண்ணமாய் அதன் இறக்கைகள் புதிதாவது போலிருக்கும்.”** - இவை கௌமென் அம்மையாரின் அனுபவ வார்த்தைகள்.

மருத்துவ சிகிச்சை ஏனோ இடைநிறுத்தப்பட்டிருந்தது. அதனால் நான் தடுமாறிவிட்டாலும், சிறுநீரக மாற்று சிகிச்சைக்காக எங்கே போவது என்பதுவும் பெரிய கேள்விக்குறியாக இருந்தது. இந்தியாவின் சுவிசேஷ ஊழியர் ஒருவர் உதவிசெய்ய முன்வந்தார். ஓமன் நண்பர்கள் சிலரும் முன்வந்தனர். என் சகோதரர்களோ தாம் வசிக்கும் வெளிநாடுகளுக்கு வரும்படி கூறினர். சத்தியவசன நிலையத்தினரோ அடியேனுக்காக ஊக்கத் தோடும் பாரத்தோடும் ஜெபிக்க ஆரம்பித்தனர். சகோதரி வசந்தா சாமுவேல் அவர்கள் என்னுடன் கூடவே இந்தியாவிற்கு வருவதற்கு சம்மதித்தார். என் அருமை நண்பி ராஜி என்னைப் பராமரிப்பதற்காக தயா, கருணா என்ற இருவரை ஒழுங்கு செய்தாள். இத்தனை ஆயத்தங்கள் செய்தபோதும், வனாந்தரம் போலாகிவிட்ட என் நிலைமைக்கு சரியான வழி பிறந்ததாக எனக்குத் தெரியவில்லை. சகோதரியும் கணவரும் குழம்பி நின்றதைப் பார்த்தபோது நான் இன்னும் கலக்கமுற்றேன். செத்தாலும் ஏன் சிங்கப்பூரில் சாகக்கூடாது. சிங்கப்பூருக்கே போய்விடுவோம் என்று நினைத்துக் கொண்டேன். மொத்தத்தில் என் முன்னே பரந்து விரிந்திருந்த வனாந் தரத்தில் வழியும் இன்றி, இளைப்பாற இடமுமின்றி, தாகத்தால் நாவறண்டு, பேச மொழியும் இன்றி சிங்கப்பூர் செல்லலாம் என்று முடிவெடுத்தேன்.

ஒரு புழுவைப்போன்ற அடியேனை என் தேவன் வழிநடத்திய ஆச்சரியமான சாட்சியைத்தான் உங்களுடன் விரிவாகப் பகிர்ந்து கொள்கிறேன். இப்படியிருக்க, உங்களை கர்த்தர் கைவிட்டுவிடுவாரா?

**"என் நினைவுகள் உன் நினைவுகள் அல்ல; உன் வழிகள் என் வழிகளும் அல்ல"** என்று சொன்ன கர்த்தர், தம் வழியை நமக்கு மறைத்து விடவில்லை. **''கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் எவனோ அவனுக்குத் தாம் தெரிந்து கொள்ளும் வழியைப் போதிப்பார்.''** (சங். 25:12) பயணமுடிவுகளுடன் வந்திருந்த என் அக்காவின் கணவரை ஆவலுடன் ஏறிட்டுப் பார்த்தேன். அவரோ, நம் நாட்டிலேயே சிகிச்சை தொடரக்கூடிய வழி திறந்திருப்பதாயும், குறிப்பிட்ட மருத்துவ நிபுணர் என்னைப் பொறுப்பேற்க சம்மதித்துவிட்டதாகவும், இதற்காக தனியார் மருத்துவமனை ஒன்றில் தங்கியிருக்கவேண்டும் என்றும் சொன்னார்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. அந்நாட்களில் சட்டப்படிப்பைத் தொடர்ந்துகொண்டிருந்த என் அக்கா மகனின் பொறுப்பிலே, கொள்ளுப் பிட்டியிலுள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். களைத்து வெளுத்திருந்த என்னை மருத்துவமனை ஊழியர்கள் பத்திரமாக கட்டிலிலே படுக்க வைத்தனர். என் கண்கள் அங்குமிங்கும் சுழன்றன. சரியான இடத்திற்கு வழிநடத்தப்பட்டிருப்பதை என் உள்ளுணர்வு உணர்த்தியது. எந்த நாட்டிற்குச் சென்றாலும் கிடைக்காத சமாதானம் என்னை ஆட்கொண்டது. வனாந்தரமாகிவிட்டிருந்த என் வாழ்விலே நேர்த்தி யான வழி தோன்றிய நிச்சயத்துடன் கண்களை மூடினேன். என் இயேசுவின் கரம் என்னைப் பிடித்திருந்த உணர்வு எனக்குள் தோன்றியது, நானும் லாவகமாக அவர் மார்பில் சாய்ந்துவிட்டேன். அவர் தம் தோளில் வைத்து என்னைச் சுமக்கச் சித்தமாயிருந்தார்.

பிரியமான சகோதரனே! சகோதரியே! வியாதிப்பட்டு, அதிலும் மரணஆபத்தில் அகப்படும்போது வனாந்தர அனுபவம் உனக்கும் வரும். கலங்காதே. அந்த வனாந்தரத்திலும் உனக்கு தாமே வழியாக நின்று உன்னை செவ்வனே நடத்த இயேசு உனக்கிருக்கிறார். இப்போதே அவரிடம் உன்னை நம்பிக்கையோடு அர்ப்பணித்துவிடு.

## கர்த்தருடைய வழி

**"கர்த்தருடைய வழி சுழல்காற்றிலும் பெருங்காற்றிலும் இருக்கிறது."** (நாகூம் 1:3) தெளிவாயிருக்கும் வழிகளையும் சுழற்றி அழித்துவிடக்கூடிய சுழல்காற்றிலே நம் கர்த்தர் வழி வைத்திருக்கிறார் ஆம், அவர் கர்த்தர். **''என் மலைகளையெல்லாம் வழிகளாக்குவேன், என் பாதைகள் உயர்த்தப்படும்''** என்கிறார். (ஏசா.49:11) ஆம், நமது வாழ்க்கையில் மலைபோன்ற சோதனைகளோ மாறாத வியாதிகளோ எது குறுக்கிட்டாலும், அவற்றையே நமக்கு வெற்றியின் வழிகளாக மாற்றிவிட ஆண்டவர் வல்லவராயிருக்கிறார். 'பிதாவே, இந்த மலையை அகற்றிப்போடும்' என்று

நாம் ஜெபிக்கும்போது, தேவனுடைய வல்லமையைக் குறைப்பது போல் ஆகிவிடாதோ, மலையிலே வழிகளை உண்டாக்கும் தேவன், எதற்காக இந்த மலையை அனுமதித்தாரோ, அவர் சித்தம் வெளிப்பட நம்மை அப்படியே ஒப்புவித்தல் நன்று.

நீங்கள் மலை ஏறியிருக்கிறீர்களா? ஒன்று மலை மலையாகவே இருக்க நாமோ அதை சுற்றிச் சுற்றி ஏறிச்செல்லலாம். அப்படியே, சோதனை முன்னே வந்தாலும், அதன்மேல் நாம் ஏறிச் செல்லலாம். இளைத்தாலும் களைத்தாலும் உச்சிக்குப் போய்விட்டால் எத்தனை மகிழ்ச்சி! அடுத்தது, மலையடிவாரத்தைக் குடைந்தும் வழி உண்டாக்கலாம். அப்படியே சோதனையைப் பார்த்து நாம் திகைத்து நிற்கும்போது, கர்த்தர், அந்த சூழ்நிலையின் வழியாகவே நடத்துவார். அந்த வழி இருண்டதாயிருந் தாலும் கர்த்தர் நம்மோடு நடப்பதனால் நமக்குப் பயம் ஏது! மறுபக்கம் சென்றபின் திரும்பிப் பார்க்கும்போதுதான் கர்த்தர் செய்த பெரிய காரியத்தை அறியமுடியும். இன்னும் அதே மலையைப் பார்த்து, 'அப்பாலே போ' என்று தள்ளிவிடவும் கர்த்தராலே கூடும். அல்லது மலையையே இரண்டாகப் பிளந்துவிட்டு, 'நீ போ' என்று நம்மைப் பார்த்தும் கூறக்கூடும். தேவன் கிரியைசெய்யும்போது நாமும் விசுவாசத்தோடே நடப்போமானால் மலையென்ன, பர்வதமென்ன எதுவும் நம் ஓட்டத்தைத் தடுத்து நிறுத்தமுடியாது.

மலைகளை வழிகளாக்குகின்ற கர்த்தர் நாம் நடக்க வேண்டிய பாதையிலும் நம்மைக் கரம்பிடித்து நடத்துகிறார். ஆம், தேவபிள்ளைகள் நடக்கும் பாதை தேவனால் நிர்ணயிக்கப்பட்ட பாதை. அது சிலுவை சுமக்கும் பாதை, ஆனாலும் அது ஜெயமளிக்கும் பாதை. அது உயிர்த்தெழுந்த இயேசு நடந்த பாதை.

**"குருடரை அவர்கள் அறியாத வழியிலே நடத்தி, அவர்களுக்குத் தெரியாத பாதைகளில் அவர்களை அழைத்துக்கொண்டு வந்து, அவர்களுக்கு முன்பாக இருளை வெளிச்சமும், கோணலைச் செவ்வையுமாக்குவேன். இந்தக் காரியங்களை நான் அவர்களுக்குச் செய்து, அவர்களைக் கைவிடாதிருப்பேன்."** (ஏசா.42:16)

அருமையான வாக்குத்தத்தம்! அடுத்த வினாடி என்ன நடக்கும் என்று தெரியாத நாம் மெய்யாகவே குருடர்தான். நமக்கு முன்னே கோணலான யாவையும் செம்மையாக்கிவிட்டு, நீ போய் வா, என்று அனுப்பிவிடுகிறவர் அல்ல நம் தேவன். 'அவர்களைக் கைவிடாதிருப்பேன்' என்றாரே, அவரே கர்த்தர்.

வனாந்தரம்போலாகிவிட்ட என் வாழ்விலே, பெரிய பர்வதம்போன்ற வியாதி என்னைப் பயமுறுத்தியபோதும், என் தேவன் சகலத்தையும்

நேர்த்தியாக ஒழுங்குபடுத்தினார். ஒரு வழி திறந்ததை என்னால் உணரக் கூடியதாக இருந்தது. என் பெற்றோர் என்னோடு இல்லாவிட்டாலும், என் அன்புச் சகோதரி திருமதி ராணி மதியாபரணனும் அவரது கணவர் திரு.கு.சா. மதியாபரணன் அவர்களும் எனக்குத் தாயாகவும் தந்தையாகவும் இருந்து சகல பொறுப்புக்களையும் ஏற்க, சகோதரர்கள் தம் அன்பையும் ஆதரவையும் அள்ளி வழங்க, நட்புக்கே உதாரணமாக விளங்கிய அருமை நண்பர்கள் ஆறுதல் தர, என் தெய்வம் என்னை அந்த வியாதிக்கூடாகவே வழிநடத்த ஆரம்பித்தார். ஒரு குருடியைப்போல இருந்த நான், கண்கள் திறக்கப்பட்டவளாக, வனாந்தரமாயினும் வாடாத மலர்போல, இதுவரை அறிந்திராத புதிய பாதையிலே, என் தேவனோடு நடக்க ஆரம்பித்தேன்.

## மறு நாள்:

மறுநாள் மாலை, நேரம் ஆறு மணி இருக்கும். மூர்வீதி மெதடிஸ்த சபையைச் சேர்ந்த திரு. ஐயாத்துரை அவர்களும் (தற்போது துணைப் போதகராகக் கடமையாற்றுகிறார்.) அவரது மனைவியும் என்னைப் பார்க்க வந்தனர். அவர்கள் எனக்காக ஜெபித்துக்கொண்டிருந்தபோது அறைக்கதவு தட்டும் சத்தம் கேட்டது. என்றாலும் ஜெபத்தை நிறுத்தவில்லை. பின்னர் நிமிர்ந்து பார்த்தபோது, என்னை முதற்தடவையாக சோதித்துப் பார்க்க வந்த டாக்டர் ரெஷ்வி ஷெரிப் அவர்கள் கதவண்டையிலே காத்திருந்ததைக் கண்டேன். மெய்யாகவே என்னுள்ளம் நன்றியால் நிரம்பிற்று. ஜெபத்துடனும் ஓப்படைத்தலுடனும் வைத்தியம் ஆரம்பிக்க என் தேவன் கிருபை செய்திருந்தார். வனாந்தரத்திலும் வழி வகுத்ததுமன்றி, இந்த சம்பவத்தினாலே தாம் என்னோடுகூடவே வருவதை உறுதிசெய்து கொண்டதுபோலும் தெரிந்தது.

வியாதியால் நொந்துருகி, வனாந்தரமாகிவிட்ட வாழ்வில் வழி தெரியாமல் தடுமாறி நிற்கும் என் அருமை சகோதரனே, சகோதரியே, என் வாழ்வில் வழியாய் நின்றவர்தாமே உனக்கும் வழியாவார். உன் மலைகளையெல்லாம் வழிகளாக்கி உன் பாதையையும் உயர்த்த அவர் மாத்திரமே போதுமானவர். நீ பயப்படாதே!

என் சொந்த அனுபவத்தை இத்தனை விளக்கமாக ஏன் எழுதுகிறேன் என்று நீங்கள் நினைக்கலாம். இனிமேல் எனக்கு வியாதியோ வேதனையோ வரமாட்டாது என்பதல்ல. இன்று என்னைவிட அதிக பாடனுபவிக்கும் வியாதிஸ்தரோ, அல்லது இன்னும் ஆச்சரியமாக அற்புதமாக வழிநடத்தப்பட்டவர்களோ இருக்கலாம். ஆனால் அதுவல்ல காரியம்.வனாந்தரமாகிவிட்ட என் வாழ்விலே வழியாய் நின்று நடத்திய

அந்த இயேசு, இன்று உங்களையும் நடத்த ஆயத்தமாயிருக்கிறார். அவர் பாரபட்சமற்றவர். தம்மிடம் வருகிறவர்களை அவர் புறம்பே தள்ளுவதில்லை. அவரிடம் உங்களைக் கொடுத்துவிடுங்கள் என்ற செய்தியையே கொடுக்க விரும்புகிறேன்.

ஆழ்கடலோ அவாந்தரவெளியோ,
ஆள் நடக்கா கானக வழியோ!
எப்பக்கம் திரும்ப? என்னதான் செய்ய?
என்றேங்கும் சகோதரா, ஏறிட்டு நோக்கிடுவாய்!
குருடரை நடத்திடும் தெரியாத வழிதனில்
குகையிலும் மிளிர்ந்திடும் இணையிலா ஒளிதனில்,
மலைகளை வழியாக்கும் மாபெரும் வல்லோனாய்
நடத்திட அழைத்திடும் இயேசண்டை வந்திடுவாய்!

❖❖❖❖❖❖❖❖❖

### அத்தியாயம் 4

# நெரிந்தநாணலை முறியார்!

**"அவர் நெரிந்தநாணலை முறியாமலும், மங்கியெரிகிற திரியை அணையாமலும் நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துவார்"**

**- ஏசா.42:3**

நாணல் புல்லைப் பார்த்திருக்கிறீர்களா? மெலிந்து நீண்டிருக்கும் இப்புல்லானது காற்றடிக்கும் பக்கம் நன்றாக வளைந்து கொடுக்கும். இதனால் இதனை இலகுவில் முறித்துவிடமுடியாது. ஆனால் அது நெரிக்கப் பட்டு சிதைக்கப்பட்டால் அதனை அழித்து விடுவது இலகு. அதுபோலவே எண்ணெய் இல்லாததினால் கருகிப்போகும் திரியை அணைத்துவிடுவதும் மிக சுலபம். இப்படியாகவே பலதடவைகளில் மனுஷருடைய வாழ்வும் உதவாததென்று தள்ளப்பட்டுப்போவதைக் காணலாம். ஆனால் கர்த்தரோ முறிந்த நிலையில் இருக்கிற வாழ்க்கைகளைத் தூக்கி நிறுத்துகிறவர். அணைந்துபோகும் நிலைமைகளை மீண்டும் ஒளிரச் செய்கிறவர்.

வாழ்க்கையிலே நொந்து, சோர்ந்து, இளைப்படைந்து, பெலனிழந்து, தோல்வியுற்று, எல்லா நம்பிக்கைகளையும் இழந்துவிட்ட நிலையில் காணப்படும் ஒருவனை இன்னும் அதிகமாக நொறுக்கி, கீழே விழத்தள்ளுவது மிகவும் இலகுவானது. இதற்கு அதிகமாக எதுவும் செய்யத் தேவையில்லை, ஏதாவது ஒரு வார்த்தையே போதும். அன்று இயேசு கிறிஸ்து கூறிய ஒரே வார்த்தை நூற்றுக்கதிபதியின் வேலைக்காரனுக்கு வாழ்வு கொடுத்தது. ஆனால் இன்று நாம் அறிந்தோ அறியாமலோ பேசுகின்ற வார்த்தையானது மங்கியெரிகிற உள்ளங்களை அப்படியே அணைத்துவிடுகின்றன.

மரணப்போராட்டத்தில் இருக்கும் ஒருவரிடம் போய், 'ஏன், உனக்கு இப்படி ஆகவேண்டும். மறைமுகமான பாவம் இருந்தால் அதை அறிக்கையிட்டு மனந்திரும்பு' என்று சொல்லுவோமானால் அந்த நோயாளியின் மனநிலைமை எப்படிப் பாதிக்கப்படும் என்பதை சிந்தித்துப் பாருங்கள். நொந்துபோன உள்ளங்களை வேதனைப்படுத்தும் வார்த்தைகளை வாய்தவறியும் பேசிவிடாதபடிக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நமது வார்த்தைகள் மங்கியெரிகிற திரிகளை அணைக்கக்கூடாது. மாறாக அவற்றுக்கு எண்ணெயாக மாறவேண்டும். அவைகள் ஆத்திரமூட்டும் வார்த்தைகளாக அல்லாமல் ஆறுதல் அளிக்கும் வார்த்தையாகவேண்டும்.

நோயாளியாகிவிட்ட என்னைப் பார்ப்பதற்கு பலரும் வந்தனர். சிலர் ஆறுதலாகப் பேச, சிலர் அமைதியாக நின்றனர். சிலர் கரிசனையோடு விசாரிக்க, சிலர் கண்ணீரோடு கடந்து சென்றனர். எல்லாமே என் மனதைத் தொட்டபோதும், ஒருவர் பேசியது என்னை அசைத்துவிட்டது. "உனக்கு எதிராக யாரோ சூனியம் செய்துவிட்டனர். உனக்குள்ளும் அறிக்கையிடாத பாவங்கள் உண்டு. அதனால்தான் உனக்கு இத்தனை வேதனை உண்டாயிருக்கிறது" என்றார். ஏற்கனவே சரீர வேதனையால் நொந்துபோயிருந்த என்னை இவ் வார்த்தைகள் நொறுக்கிப் போட்டன. ஆவிக்குரிய வாழ்வின் ஆரம்பப் படியில் நின்ற என்னை இவ்வார்த்தைகள் திணறடித்ததன் காரணம், இதனைக் கூறியவர் ஒரு புறமதத்தினர் அல்ல, அவர் ஒரு கிறிஸ்தவ ஊழியராயிருந்தார்.

தனிமையில் விடப்பட்டபோது ஆழமாக சிந்தித்தேன், அழுதேன், ஜெபித்தேன். ஆம், நான் பாவிதான். ஆனாலும் என் பாவங்கள் மன்னிக்கப்பட்டதனால் உண்டான விடுதலையும் மகிழ்ச்சியும் இன்னும் மாறாமல் இருந்தது. அப்படியிருக்க கடந்தகால பாவங்களினிமித்தம் காருண்யமுள்ள கர்த்தர் என்னைத் தண்டிப்பாரோ! **"உம்முடைய இரட்சிப்பின் கேடகத்தையும் எனக்குத் தந்தீர், உம்முடைய வலதுகரம் என்னைத் தாங்குகிறது. உம்முடைய காருண்யம் என்னைப் பெரியவனாக்கும்." (சங்.18:35)** என்னை இரட்சித்துத் தாங்குகிறவரின் காருண்யம் என்னைச் சிறுமைப்படுத்தாது. நம்முடன் கூடவே வழிநடந்து வருகின்ற தூய ஆவியானவர் எனக்குள் வாசம்பண்ணுகிறார் என்ற நினைவு எனக்கு ஆறுதல் தந்தது. "இஸ்ரவேலுக்கு எதிரான மந்திரமில்லை" என்ற வார்த்தை என்னை தைரியப்படுத்தியது. அந்த சரீர வேதனையின் மத்தியிலும் உள்ளம் உடைந்தவளாக ஆண்டவர் பாதம் வீழ்ந்தேன். மறைவான பாவங்களுக்கு என்னை விலக்கிக் காத்துக்கொள்ளும், என்று ஜெபித்தேன்.

## நான்கு படிகள்

கதறிய உள்ளம் அமைதி கண்டது. அரும்பெரும் பொக்கிஷமாம் பரிசுத்த வேதத்திலிருந்து ஒரு வார்த்தை உள்ளத்தை நிரப்பியது. "இந்த வியாதி மரணத்திற்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது, தேவனுடைய குமாரனும் அதினால் மகிமைப்படுவார்" (யோவா.11:4). தேவநாமம் மகிமைப்படுவதற்கு ஏதுவாக இந்தத் தூசியையும் தேவன் தெரிந்தெடுத்தாரே என்று நினைத்தபோது, உள்ளம் நன்றியால் நிரம்பிற்று.

இதனை வாசித்துக்கொண்டிருக்கும் பிரியமானவர்களே! ஒரு அன்பு வேண்டுகோள். ஒரு வியாதிஸ்தரைப் பார்ப்பதற்குப் போவதானால், அதன் முன்னர் ஒருசில நிமிடமாவது அமர்ந்திருந்து ஜெபித்துவிட்டு, அப்புறமாகச்

செல்லுங்கள். கடமைக்காகப் பார்க்கப் போவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். பேசுவதற்கு ஒன்றும் இல்லாவிட்டால், பேசாமலே வந்துவிடுங்கள். ஒரு நோயாளிக்கு அவருடன் பேசுவதைக் காட்டிலும், அன்பான ஸ்பரிசமும், ஆதரவான அரவணைப்பும்தான் முக்கியம். பொழுதுபோக்குப் பேச்சுக்களும், தகாத வார்த்தைகளும் அவர்களது வேதனை மேலும் அதிகரிக்கும் சந்தர்ப்பங்களை உருவாக்கக்கூடும். பேசாமற் போனாலும், அன்பின் அரவணைப்பு ஒருபோதும் வீண்போகாது. சமயத்திற்கேற்றபடி ஞானமாகப் பேச கற்றுக்கொள்ளவேண்டும். "இளைப்படைந்தவனுக்குச் சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல அறியும்படிக்கு, கல்விமானின் நாவை..." ஆண்டவரிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ளவேண்டும். (ஏசா.50:4)

அதனைவிட்டுவிட்டு சரீர வேதனையுடனும், அதனாலுண்டாகும் உளரீதியான தாக்கங்களுடனும் போராடிக்கொண்டிருக்கும் ஒருவரை நியாயந்தீர்க்கவோ, நமது சூடான வார்த்தைகளால் நாசூக்காகக் குற்றஞ்சாட்டவோ கூடாது. அது பெரிய ஆபத்துக்களையும் விளைவிக்கலாம்.

வியாதிப்படுக்கையிலிருந்து இதனை வாசிக்கும் அன்பானவர்களே, உங்களுக்கும் ஒரு தாழ்மையான வேண்டுகோள். உங்களைப் பார்க்க வருகின்ற யாவருடனும், பேசவேண்டுமென்பதற்காகப் பேச முற்படாதீர்கள். அவர்களது சகல பேச்சுக்களுக்கும் உங்கள் செவிகளைத் திறக்கவும் வேண்டாம். அப்படியிருந்தும் உங்கள் உள்ளம் புண்படும்படி ஏதாவது செவிகளில் நுழைந்தால், அதனை அப்படியே பிதாவின் பாதத்தில் வீசி எறிந்துவிடப் பழகிக்கொள்ளுங்கள். *"நொந்துபோன உள்ளங்கள் பிசாசின் விளையாட்டு மைதானங்கள்"* என்று சொல்லுவார்கள்.

நமக்கு ஏன் வியாதி வரவேண்டும் என்று கேட்கவே நாம் அருகதை அற்றவர்கள். "காரணமே இல்லை" என்பதுதான் முதற்காரணமாகும். ஆனாலும் சில அடிப்படை விஷயங்களும் உண்டு. அவற்றை இப்போது கவனிப்போம்.

**1. பிறப்பிலே ஏற்படும் வியாதிகள்:**

சில குழந்தைகள் பிறக்கும்போதே குறைபாடுகளுடனும் வியாதிகளுடனும் பிறக்கின்றன. இதற்கு விஞ்ஞானம் பல காரணங்களைக் கூறினாலும் பலவற்றுக்கு விளக்கமே இல்லை. சப்பாணிகளாக, புத்தி குறைந்தவர்களாக, இருதய பலவீனராக, இன்னும் பலவிதங்களிலே, தமது வாழ்நாள் முழுவதுமே கஷ்டப்படுகிறவர்கள் உண்டு.

**2. உடலியல் குறைபாடுகள்:**

பலவித காரணங்களினால் நமது உடற்தொகுதிகளின் இயக்கங் களிலே ஏற்படுகின்ற மாறுதல்களினாலும், விபத்துக்கள் போன்ற

காரணங்களினாலும் நமது சரீரம் பாதிக்கப்படலாம். இதன் காரணமாக உளரீதியாகவும் பல நோயாளிகள் பாதிப்புக்குள்ளாகின்றனர். இந்நாட்களிலே சாதாரண வைரஸ் காய்ச்சலே நம்மையெல்லாம் எவ்வளவாகப் பாதித்து விடுகிறது. புற்றுநோயும், கிட்னி வியாதிகளும்கூட மிக சாதாரணமாகிவிட்டன. புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்திருக்கிறீர்களா? அவர்களின் சரீரத்தைவிட, உள்ளமே அதிகளவில் தாக்கப்பட்டிருப்பதை நாம் கவனிக்கலாம்.

### 3. நமது பாவங்கள் ஏற்படுத்தும் வியாதிகள்:

திமிர்வாதத்தினால் பாதிக்கப்பட்ட ஒருவனை, வீட்டின் கூரையைப் பிய்த்து, இயேசுவிடம் கொண்டுவந்தனர். இயேசுவோ, அவனுடைய நோய் அல்ல, அவனுக்குள் இருந்த பாவமே முதலில் கழுவப்படவேண்டும் என்று கண்டார். இந்நாட்களிலும் மனுஷரின் பாவபழக்கங்களினால் மலிந்து போயிருக்கும் நோய்களை நாம் அறிவோம். இதனால் பாவம் செய்தவர்கள் மாத்திரமல்லாமல், அந் நோயுள்ளவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளும்கூட பாதிப்புக்குள்ளாவதையும் கேள்விப்பட்டிருக்கிறோம். கொஞ்சம் கொஞ்சமாக சாகடிக்கக்கூடிய எயிட்ஸ் நோய் உட்பட பல நோய்களுக்கு, தவறான பாலியல் உறவுகளே காரணம் என்பதையும் நாம் தெரிந்துகொள்ளவேண்டும்.

### 4. தேவநாமம் மகிமைப்படுவதற்கு ஏதுவான வியாதிகள்:

"தேவநாமம் மகிமைப்படுவதற்காக, தேவன் நம்மை வியாதிக்குள்ளாக்கலாமா?" என்னைக் கேட்டால், அப்படியாகிலும் தேவன் நம்மைப் பயன்படுத்துவாராகில் நாம் பாக்கியவான்கள் என்றே சொல்லுவேன். பிறக்கும்போது அல்லது சாதாரண வாழ்விலும்கூட இது நிகழலாம். இதில் இரு விஷயங்கள் உண்டு. ஒன்று தேவன் அனுமதிப்பது, மற்றது வந்துவிட்ட வியாதியை தேவகரத்தில் வைத்து நம்மையும் ஒப்புவிக்கும்போது அவர் அதனைத் தமக்கென்று பயன்படுத்துவது. அன்று சீஷர்கள், "ரபீ, இவன் குருடனாய் பிறந்தது இவன் செய்த பாவமா?" என்று ஒரு பிறவிக் குருடனைக் காட்டி இயேசுவிடம் கேட்டபோது, "இது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்" என்று சொன்னார் (யோவா.9:1-3). லாசருவைப்போல நமக்கொரு சகோதரன் இருந்திருந்தால் சும்மா விட்டிருப்போமா? இயேசு நம்மை நேசிப்பது போல நடித்தார் என்றுகூட சொல்லியிருப்போம். ஆனால் நடந்தது என்ன! லாசரு உயிரோடெழுப்பப்பட்டான்.

ஆம், லாசருவுக்கு வந்த வியாதி உலகத்தைப் பொறுத்த வரையில் மரணத்தை ஏற்படுத்தினாலும், அது மரணத்திற்கேதுவாயிராமல் தேவனுடைய

மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருந்தது. 'தேவனுடைய குமாரனும் அதினால் மகிமைப்படுவார்.' என்று ஆண்டவர் கூறியபடியே நடந்தது. "மரியாளிடத்தில் வந்திருந்து, இயேசு செய்தவைகளைக் கண்டவர்களாகிய யூதர்களில் அநேகர் அவரிடத்தில் (இயேசுவினிடத்தில்) விசுவாசமுள்ளவர்களானார்கள்" என்று வாசிக்கிறோம். சாதாரண காய்ச்சலாக இருந்திருந்தால் ஜனங்கள் கூடியிருப்பார்களா? லாசரு மரித்துவிட்டதனாலேயே அத்தனை ஏராளமானவர்கள் வந்திருந்தனர். அத்துடன் வந்தவர்கள் சும்மா இருந்திருப்பார்களா? "இயேசு இயேசு என்று உயிரையே விட்டானே. அவர் என்ன செய்துவிட்டார்" என்று முறுமுறுத்திருப்பார்கள். ஆனால் கர்த்தரோ யாவையும் மாற்றிப்போட்டார்.

ஆகையால், ஏன்? எதற்காக? என்று கேள்விகளை அடுக்காமல், காரணம் எதுவானாலும், தேவனுடைய பலத்த கரத்துள் நம்மை ஒப்புவிப்பதே நமக்கு நல்லது. அவ்வாறு ஒப்புவிப்பது மாத்திரமல்ல நாம் செய்யவேண்டிய பகுதியைச் செய்யாமல் விடக்கூடாது. சர்க்கரை வியாதியுள்ளவர்கள் அதிக சீனியைச் சாப்பிட்டுவிட்டு மயங்கிவிழுந்தால், அது முன்னோர் பாவம் என்றோ, தேவநாமம் விளங்கும்பொருட்டே இப்படி ஆனது என்றோ சொல்லலாமா? ஆகவே சுயசித்தத்தோடே ஞானமாய் நடக்கவேண்டிய நேரத்தில் நடக்கத்தான் வேண்டும். மறுபக்கமாக, நமது வியாதிக்கு நமது பாவமே காரணமானால், தேவகரத்தில் ஒப்புவிக்கும்போது, நிச்சயமாக நாம் உணர்த்தப்படுவோம். அப்போது, பாவத்தை அறிக்கையிட்டு, அதனை விட்டுவிட்டு, மனந்திரும்புவதைத் தவிர மறுவார்த்தை இல்லை. தேவன் வாழும் ஆலயமாகிய இந்த சரீரத்தை புகை ஊதியே கெடுத்துவிட்டு, தேவநாமம் விளங்குவதற்கே புற்றுநோய் வந்தது என்று கூறலாமோ? அதேசமயம், நமது பாவத்தினிமித்தமே வியாதி கண்டாலும் அதனை அறிக்கைபண்ணி விட்டுவிட்டு, தேவசித்தத்திற்கு நம்மை அர்ப்பணிக்கும்போது, அதன் விளைவுகளை நாம் சந்திக்கநேர்ந்தாலும், விளைவுகளின் போக்கை தேவன் நிச்சயமாகவே மாற்றிப்போடுவார்.

இறுதியாக யோபுவைக் கவனியுங்கள். அவனுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கும், சரீர வியாதிக்கும் அவனது நண்பர்கள் காரணம் கண்டுபிடிக்க முயன்றனர். நீ பாவம் செய்தாய் என்றார்கள். ஆனால் யோபுவோ, கர்த்தருக்கு முன்னே தன்னைத் திடப்படுத்திக்கொண்டு, இறுதி வரையிலும் நிலைத்து நின்றான். அல்லாமல், தனது நண்பர்களுக்கு செவிகொடுத்திருந்தால், தன்னைத் தானே கெடுத்திருப்பான். அவனோ தேவனுக்கு முன்னே தன்னை நிறுத்தினான். ஜெயம் பெற்றான்.

எந்தவொரு விஷயத்திற்கும் ஒரு காரணம் இல்லாமல் போகாது. தேவனில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாகவே

நடக்கிறது என்பதை அறிந்திருக்கிற நாம், கேள்விகளின்றி, முறுமுறுப்பின்றி, கர்த்தருடைய மார்பிலே சாய்ந்துகொள்வோமாக. இப்போது நமக்கு எதுவும் புரியாவிட்டாலும், நிச்சயமாக ஒருநாளில் யாவும் தெளிவாக்கப்படும்.

இதுவரை வியாதிகளுக்கான பலவித காரணங்களையும் நான்கு குறிப்புகளின் கீழ் சுருக்கமாகக் கவனித்தோம். தொடர்ந்து, நமக்கு சுகம் கிடைக்கும் வழிகளையும் சற்று ஆராய்வோம்.

**1. தெய்வீக சுகம்:**

"நானே பரிகாரியான கர்த்தர்" என்று கூறிய தேவன் மெய்யாகவே நமக்கு ஒரு நொடிப்பொழுதிலேயே சுகம் அருள இன்றும் என்றும் வல்லவராயிருக்கிறார். அவர் தொட்டதும் கண்கள் திறந்தன, காதுகள் கேட்டன. நாவுகள் பேசின. அவரால் தொடப்பட்டவர்களும் சுகமடைந்தனர். அவரைத் தொட்டவர்களும் சுகமடைந்தனர். அதேபோல அவர் ஒரேயொரு வார்த்தை சொன்னபோதும் சுகம் கிடைத்தது. ஆம், தெய்வீக சுகம், அற்புத சுகம், அது ஆண்டவரின் சுத்தமான கிருபையே.

அதற்காக ஆண்டவர் வாழ்ந்திருந்த அந்நாட்களில் யூதேயா தேசமெங்கிலும் வியாதிஸ்தரே இருக்கவில்லையா? இருந்தார்கள். ஆனால், ஆண்டவரிடம் வந்தவர்கள் சுகம் பெற்றார்கள் என்பதே காரியம். அதேசமயம் அவர் எல்லோர்மேலும் தமது கரத்தை வைத்து ஒரேமாதிரியாகக் கிரியை செய்யவில்லை. சிலரை உடனடியாகவே தொட்டார். ஆனால் பெத்சாயிதா ஊர் குருடனையோ, இயேசு கிராமத்திற்கு வெளியே அழைத்துச் சென்று, அவன் கண்களில் உமிழ்ந்து, அவன்மேல் கைகளை வைத்தார் என்று வாசிக்கிறோம்(மாற்.8:22-26). இயேசு அவனை இரண்டுதரம் தொட்டபின்னரே அவனுக்குப் பார்வைத் தெளிவாயிற்று. ஆனால் வேறொரு குருடனுக்கோ இயேசு தரையிலே துப்பி, உமிழ்நீரினாலே சேறுண்டாக்கி, அதனை அவனுடைய கண்களிலே பூசி, சீலோவாம் குளத்திலே கழுவும்படி கூறினார். சொன்னபடி கழுவிய பின்னரே அவனுக்குப் பார்வை கிடைத்தது. ஒரு இடத்தில் ஒருவன் மரிக்கும் முன் அவனுக்கு சுகம் கொடுத்தார். இன்னொருவனோ மரித்து அவனை பாடையிலே கொண்டுபோகும்போது, அப்பாடையைத் தொட்டு அவனை உயிரோடே எழுப்பினார். லாசருவின் விஷயத்திலோ மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, நான்கு நாட்கள் சென்றபின்னரே அவனது மரணவீட்டிற்குப் போனார். அங்கு கல்லறையிலிருந்து அவனை உயிரோடே எழுப்பினார்.

இவற்றுக்கெல்லாம் பல விளக்கங்களைப் பலரும் கூறலாம். ஆனால் மிகத் தெளிவாகத் தெரிகிற விஷயம் ஒன்று உண்டு. ஒவ்வொருவர் விஷயத்திலும் தேவனுக்கென்று ஒரு சித்தம் உண்டு. ஏனெனில் அவர்

ஒருவரே ஒவ்வொரு மனிதரையும், அவர்களது அந்தரங்கங்களையும் அறிந்தவராயிருக்கிறார். ஆகவே வீண் கற்பனைகளும் குழப்பங்களும் தேவையில்லையே.

**2. இயற்கைவிதி:**

ஒவ்வொரு வியாதிக்கும் வேறுபட்ட தன்மைகள் உண்டு. அதன்படி அது இயற்கையாகவே குணமடைய ஒவ்வொரு காலவரையறையும் உண்டு. வைரஸ் காய்ச்சலானால், பக்க விளைவுகள் இல்லாவிடில், மூன்று அல்லது ஐந்து நாட்களில் அது தானாகவே குணமடைந்துவிடும். சுவாசப்பையில் சளி பிடித்தால் அது தானாகக் குணமடையாது. அந்த சளி அகற்றப்பட வேண்டும். அதன்பின்னர் தானாகவே குணம் கிடைத்துவிடும். இப்படியாக தானாகவே குணமடையக்கூடிய நோய்களுக்காகவும் ஜெபிக்கவேண்டுமா? இப்படியொரு கேள்வியை நாம் கேட்கலாமா? நமது சரீரத்திற்கு இயற்கை யாகவே நோய் எதிர்ப்புச் சக்தி உண்டு. இரத்தத்திலுள்ள வெள்ளை அணுக்கள் இந்த வேலையைப் பூர்த்திசெய்கின்றன. அந்த சக்தியை நமது சரீரத்திற்கு அளித்தவர் யார்? நோய் முற்றிவிடும்போது, அதனாலுண்டாகும் விளைவுகளின் நிமித்தமாக தொண்டைக்குழல் அலர்ஜி, சுவாசக்குழல் அலர்ஜி, நிமோனியா இப்படியான நிலைமைகள் உருவாகும்போது இவற்றை எதிர்க்க இயற்கையான நோய் எதிர்ப்புச் சக்தி போதாது. இதற்காகத்தான் டாக்டர்களை நாடுகிறோம். மருந்து சாப்பிடுகிறோம். அப்போது நோய் எதிர்ப்புத் தன்மை ஊக்குவிக்கப்படுகிறது. அந்நேரத்திலும் நம்மைத் தப்புவிப்பவர் யார்?

ஆம், இயற்கை விதியாயினும் சுகமளிப்பவர் கர்த்தரே. இயற்கை முழுவதையும் ஆளுகைசெய்பவர் நமது ஆண்டவர். நோய்களின் பக்கவிளைவுகளிலிருந்தும் நம்மைக் காக்கிறவர் கர்த்தர் ஒருவரே. கவனிக்கப்படாத சாதாரண வயிற்றோட்டம் எத்தனை குழந்தைகளின் உயிர்களைப் பறித்துவிட்டிருக்கிறது தெரியுமா? ஆகவே எந்நிலைமையிலும் தேவபாதம் ஒன்றே நமக்குத் தேவையானது என்பதை நாம் மறக்கக்கூடாது.

**3. சுற்றுவழிப்பயணம்:**

எகிப்துக்கும் கானானுக்கும் இடையே குறுகிய தூரத்திலே நேர்ப்பாதை இருந்தது. ஆனால் தேவனோ, அதிக நாட்கள் பயணம் செய்யக்கூடியதாக சுற்றுவழிப்பயணம் ஒன்றையே தெரிந்தெடுத்தார். கர்த்தரே நடத்தியபோதும் அப்பாதையிலே இடர்கள், பாடுகள், சோதனைகள், யுத்தங்கள் பல இஸ்ரவேலரை இடறப்பண்ணின. அவர்களது விசுவாசம் பல தடவைகள் பரீட்சிக்கப்பட்டது. புறப்பட்டவர்களில் இருவரைத் தவிர மற்றவர்கள் அந்த வனாந்தர வழியிலே மாண்டுபோனார்கள்.

இப்படியே நமது அன்றாட வாழ்விலும் தேவ வழிநடத்துதல் நமக்கு ஆச்சரியம் தருகிறது. நமக்கேற்படும் நோய்களைக் குணப்படுத்த அவருக்கு ஒரு நொடிப்பொழுதே அதிகம். அல்லது இயற்கை விதிப்படி நடத்தவும் அவராலே கூடும். சிலசமயம் தமது பிள்ளைகளை உடனடியாகக் குணப்படுத்தாமல் நீண்டதொரு வழிப்பயணத்திலே தேவன் நடத்துகிறார். இந்த வியாதி குணப்படுமா என்று சந்தேகிக்குமளவிற்கு நீண்டு கொண்டுபோகும் காலஇடைவெளியும் தேவதிட்டமேயாகும். தேவதிட்டத்தில் ஆயிரம் சங்கதிகள் பொதிந்திருக்கும்.

இப்படியானதொரு நீண்டவழிப்பாதையில்தான் கர்த்தர் என்னையும் நடத்தினார். மூன்று மாதங்களுக்கும் மேலாக மருத்துவமனையில் இருக்க நேரிட்டது. சில நோயாளிகளுடன் ஒப்பிடும்போது இது குறுகிய காலமாயினும், எனக்கோ அக்காலப் பகுதி மூன்று யுகங்கள் போலவே தெரிந்தன. உடனடியாக எனக்குப் புரியாவிட்டாலும், நாளடைவில் தேவனுடைய திட்டங்கள் தவறல்ல என்ற இரகசியத்தை உணர்ந்து கொண்டேன். தேவபிரசன்னம் என்பது என்ன, நல்ல மேய்ப்பனின் கோலும் தடியும் எது, மரணப் பள்ளத்தாக்கு என்பது என்ன, அதிலே கர்த்தர் நம்மோடேகூட இருப்பது என்பது என்ன போன்ற அரிய பாடங்களைக் கற்றுக்கொள்ள ஏதுவானது. அந்த நாட்களில் என் பெற்றோர் என்னுடன் இல்லை, இருக்கவும் முடியவில்லை. ஆனால், “உன் தகப்பனும் தாயும் கைவிட்டாலும் நான் உன்னைக் கைவிடேன்” என்ற வார்த்தையை மெய்யாகவே அனுபவத்தில் கற்றுக்கொண்டேன். இவைமாத்திரமல்ல, சோதனை என்ற நெருப்பினால் என் விசுவாச வாழ்க்கையை, தேவன் துலக்க ஆரம்பித்திருந்தார். இதற்கு ஏறத்தாழ ஒரு வருடகாலம் சென்றது. ஆனால் அக் காலப்பகுதியே என் வாழ்வில் மிக மிக முக்கிய பகுதியாக மாறிவிட்டிருந்தது. அல்லேலுயா!

நீண்டநாட்களாக வியாதிப்படுக்கையிலே அல்லலுறும் மகனே, மகளே, தளர்ந்துபோகாதே. தேவனை நோக்கிப் பார். நீ எந்த நிலைமையில் இருந்தாலும் அந்த இடத்திலிருந்து அவரையே பற்றிக்கொள். நீண்டவழித்தூரம் நடத்தினாலும் நடத்துகிறவர் ஆண்டவர் என்ற நிச்சயம் இருக்குமானால், இறுதியிலே அவரே உன்னைத் தூக்கி நிறுத்துவார்.

இதனை எழுதிய நாட்களில், பலத்த தீக்காயங்களுடன் மருத்துவ மனையில் அனுமதிக்கபட்டிருந்த ஒரு சகோதரியைப் பார்க்கப்போனேன். அது ஒரு கோரக்காட்சி. என்றாலும் ஒரு கண்ணும், இரு கைகளும், நடக்கக்கூடிய அளவில் கால்களும் எரியாமல் தப்பியிருந்தன. அவள் ஓர் புதிய விசுவாசி. ஆண்டவரை ஏற்றுக்கொண்ட சிலநாட்களுக்குள் இப்படி ஆகிவிட்டதால், அவளுக்கு தெய்வீகசுகத்தை அருளி அவளை இன்னும்

விசுவாசத்தில் உறுதிப்படுத்தியிருக்கலாமே என்பது சிலரது எண்ணம். ஆனால் அப்படி எதுவும் நிகழவில்லை. 'இயேசுவே என் தெய்வம்' என்று ஒற்றைக் கண்ணால் கண்ணீர் சிந்தும் அவளது வேதனையை வார்த்தைகளால் வடித்துவிடமுடியாது. பாடு நிறைந்த நீண்டதொரு வழிப்பயணத்திற்கு அவள் ஆயத்தமாக வேண்டியிருந்தது.

கணவனும் அருகில் இல்லை, மகனும் அருகில் இல்லை. ஆனால் அவளோ, 'என் இயேசு எனக்குப் போதுமானவர். என் முகம் விகாரமாகக் காட்சியளிப்பதுபோல என் இயேசுவும் ஒருநாள் காட்சியளித்தாரே. அவரே என் வேதனையையும் அறிந்திருக்கிறவர்.' என்றாள். இவ் வார்த்தைகள் என் இருதயத்தைச் 'சுருக்' என்று தைத்தது. ஆம், இதுவே தேவதயவு. இதுவே தெய்வீக சமாதானத்தின் அடையாளம். வியாதி அநேக நாட்கள் நீடித்தாலும், நமக்கு ஏது கலக்கம். தேவன் நம்மோடு இருப்பார். அவர் நெரிந்த நாணலை முறியார். மங்கியெரிகிற திரியையும் ஒருபோதும் அணையார். அவர் ஆண்டவர். ஒரு கண் எரிந்துவிட்ட நிலை வந்தாலும் இயேசு போதுமே என்று நாமும் சொல்லக்கூடுமோ!

**4. எடுபடாத முள்:**

பதில் கிடைக்காத ஜெபம் ஒன்று உண்டா? இல்லவே இல்லை. நமது ஒவ்வொரு ஜெபத்திற்கும் கர்த்தர் தமது சித்தப்படி ஏதோவொரு விதத்தில் பதில் அருளுகிறார். ஒன்று, கேட்டபடி தருவார். மற்றது கேட்டதற்கு மாறாகத் தருவார். அல்லது ஒரு பதிலுமே தரமாட்டார். நாம் வேண்டிக் கொண்டபடி பதில் கிடைக்காவிட்டால் அதுவும் தேவனுடைய பதில் என்று நாம் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் வேண்டும். தெய்வீக சுகமோ, சாதாரண சுகமோ, அல்லது நீண்ட கால ஓட்டத்தின் பின்னர் கிடைக்கின்ற நல்ல சுகமோ மாத்திரமல்ல எத்தனைதான் ஜெபித்தாலும் சுகம் கிடைக்காத சந்தர்ப்பங்களும் வரும். சமீபத்திலே ஆறு வயது குழந்தைக்காகப் பலர் இடைவிடாது ஜெபித்தோம். ஆனாலும் அந்தக் குழந்தை இறந்துவிட்டது. கர்த்தர் ஜெபத்தைக் கேட்கவில்லை எனலாமா? இல்லை. இதுவும் தேவசித்தம் என்று நாம் ஏற்றுக்கொள்ளும்போது, தேவசித்தம் நமது வாழ்விலே பூரணமாகவே நிறைவேறும்.

தனது வாழ்க்கையின் பெரும்பகுதியை கட்டிலிலேயே கழித்துவிட்ட ஒரு தாயார் எழுதிய தியானங்கள் இன்றும் நமது வாழ்வுக்குப் புத்துயிர் ஊட்டுகின்றன. நோய்வாய்ப்பட்டவர்களாக, மரணத்தை நெருங்கியவர்களாக இருந்தும் அவர்கள் பாடிய பாடல்கள் இன்றும் நம்மைத் தேற்றிக் கொண்டிருக்கின்றன. பாடுகளின் பாதையிலே விடுதலையின்றியே மரித்துவிட்ட எத்தனை தேவதாசர்களின் வாழ்வுகள் கோதுமை மணிகளாக இன்னும் பலன் கொடுத்துக்கொண்டிருக்கின்றன.

இந்த முள் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும், என்று பவுலும் மூன்றுமுறை ஜெபித்தார். ஆமாம், உன் முள்ளை நீக்கிவிடுகிறேன். நீ அதிகம் ஊழியம் செய்யலாம், என்று கூறினாரா ஆண்டவர்! இல்லை. என் கிருபை உனக்குப் போதும், உன் பலவீனத்தில் என் பெலன் பூரணமாய் விளங்கும், என்றுதான் பவுலைத் தேற்றினார். இறுதியிலும் இந்தப் பவுல் இரத்த சாட்சியாகவே மரித்தார். இந்த முள் அநேகமாக ஒரு வியாதி யாகவே இருக்கும் என்று நம்பப்படுகிறது. பவுல் தொடர்ந்து எழுதுவது என்ன! 'அன்றியும், எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளுக்குரிய மேன்மை யினிமித்தம் நான் என்னை உயர்த்தாதபடிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது.' என்கிறார் (11கொரி.12:7). ஆம், தேவனருளிய பதிலை அறிந்து ஏற்றுக்கொண்டதினால், பவுல் திரும்பவுமாக தேவனை வற்புறுத்தவேயில்லை. ஒரு நோக்கத் துடனேயே தேவன் அந்த முள்ளை அனுமதித்தார் என்பதை பவுலின் வாக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன.

*"ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன். அந்தப்படி, பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ள வனாயிருக்கிறேன்."* (11கொரி.12:9.10)

இன்று நமது நிலைமை என்ன? சுகம் கிடைக்க சிறிது தாமத மானாலும் வெவ்வேறு ஊழியர், ஜெபக்கூட்டங்கள், அற்புத சுகம் கொடுக்கும் அற்புத ஊழியர் என்று ஓடி ஓடி அலைகிறோம் அல்லவா. சுகம் பெறுவது ஒன்றே நமது நோக்கமேயன்றி, தேவநோக்கத்தை அறிய தவறிவிடுகிறோம். தேவன் தவறு செய்கிறவரல்ல, சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாகவே செய்வார் என்ற விசுவாசம் அந்த நேரத்திலே சிறகு கட்டிப் பறந்து விடுகிறது. சுகம் கிடைக்கும்வரைக்கும் கர்த்தரைப் படாதபாடுபடுத்தி விடுகிறவர்கள் எத்தனைபேர்.

தேவனுக்குப் பயந்து ஜீவித்த ஒருசில யூத ராஜாக்களில் எசேக்கி யாவும் ஒருவன். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர்மேல் வைத்த நம்பிக்கை யிலே அவனுக்குப் பின்னும் அவனுக்கு முன்னும் இருந்த ராஜாக்களி லெல்லாம் அவனைப்போல ஒருவனும் இருந்ததுமில்லை. கர்த்தரும் அவனோடே இருந்தார். இவனுக்கு ஒரு செய்தி போனது. 'நீர் மரித்துப் போவீர், உமது வீட்டுக்காரியங்களை ஒழுங்குபடுத்தும்.' யார்தான் இந்த செய்தியைப் பொறுத்துக் கொள்வார்கள்! ஆம், அந்த ராஜாவும் ஒரு சராசரி மனிதன்தானே. எசேக்கியா அழுதான். சுவர்ப்பக்கமாகத் திரும்பி மிகவும் அழுதான்.

கர்த்தர் அவனுடைய அழுகையைப் புறக்கணித்தாரா! எசேக்கியா தான் கர்த்தரைப் புரிந்துகொள்ளாமற்போனானோ என்று சிந்திக்க வேண்டியுள்ளது. தேவன் ஒரு திட்டம் இன்றி எந்தக் காரியத்தையும் செய்வதில்லையே. எசேக்கியா கேட்டபடி, கர்த்தர் அவனைக் குணமாக்கியதுமன்றி, அவனுடைய நாட்களோடே பதினைந்து வருஷங்களையும் கூட்டிவிட்டார்(11ராஜா.20:6). பின்னர் நடந்தது என்ன? எசேக்கியா தனக்குச் செய்யப்பட்ட உபகாரத்திற்குத்தக்கதாய் நடவாமல், மனமேட்டிமையானான். ஆகையால் அவன்மேலும், யூதாவின்மேலும் எருசலேமின்மேலும் கடுங்கோப மூண்டது (11நாளா.32:25) என்ன பரிதாபம்! தேவனுக்குப் பிரியமுள்ளவனாகவே மரித்திருந்தால் நலமல்லவா.

ஒருதடவை ஒரு ஊழியருடன் பேசிக்கொண்டிருந்தோம். அவருடைய சாட்சிகளைக் கேட்டு ஆச்சரியமடைந்த நாம் அவருடைய பெயருக்கு முன்னே 'விசுவாசம்' என்ற பெயரையும் பட்டமாகச் சூட்டிவிட்டோம். விசுவாசத்தினால் எதையும் சாதித்து விடலாம் என்பதில் அவருக்கு அபார நம்பிக்கை இருந்தது. அதனையே போதனையாக நமக்கும் தந்துகொண்டிருந்தார். எனக்கோ மனதில் ஒரு சந்தேகம் எழுந்ததால், அவரை அணுகி, 'நமக்குப் பிரியமான எந்தக் காரியத்தையும் விசுவாசத்தினால் பெற்றுவிடலாமா?' என்று கேட்டேன். 'ஆம்' என்று அழுத்தமாகக் கூறினார். 'அப்படியானால்' நான் தொடர்ந்தேன். 'இறைச்சிக்காக இச்சித்த இஸ்ரவேலர் தாம் விரும்பியதைப் பெற்றுக்கொண்ட போதும், அத்தனைபேரும் வாதிக்கப்பட்டார்களே, அது என்ன? என்று கேட்டேன். (எண்.12:33) ஊழியரோ ஒரு புன்னகையை உதிர்த்துவிட்டு பேசாமலே இருந்துவிட்டார்.

அநேக நாட்களுக்குப் பின்னர் என் கேள்விக்குப் பதில் கிடைத்தது. விசுவாசம் வேறு, விரும்பியதை விடாப்பிடியாகப் பெற்றுக்கொள்வது வேறு. முந்தியது இறைவனால் இருதயத்தில் ஏற்படுத்தப்படுவது என்றால், பிந்தியது நமது இச்சையினால் ஆகிறது எனலாம். நமக்குத் தகாததையும் தேவையற்றதையும் எப்படியாவது பெற்றுக்கொள்ள முயற்சிக்கும்போது அதுவே இச்சை. ஆனால் விசுவாசமோ தேவ வார்த்தையுடன் பிணைந்துள்ளது. தேவசித்தத்துக்கு உட்பட்டது. அன்று இஸ்ரவேலர் காட்டியது விசுவாசம் அல்ல, அது அவர்களது இச்சையின் தோற்றமே. ஆகவே நாம் எச்சரிக்கையாக இருத்தல் அவசியம்.

பிரியமானவர்களே, நன்கு ஜெபித்தும் விசுவாசித்தும், வியாதியிலிருந்து நமக்கு சுகம் கிடைக்காதுபோனால், கர்த்தர் கைவிட்டார் என்று எண்ணவேண்டாம். நமக்குள்ளே அறிக்கைபண்ணப்படாத பாவம்

இருப்பின் அவற்றை அறிக்கையிட்டுவிட்டு, தேவசித்தத்திற்கு முற்றிலுமாக உங்களை ஒப்புவியுங்கள். அப்போது, சுகம் கிடைத்தாலென்ன கிடைக்காவிட்டாலென்ன, நமது எஞ்சியக் காலம் படுக்கையிலே கழிந்தாலென்ன, நமது வாழ்விலும், நமக்கூடாகப் பிறர் வாழ்விலும் தேவபிரசன்னத்தை நிச்சயமாகவே நாம் கண்டு களிகூரலாம்.

❖❖❖❖❖❖❖❖❖

# தனிமையில் உறவானார்!

ஒரு மனிதனை மிக இலகுவாக ஊடுருவக்கூடிய அதி சக்திவாய்ந்த கூரிய அம்பு, 'தனிமை' என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த அம்பின் நுனியிலே பயம், அங்கலாய்ப்பு, சுயபரிதாபம், வெறுப்பு போன்ற நஞ்சுகள் உண்டு. பெரும்பாலாக நம்மில் யாவருமே வாழ்நாளில் ஒருதடவையாவது இந்த அம்பினாலே தாக்கப்படாமல் தப்பியிருக்கவே முடியாது. தனிமை நம்மை ஆட்கொள்வதல்ல, மாறாக அதனை நாம் எப்படி முகங்கொடுக்கிறோம் என்பதுதான் காரியம். தனிமையைப் போக்குவதற்கு மனிதன் நாடுகின்ற பல வழிகள் அவனை மீட்டுவிடுவதற்கு மாறாக, மரணத்திற்கு நேராக இட்டுச் செல்வதையே அதிகமாகக் காண்கிறோம். 'நான் தனித்துவிட்டேன். சிறகொடிந்த பறவை போலாகி விட்டேன்' என்று அடிக்கடி சொல்லி ஆறுதலற்றிருந்த ஒரு விதவைத் தாயார், இறுதியில் மனநோயாளியாகிவிட்ட பரிதாபத்தை நான் அறிவேன்.

தனிமை பலவிதங்களில் மனிதனைத் தாக்குகிறது. வியாதியினால், அதிலும் மரணத்திற்கு ஏதுவான வியாதியினால் வருந்துகின்ற ஒருவனை தனிமை மிக இலகுவாக அடிமைப்படுத்தி விடுகிறது. அன்பான பெற்றோர், சகோதரர், நண்பர்கள் யாவரும் இருந்தாலும், தேவைகள் யாவும் ஒழுங்காகச் சந்திக்கப்பட்டாலும், நோயாளி ஒருவனுடைய இதயத்தின் ஆழத்திலே யாருக்குமே தெரியாதவாறு, 'தனிமை' உணர்வு முளைவிட்டு வளர ஆரம்பிக்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மை. இன்னும் விசேஷமாக, பார்க்க வருகின்ற உறவினர்கள் திரும்பிச்சென்ற பின்னர், மறுபடியும் தனித்து விடப்படும்போது, அந்த நோயாளியின் உள்ளம் ஏக்கத்தால் பதறுவதை அனுபவித்தால்தான் உணரமுடியும். மாத்திரமல்ல, பார்வையாளர் நேரத்தில், நம்மிடம் யாருமே வராதபோது, பக்கத்துக் கட்டிலைச் சூழ்ந்துநிற்கும் ஜனக்கூட்டத்தைப் பார்க்க நேர்ந்தால், தனிமை, ஒரு நோயாளியை எப்படி வதைக்கும் தெரியுமா?

இதற்கு என்ன காரணம்? வியாதியினிமித்தமாக உண்டாகும் பயம், இனி என்னவாகுமோ என்ற அங்கலாய்ப்பு, அரவணைப்பிற்காக ஏங்கும் ஏக்கம், அது கிடைக்காததினால் உண்டாகும் வெறுப்பு, இப்படி அநேக காரணங்களைக் கூறலாம். பிரியமானவர்களே, இப்படியே தமது பிள்ளைகள் வேதனைப்படுவார்கள் என்பதால்தான் நாம் இப் பாதையில் நடப்பதற்கு முன்னமே ஆண்டவர் தாமே நடந்து, நாம் அனுபவிக்கக்கூடிய தனிமையைத்

தாமே அனுபவித்தும், அதனை மேற்கொண்டவராக இன்று நமக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார். அவரை அண்டிக்கொள்வதை விட்டுவிட்டு, நாம் தனியே நின்று கலங்கலாமா? நாம் அவரைக் கிட்டிச்சேரும்போது, பலவழிகளிலும் அவர் நம்மைச் சந்திக்கிறார்.

**1. மனுஷர்மூலமாக....**

நான் வியாதிப்பட்டிருந்த ஆரம்ப நாட்களிலே இத் தனிமை என்ற அரக்கனால் அதிகமாகத் தாக்குண்டேன். பல அன்பானவர்களும் வசதிகள் பலவும் இருந்தும், பயமும் வெறுமையும் சேர்ந்து பெருமதிலாக எழுந்து, பிறரிடமிருந்து என்னைப் பிரித்துவிட்டிருந்தது. ஆனால் யோர்தான் நதியின் அற்புத சத்தியம் என்னை எப்போது ஆட்கொண்டதோ, அப்போ திருந்து என்னோடேகூட ஒருவர் இருக்கின்ற உணர்வு நிச்சயமானது. அதனை உறுதிப்படுத்துவதுபோன்று பல தேவபிள்ளைகள் மூலமாக தேவன் என் தனிமையை முற்றிலும் நீக்கிவிட்டிருந்தார்.

முதலாவதாக, என்னை ஆரம்பத்திலிருந்தே தூக்கிச் சுமந்த என் அருமைச் சகோதரி ராணி, அவரது கணவர் திரு மதியாபரணன் இவர்களுக்காக என் தேவனைத் துதிக்கிறேன். அவர்களது அன்பு என்னைத் திக்குமுக்காடவைத்ததை மறுக்க முடியாது. வெளிநாடுகளில் இருந்த என் சகோதரர்கள் என்னை பார்ப்பதற்காகவே வந்தார்கள் என்பது என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. என் பெற்றோர் அருகில் இல்லாதபோதும், அக் குறைவையெல்லாம் நிறைவுசெய்வதுபோல என்னைத் தாங்கிக் கொண்ட என் அன்புச் சகோதரரின் அன்பும் ஆதரவும் ஆறுதலும் நான் சுகமடைவதற்கு அடிகோலியது என்பேன். இக் குடும்பத்தில் பிறப்பதற்கு எனக்கு அருள்புரிந்த தேவனை நன்றியோடே துதிக்கிறேன்.

அடுத்ததாக, அறிமுகம் இன்றி எதுவும் செய்யமுடியாத இக்காலத்தில், முன்பின் அறிமுகமில்லாதவர்களாயினும், அதி சிறந்த அன்பான டாக்டர்கள் என்னைப் பார்வையிட தேவன் அருள்செய்தார். அவர்கள் என்னைப் பார்வையிட வந்த போதெல்லாம் எனக்கும் உற்சாகம், அவர்களுக்கும் சந்தோஷம். இதுவும் தேவகிருபையே. எதையுமே மறைத்து விடாமல், சகலத்தையும் என்னுடனும் கலந்து ஆலோசித்து, சிகிச்சையை மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது. நாளடைவில் நான் பேசக்கூடாத நிலையில் உயிருடன் போராடிக் கொண்டிருந்தபோதும், அவர்களது அன்பும் ஆதரவும் மருத்துவரீதியாக மாத்திரமல்லாமல் உளரீதியாகவும் என்னைப் பெலப்படுத்தியது. என்னை நோயாளியாக அல்லாமல், சொந்தப் பிள்ளையைப் போல கவனித்த ஒவ்வொரு டாக்டர்களுக்காகவும் என் தேவனை நன்றியோடே துதிக்கிறேன்.

தயா, கருணா என்ற இரு ஆஸ்பத்திரி ஊழியர்களை மறக்கவே முடியாது. பகல் இரவாக இவ்விருவரும் மாறி மாறி என்னைப் பராமரித்தார்கள். தேவையேற்பட்ட வேளைகளிலெல்லாம் என்னைத் தூக்கி தம் மார்போடு அணைத்துக்கொள்ளவும் அவர்கள் தயங்கவில்லை. 'டேடன்ஸ்' தனியார் மருத்துவமனையிலும், கொழும்பு தேசிய மருத்துவமனையின் முப்பதாம் எண் வார்டிலும் பணிபுரிந்த அத்தனைபேருமே எனக்குக் காட்டிய அன்பில் என் கர்த்தரின் நேசத்தைக் கண்டேன். அந்நாட்களிலே என் சகோதரி வீட்டிலே பணிபுரிந்த கார் ஓட்டுனருக்காகவும் என் தேவனைத் துதிக்கிறேன்.

இப்படியாக எல்லோருடைய கண்களிலும் எனக்குத் தயை கிடைத்தது தேவனுடைய சுத்தமான கிருபையே. மாத்திரமன்றி அநேக நண்பர்கள், அநேக அன்பர்கள், என்று அநேகர் என்னைப் பார்க்கவந்தார்கள். இதற்கெல்லாம் நான் எம்மாத்திரம்! குறிப்பாக 'மம்சி' என்று செல்லமாக அழைக்கப்படும் திருமதி இராமநாதனையும், (இப்போது அவர் கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.) 'ஸ்பொன்ஸ்' என்று நாம் செல்லமாக அழைக்கும் திருமதி கருணைநாயகத்தையும் அவர்களது வீட்டாரையும் என்னால் மறக்கமுடியாது. என் சிறு வயதிலிருந்தே என் நண்பியாக இருந்து வந்த திருமதி ராஜி ஆனந்தப்பா அவர்கள் என்னில் காட்டிய அன்பு ஒரு தனிரகம். என் சகோதரியின் குடும்ப நண்பர்களான திரு, திருமதி சுந்தரேசன் அவர்களுநம் என்னில் மிகுந்த பரிவு காட்டியதை நினைவுகூருகிறேன்.

இன்னும் குறிப்பாக தேசிய மருத்துவமனையில் முப்பதாம் வார்டிலே அந்நாட்களிலே பணிபுரிந்த வைத்தியரும், மருத்துவ பயிற்சி மாணவர்களும் என்னில் காட்டிய கவனமோ ஆச்சரியமானது. மேலும் பெயர் குறிப்பிடப்படாத அநேகர் மரணத் தருவாயில் இருந்த என்னைப்பார்க்க வந்தது மிக ஆறுதலாக இருந்தது. பெலனற்று, சோர்வுற்று, அநேக ஊசிகள் ஏற்றப்பட்டதினால் நலிவுற்றுக்கிடந்த என் கைகளை அன்போடு வருடிவிட்ட சகோதரன் தங்கக்கோன் குடும்பத்திற்காகவும் என் தேவனைத் துதிக்கிறேன். இப்படியாக பல சகோதர சகோதரிகளுக்கூடாக என் தேவன் என் தனிமையில் எனக்கு உறவானார். இவர்கள் யாவருக்கும் நான் என்ன பதில் செய்வேன்!

✸ முதலாவதாக இவர்களது நித்திய சந்தோஷத்திற்காக ஜெபிப்பதுவும் உழைப்பதுமேயன்றி வேறெதுவும் ஈடாகாது.

✸ அடுத்து அவர்கள் மூலமாக என் தேவன் எப்படி என் தனிமையில் எனக்கு உறவானாரோ, அப்படியும் அதற்கு அதிகமாகவும், தனிமையில் உழல்பவர்களின் வாழ்வில் நானும் உறவாக வேண்டிய அவசியத்தையும் உணர்ந்துகொண்டேன்.

**2. தேவஊழியர்கள் மூலமாக...**

ஜெபத்துடன் ஆரம்பித்த மருத்துவ சிகிச்சை இறுதிவரையிலும் ஜெபத்துடனேயே தொடர்ந்தது. மெய்யாகவே நான் பாக்கியவதி என்பேன். ஏனெனில் இந்த எளியவளுக்காக பாரத்தோடே ஜெபிப்பதற்காக அநேகம் தேவபிள்ளைகளை தேவன்தாமே எழுப்பிவிட்டிருந்தார். ஒருபோதும் அறிந்திராத அநேகர் வந்து ஜெபித்துவிட்டுப் போனார்கள். சபைப் பாகுபாடின்றி அநேக சபைகளிலே எனக்காக ஜெபித்ததாகக் கேள்வியுற்றேன்.

குறிப்பாக சத்தியவசனம் நிலையத்திலே காலைத் தியான வேளையிலே தினந்தோறும் எனக்காக ஜெபித்ததாகக் கேள்வியுற்று மெய்யாகவே மெய்சிலிர்த்துவிட்டேன். ஞாயிற்றுக்கிழமை வந்தால் சத்தியவசன தமிழ்ப்பகுதி முன்னாள் பொறுப்பாளராகக் கடமையாற்றிய மேரி சூசைபிள்ளை (தற்போது திருமதி மேரி செல்வரட்ணம்) அவர்கள் தவறாமல் மருத்துவமனைக்கு வந்துவிடுவார். அவர்மூலமாக நான் பெற்ற ஆறுதலுக்காக ஆண்டவரைத் துதிக்கிறேன். இன்னும் வசந்தா சாமுவேல், சாந்தி பெர்ணான்டோ, ஜெபி பீடில் உட்பட சகல ஊழியர்களுக்காகவும் கர்த்தருக்கே நன்றிகள். கலா அக்கா என்று அன்புடன் நான் அழைக்கும் சகோதரி மூலமாக எனக்குக் கிடைத்த ஒவ்வொரு ஆசீர்வாதங்களுக்காகவும் என் ஆண்டவரைத் துதிக்கிறேன். அவர், ஒரு தாயைப்போலிருந்து தேவனுக்குள் என்னை உறுதிப்படுத்தியதை மறக்கமுடியாது.

திருமதி மெடோஸ் அம்மா அவர்களின் பாசமும் ஜெபமும் ஒப்பிடமுடியாதவை. மேலும் இத் தாயாரின் மகளும், சத்தியவசன நிர்வாக அதிகாரி திரு. ரிச்சர்டு ஆபிரகாம் அவர்களின் மனைவியுமாகிய ப்ளோரி அக்கா அவர்கள், குறிப்பாக இருமணிநேரம் என்னுடன் கழித்த அந்த குறிப்பிட்ட நாள் ஒரு பொன்னான நாள். அன்று அநேக வாக்குத்தத்தங்களை அழகாக எனக்குப் புரியவைத்தார்கள். “என் காலங்கள் உமது கரத்தில் இருக்கிறது” (சங்.31:15) என்ற வார்த்தை என்னுள்ளத்தை ஊடுருவியது. ஆம்! என் காலங்கள் தேவகரத்தில் இருப்பதால் வியாதியோ வியாகுலமோ, பிசாசோ பிரச்சனைகளோ எதுவுமே ஒன்றும் செய்யமுடியாது என்ற உறுதி அப்போது எனக்கு உண்டாயிருந்தது.

தேவபிரசன்னமும் அவரது அளவற்ற கிருபையும் என்னைச் சூழ்ந்திருந்தது. இல்லையானால் அந்த மரணப் போராட்டத்திலும், தேவபிள்ளைகளுடன் இணைந்து தேவனைத் துதித்திருக்க முடியுமா? பார்க்க வருபவர்களின் கண்கள் திறவுண்டிருக்க முடியுமா! இப்படியே கர்த்தர் என்மேல் பாராட்டிய அன்புக்கு எல்லையில்லை. என் வேதனையின் மத்தியில் தேவனைத் தள்ளிவிடாமலும், மரணப்பள்ளத்தாக்கில் மகிபனைத் தூஷித்துவிடாமலும், தேவனைச் சந்திக்க எந்நேரமும் ஆயத்தமாயிருக்கும்

படிக்கு என்னைப் பெலப்படுத்திய அத்தனை ஜெபவீரர்களுக்காகவும் என் தேவனைத் துதிக்கிறேன்.

இந்த நாட்களிலே பிறருக்காக நான் ஜெபிக்கவேண்டிய அவசியத்தை உணர்ந்தேன். அதிலும் தினந்தோறும் மரணத்தோடு போராடுகின்ற மக்களுக்காக ஜெபிக்கவேண்டியது மிக அவசியமாகும். ஏனெனில் திரும்பவும் இன்னொரு தடவை அவர்களுக்காக ஜெபிக்கத் தருணம் கிடைக்காது போய்விடவும் கூடும். அழிந்து கொண்டிருக்கிற ஆத்துமாக்களுக்காக இணைந்து ஜெபிப்போம். வியாதியினால் அல்லலுறும் மக்களைச் சென்று விசாரித்து, அவர்களது தனிமையைப் போக்குவோம்.

நான் சுகமடைந்து இரு ஆண்டுகளின் பின்னர் இரு சிறுநீரகங்களும் பழுதடைந்த நிலையில் இருந்த 19 வயதுள்ள ஒரு வாலிப சகோதரியைப் பார்ப்பதற்காக ஒருமுறை மருத்துவமனைக்குச் சென்றேன். அப்போது அவளைப் பார்ப்பதற்காக இன்னுமொரு தம்பதியினரும் வந்திருந்தனர். வந்திருந்த சகோதரனுடைய வாயிலே உதிர்ந்த சொற்கள் நாம் நிற்குமிடம் மருத்துவமனை என்பதையே மறக்கச்செய்தது. அந்த வாலிபப் பெண்கூட வாய்விட்டு கலகலவென்று சிரித்ததைப் பார்த்தபோது, இதுவும்கூட ஒரு ஊழியம்தான் என்று நினைத்தேன்.

பிரியமானவர்களே, நாம் எப்போதும் ஒரேமாதிரியே இருப்போம் என்பதற்கு என்ன நிச்சயம்! நமக்கும் தேவைகள் ஏற்படலாம், வியாதிகள் வரலாம். யாராவது என்னோடே பேசமாட்டார்களா? நான் தனித்து விட்டடேனே! என்று ஏங்கும் தருணங்களும் வரலாம். நாம் சுகமாகவும், சுமாராகவும் ஜீவிக்கும்போதே, பிறருடைய வேதனையில் பங்குகொள்வது நல்லது. தன்னை நீதிமானாகக் காண்பிக்க விரும்பிய நியாயசாஸ்திரி இயேசுவிடம் ஒரு கேள்வி கேட்டான். எனக்குப் பிறன் யார்? கேள்வி கேட்டவனுக்கு இயேசு பதிலுரைத்தாரா? இல்லை. பதிலுக்கு ஒரு கதை சொன்னார். அதனை ஒரு கேள்வியுடன் முடித்தார்.

கதை என்னவெனில்: ஒருவன் பயணம் போய்க் கொண்டிருந்தான். வழியில் கள்வர்கள் அவனை அடித்து, கொள்ளையிட்டு, குற்றுயிராக விட்டுவிட்டுப் போய்விட்டனர். அந்தவழியே ஆலயத்தில் பணிபுரியும் ஒரு ஆசாரியன், பின்னர் ஆலயப்பணிகளிலே பங்கேற்கும் ஒரு லேவியன் என்று இருவர் வந்தனர். ஆனால் அவர்களோ இவனைத் தொட்டால் அசுத்தம் என்று தள்ளிப்போய்விட்டனர். அந்த யூதரால் தள்ளிவைக்கப்பட்டிருந்த ஒரு சமாரியனும் அவ்வழியே வந்தான். அவனோ இவ்வழிப் போக்கனுக்கு இரங்கி, இவன் காயங்களைக் கட்டி, தூக்கிக்கொண்டுபோய் ஒரு 'சத்திரத்திலே' அவனை விட்டு, செலவுக்குப் பணமும் கொடுத்துப் போனான். "இப்படியிருக்க கள்வர் கையில் அகப்பட்டவனைவிட்டு, விலகிச் சென்றவர்கள்

இருவர், உதவிசெய்தவர் ஒருவர், இந்த மூன்றுபேரில் எவன் பிறனாயிருந்தான், உனக்கு எப்படித் தோன்றுகிறது?'' (லூக்.10:25-37) இதுதான் கேள்வி. இன்று ஆண்டவர் நம்மிடமும் இதே கேள்வியைக் கேட்பாராயின் நமது பதில் என்ன? பிரியமானவர்களே, 'குறையின்றி ஜீவிப்பவன் அல்ல, தேவையிலுள்ளவனே நமக்குப் பிறனாயிருக்கிறான். அப்படிப்பட்டவனுக்கு உதவுபவனே அவனுக்குப் பிறனாயிருக்கிறான்

ஆகவே, இயேசுவின் நாமத்திலே வியாதிப்படுக்கைகளை நாடிச் செல்லுவோமா! நாம் ஒவ்வொருவருமே தேவனுடைய ஊழியராக அவர் களோடே இணைந்து ஜெபிப்போமா! மரணபயத்தோடே போராடுகின்ற பிள்ளைகளை ஜெபத்தில் தாங்கி, அவர்களைத் தேற்றரவாளரிடம் வழிநடத்துவோமா! உங்களுக்கு பிரசங்கிக்கத் தெரியத்தேவையில்லை. பரிவுள்ள ஒரு பார்வை, அன்பான ஒரு பேச்சு, மாயமற்ற ஒரு அரவணைப்பு இவை போதும். இவ் ஊழியத்திலுள்ள மனரம்மியமும் சந்தோஷமும் அதனை அனுபவித்தவர்களுக்குத்தான் புரியும்.

ஒரு சகோதரி இப்படியாகச் சொன்னாள்: "கடந்த நாட்களில் புற்றுநோய் மருத்துவமனைக்குச் சென்றிருந்த வேளையில் புற மதத்தைச் சேர்ந்த இரு சகோதரிகளுக்கு தேவ அன்பை எடுத்துச்சொல்லும் வாய்ப்பு ஏற்பட்டது. அவர்களில் ஒருவர், நான் சொல்லிக்கொடுத்த பாவமன்னிப்பு ஜெபத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருந்தார். சில நாட்கள்தான், இருவரும் மரித்துவிட்டார்கள்.'' இந்த அனுபவத்தைச் சொல்லும்போதே அந்த சகோதரியின் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது. "நிச்சயமாகவே அவ்விருவரும் ஆண்டவரை ஏற்றுக்கொண்டுதான் மரித்தார்கள்'' என்று சொன்னார்.

### 3. வசனத்தின்மூலம்....

இப்படியாக கர்த்தர் தமது தாசர்கள்மூலம் நம்மைத் தேற்றுகிறார். ஆனால் நாமோ பலவேளைகளிலும் அந்த மனுஷரை மாத்திரம் பற்றிக்கொண்டு, அவர்களை அனுப்பிய தேவனை மறந்துவிடுகிறோம். இதனால் பல விபரீதங்கள் ஏற்பட்டுவிடுவதுமுண்டு. ஏனெனில் மனம் மாறாதவனாக நிலைத்துநிற்க மனுஷன் கடவுளல்ல. அதேவேளை மனம்மாற தேவன் மனிதனுமல்ல. ஆகவே எந்தவொரு காரியத்தையும் கர்த்தர் தமது வசனத்தின் மூலமாக உறுதிசெய்கிறவராயிருக்கிறார். "*நான் மிகவும் உபத்திரவப்படுகிறேன், கர்த்தாவே, உம்முடைய வசனத்தின்படியே என்னை உயிர்ப்பியும்*'' என்று சங்கீதக்காரன் ஜெபித்ததை வாசிக்கிறோம். (சங்.119:107) அவனுக்கு ஏற்பட்டது சரீர வேதனையோ, சத்துருவினாலுண்டான உபத்திரவமோ நாமறியோம். எதுவாயினும் தான் தப்பித்துக்கொள்ளும் வழியைத் தேடாமல், தேவனுடைய வார்த்தையைப் பிடித்துக்கொண்டு ஜெபிப்பதை நாம் கவனிக்கலாம். தேவனுடைய வசனம் தன்னை உயிர்ப்பிக்கும் என்ற நம்பிக்கை இருந்ததால், "*முடிவுபரியந்தம் இடைவிடாமல்*

*உம்முடைய பிரமாணங்களின்படி செய்ய என் இருதயத்தைச் சாய்த்தேன்"* என்று தொடர்ந்து ஜெபிக்கிறான். (சங்.119:112)

மரணவாசல்வரையிலும் தள்ளுண்டவர்களும்கூட மனங்கசந்து கூப்பிடும்போது, *"அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி, அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார்."* (சங்.107:17) ஆம், அவரது வார்த்தை வல்லமையுள்ளது. இல்லையானால் யூதனல்லாத நூற்றுக்கதிபதி இயேசுவை வீட்டுக்கு அழைக்காமல், ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும் என்று கேட்டிருப்பானா? (மத்.8:8) இயேசுவும்கூட அதிக வார்த்தைகள் பேசாமல், நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்று சொல்லி அனுப்புவாரா! அந்த நேரமே நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன் சுகமானான் அல்லவா!

தேவவார்த்தைகள் நம்மை மரணக்கட்டிலிருந்து தப்புவிக்கிறது. நமது சரீரங்களை உயிர்ப்பிக்கிறது. ஆகவே, *உம்முடைய வசனத்திற்குக் காத்திருக்கிறேன்,* என்று எனக்குள்ளாக ஜெபித்தேன். *என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது,* என்ற வசனம் எனக்குள்ளே ஒருவித தைரியத்தை அளித்திருந்தது. கர்த்தரின் சித்தமின்றி பிசாசு என் காலத்தைப் பறித்துவிட முடியாது என்ற நிச்சயம் எனக்குள்ளாக வளரத்தொடங்கியது. வாழ்வா? சாவா? என்பதல்ல. என் இயேசுவை நான் எப்படி வெறுங்கையோடே சந்திப்பது என்பதுதான் என் பிரதானமான பிரச்சனை. எனக்குள் எஞ்சியிருக்கும் 20%மான சிறுநீரகம் 2% மளவிற்குக் குறைந்துவிடும் முன்பதாக, குறைந்தது 200 பேரையாவது என் இயேசுவின் அன்புக்குள் நடத்திவிடவேண்டும் என்ற வாஞ்சை எனக்குள்ளாக வளர ஆரம்பித்தது.

நாட்கள் நகர்ந்தன. சரீர உபத்திரவம் பன்மடங்காகியது. ஆறுதலாக படுக்கையில்கூட படுக்கமுடியாத இக்கட்டான நிலைமை உண்டாயிருந்தது. பேசமுடியவில்லை, ஜெபிக்க முடியவில்லை. அடிக்கடி நினைவு மங்கிவிடுவது போலிருந்தது. மூச்சை யாரோ இறுகப் பிடித்திருப்பதுபோன்ற உணர்வு. அந்த இரவு, அது மறக்கமுடியாத இரவு. எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. தேடினேன், என் ஆண்டவரைத் தேடினேன். எல்லாமே வெறுமையாகத் தெரிந்தது. நினைவு மங்கியது. வார்த்தையைத் தேடினேன். ஒன்றும் என் நினைவில் தோன்றவில்லை. மெய்யாகவே அது ஒரு பயங்கரமான அனுபவம். எதுவும் இல்லாவிட்டாலும், ஆண்டவரும் அவருடைய வார்த்தையும் இல்லாமல் ஒரு விநாடிகூட நாம் ஜீவிக்க முடியாது, ஜீவிக்கவும் கூடாது. என்னால் கதறவும் முடியவில்லை, கண்ணீர் விடவும் முடியவில்லை. சுருங்கக்கூறின், நான் இருப்பதே எனக்கு மறந்துவிட்டிருந்தது. எங்கும் இருள் சூழ்ந்திருந்தது.

ஆனால் இன்று அதனை நினைக்கும்போது என் தேவனைத் துதிக்கிறேன். இப்படியான தனிமையில் நான் தள்ளப்பட்டதனாலேயே என்

இயேசுவின் கிருபைநிறைந்த வழிநடத்துதலை நான் அதிகமாக அனுபவிக்க நேர்ந்தது. தம் பிதாவினாலே கைவிடப்பட்டவராக சிலுவையில் தொங்கிய ஆண்டவர், தம் பிள்ளைகளின் வேதனையை அலட்சியப்படுத்துவாரோ! இல்லையே! இருள்மேகம் மறைப்பதனால் சூரியனே மறைந்துவிட்டது என்று கூறலாமோ! எதிர்பாராத நேரத்திலே இருள் விலக ஆரம்பித்தது. *உம் கோலும் தடியும் என்னைத் தேற்றும்* என்று யாரோ கூறுவதுபோலக் கேட்டுத் திடுக்கிட்டேன். என் உள்ளத்தின் ஆழத்திலே ஏதோ ஒரு சத்தம் ஒலித்தது. "ஓ, என் மேய்ப்பரே!" என்று கதறினேன். சத்தம் வெளிவரவில்லை. *மரணஇருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன். தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்,* என்று சொல்லி முடித்தேன்.

பிரியமானவர்களே, இது வெறும் கட்டுக்கதையல்ல. கற்பனையும் அல்ல. பாவியான என்னை மேன்மைப்படுத்துவதற்கு இதை நான் எழுதவும் இல்லை. மரணம் ஒன்றுதான் நம் வாழ்வில் நிகழக்கூடிய தவிர்க்கமுடியாத, நிச்சயமான, ஒரு காரியமாகும். அதற்கு மிஞ்சியது இவ்வுலகில் எதுவும் இல்லை. இம் மரணம் எந்தவிதத்தில் நேர்ந்தாலும், அந்த இருளின் மத்தியிலும் நம்மைத் தாங்கிக்கொள்ள நமக்கு ஒருவர் உண்டு என்பதை உறுதிப்படுத்துவதற்கே இத்தனை வெளிப்படையாக இதனை எழுதுகிறேன். பிரியமான சகோதரனே, சகோதரியே, மருத்துவர் கைவிட்ட நிலையில் மரணம் நிச்சயமானாலும் பயப்படவேண்டாம். இயேசு உன்னுடன் இருப்பார்.

முன்னொரு தடவை கேள்விப்பட்ட ஒரு சம்பவத்தை நான் அடிக்கடி நினைவுகூருவதுண்டு. அது தேவஊழியனாகிய எச்.ஸ்பர்ஜன் அவர்களது வாழ்விலே நடந்தது. ஒருதடவை அவருக்கு ஒரு இக்கட்டான நிலைமை உண்டாயிருந்தது. அந்த வேளையிலே அவர், எலியாவின் தேவன் எங்கே? எலிசாவின் தேவன் எங்கே? என்று உரத்த சத்தமாய் கூப்பிட்டாராம். அவ் வேளையிலே தேவவல்லமை அவரை நிரப்ப, அதிசயம் நிகழ்ந்தது என்று ஒரு பிரசங்கியார் சொல்லக் கேட்டிருந்தேன். என் வேதனையின் மத்தியிலும் இந்தச் சம்பவம் ஞாபகத்தில் வரவும், ஸ்பர்ஜனின் தேவன்தானே என் தேவனும் என்று நினைத்துக் கொண்டு, ஜெபத்துடன், ஸ்பர்ஜனின் தேவன் எங்கே? என்று உள்ளத்தில் கதறினேன். அந்த தேவன் ஒரு புழுவாகிய எனது கூக்குரலைத் தள்ளிவிடவேயில்லை. *தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர். உமது கோலும் தடியும் என்னைத் தேற்றும்,* என்ற வார்த்தையே இறுதிவரையிலும் என் ஜீவனாயிருந்தது. நான் சோர்வுற்ற வேளையிலெல்லாம் அவரது கோலிலே சாய்ந்து கொள்வேன். என்னைக் கீழே விழும்படி தள்ளிவிட முயற்சித்த சத்துருவின் சகல முயற்சிகளையும் தேவனுடைய தடி தகர்த்துப் போட்டது. பிரியமானவர்களே, கலங்கவேண்டாம். தேவனுடைய வார்த்தை ஜீவனுள்ளது. அது நம்மைக் குணப்படுத்தும். அது நம்மை உயிர்ப்பிக்கும். அது நமது நினைவுகளைத் தூய்மைப்படுத்தும்.

தனிமையிலும், நமது புறச் செவிகள் அடைபட்டு நினைவு மங்கிவிடும்போதும், அந்த வார்த்தை நமக்கு ஜீவனாயிருக்கும்.

### 4. கர்த்தர்தாமே உறவானார்....

நாம் கேட்டு கிரகிக்கக்கூடிய நேரத்தில் மனுஷர் மூலமாகவும், இருளுக்குள் தள்ளப்பட்டுத் தள்ளாடும்போது தமது வசனத்தின்மூலமாகவும் நம்மோடு உறவாடும் தேவன், அந்த வசனத்தைக்கூட நினைவுபடுத்தமுடியாத இறுதிவேளையிலும் நம்மைத் தாங்குகிறார். "மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும், நான் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்." என்று தாவீது அன்று பாடினார். 'மரணப்பள்ளத்தாக்கு', இதனூடாக நாம் ஒவ்வொருவரும் ஒருநாள் கடந்துசெல்லவேண்டியவர்களே. ஆனால் நாமோ பயப்படத்தேவையில்லை.

நான் வியாதிப்பட்டிருந்த நாட்களின் ஆரம்பத்தில் நானாகவே நடந்து திரிந்தபோதும், நாளடைவில் சக்கர நாற்காலியிலும், பின்னர் தள்ளுவண்டியில் படுத்த நிலையிலும், இறுதியில் அசையமுடியாத நிலைமைக்குள்ளும் தள்ளப்பட்டேன். அரைத் தேக்கரண்டி கஞ்சித் தண்ணீர் தொண்டைவழியே இறங்குவதற்கு பத்து நிமிடங்கள் எடுத்தது. ஆனால் உள்ளே இறங்கியது வெளியேறுவதற்கு பத்து விநாடிகளும் அதிகம். கை கால்களைக்கூட சுயமாக அசைக்கமுடியாத நிலைமையில் தத்தளித்த நாட்கள் அவை. மொத்தத்தில் நான் ஒரு அசையாத ஜடம்போலிருந்தேன்.

அந்நாட்களில் என்னைப் பார்ப்பதற்கு யார் வந்தாலும் எனக்கு சந்தோஷமாயிருக்கும். அதிலும் என் அக்காவைப் பார்க்கும்போதெல்லாம் என் அம்மாவின் நினைவு வரும். அவர் வந்தவுடன் முதல் நாள் நடந்தவை யாவையும் ஒன்றும்விடாமல் கூறிவிடுவேன். ஆனாலும் எனக்குள் பலத்த போராட்டம்! அதிகரித்த சரீர வேதனையோடு, டயாலிஸிஸ் வைத்தியமும் சேர்ந்து, என்னை அதிக பாடுபடுத்தியது. நாளுக்கு நாள் வேதனை அதிகரித்தது. உபத்திரவம் தாங்கிக்கொள்ள முடியாதிருந்தது. அந்த நாள் மறக்கமுடியாத நாள். பலத்த வேதனை. பேசவும் முடியாத நிலைமை. வந்தவர்களும் சென்றுவிட, சூரியனும் மறுபக்கம் மறைந்துவிட, இருளின் போர்வைக்குள் உலகமும் உருண்டுவிட, அந்தகாரம் என்னைச் சூழ்ந்து கொண்டது. கண்களை இறுக மூடிக்கொண்டேன். காரிருள் சூழ்ந்த அந்த இரவு தூக்கமின்றி நீண்டுகொண்டே இருந்தது.

அது ஒரு தென்னஞ்சோலை. அதன் நடுவே ஒரு சின்னஞ்சிறிய குடிசை. அங்கே யாரோ நின்றிருந்ததைக் கண்ட நான் பேச முற்பட்டேன். முடியவில்லை. என் நாவை அசைக்க முடியவில்லை. மிகுந்த பிரயத்தனத்தின் பின்னர் என் கண்களைத் திறந்தேன். நான் கண்டது கனவு என்பதை உணர்ந்து, என்னுடன் நின்ற பெண்ணை அழைத்தேன். உதடுகளும்

அசையவில்லை. சத்தமும் வெளிவரவில்லை. என் நாவு வீங்கி என் வாயை நிறைத்திருந்ததை உணர்ந்தேன். அப்போது அதிகாலை 2.10 மணியிருக்கும். என் கண்கள் குளமாயின. என் சரீரம் சக்தியை இழந்துவிட்டிருந்தபோதும், வாயினாலும் காதுகளினாலும் கண்களினாலும் பிறரோடு உறவை வளர்த்துக் கொண்டிருந்த என்னுடைய நாவு கட்டப்பட்டபோது, கண்களும் தமக்கு இனி வேலை இல்லையென்பதுபோல மூடிக்கொண்டன. இதயமோ வெறுமை யாயிருந்தது. சிந்திக்கவும் சக்தி இருக்கவில்லை.

அடுத்த நாள் விடிந்தது. பேச்சு மூச்சின்றி எந்தவிதமான சலனமுமின்றி கிடந்த என்னைப் பார்த்த வைத்தியர்களும் தாதிமாரும் உற்றார் உறவினரும் அமைதியானார்கள். எனது அறைக்குள் என்றுமில்லாத பேரமைதி உண்டாயிருந்தது. வந்தவர்கள் யாவரும் கண்ணீருடன் திரும்பினர். நான் சாகமாட்டேன் என்று சத்தம்போட்டு அவர்களுக்குச் சொல்லத் துடித்தேன். முடியவில்லை. சில இந்து சகோதரிகள் என்மேலுள்ள அளவற்ற அன்பின் நிமித்தம் என் வேதனையைப் பொறுக்கமுடியாதவர்களாக, நான் சீக்கிரம் மரித்துவிட்டால் நல்லது என்று நினைத்து, தமது தெய்வங்களுக்கு அர்ச்சனை செய்தனர்.

இவர்களுக்கெல்லாம் என்னால் எந்தவித விளக்கமும் கூற முடியவில்லை. சரீரம் முழு வலுமையையும் இழந்தவிட்டிருந்த போதும் என் ஆத்துமா அதிக பெலன்கொண்டு விழித்திருந்ததை எவரும் அறிய வாய்ப்பு இருக்கவில்லை. இப்போது எந்த மனுஷரும் எனக்கு உதவமுடியாத நிலையில் இன்னும் அதிகமாக ஆண்டவரோடே இடைவிடாமல் உறவாட ஆரம்பித்தேன். சிறுபிள்ளையைப்போல ஆண்டவரோடே பேச ஆரம்பித்தேன். ''என் இயேசுவே உம்மோடே மாத்திரம்தான் நான் பேசவேண்டுமா? அதுதான் என் நாவைப் பேசமுடியாதபடி செய்துவிட்டீரா? சரி, இனி உம்மோடு மாத்திரமே பேசுவேன். ஆமென்.'' என்று ஜெபித்த மறுகணமே ஒரு புதுவித ஆறுதலும் சமாதானமும் என்னை நிரப்பியதை உணர்ந்தேன். அந்நிமிடத்தி லிருந்து ஆண்டவருக்கு அதிக தொந்தரவு கொடுக்க ஆரம்பித்தேன். ''ஆண்டவரே, தலை வலிக்கிறது; ஆண்டவரே, வாந்தி வருகிறது'' என்று ஒவ்வொரு விநாடியும் எனக்குள் பேச ஆரம்பித்தேன். ஓ! அந்த நாளின் அனுபவத்தை எழுத்தில் வடித்துவிட முடியாது. ''ஆண்டவரே, கடந்த ஒன்றரை மாதங்களாக இந்த வாந்தியை நிறுத்துவதற்கு வைத்தியர்கள் எடுத்த அத்தனை முயற்சிகளும் வீணாயின. ஆனால் உம்மால் இதைக் குணப்படுத்தக் கூடுமே.'' என்று கண்ணீரோடு முனகினேன்.

வியாதியோடு போராடும் என் அன்புச் சகோதரர்களே, நம் தேவன் கல்லுமல்ல மண்ணுமல்ல, கேட்கக்கூடாதபடிக்கு அவர் செவிகள் மந்தமாகிவிடவுமில்லை, நம்மால் தாங்கக்கூடாத பாரத்தை நம்மேல் அவர் சுமத்துகிறவரும் அல்ல. மறுநாள் காலையில் எழுந்தபோது ஏதோ ஒருவித

மாற்றத்தை உணர்ந்தேன். அன்றிலிருந்து எனக்கு வாந்தி ஒரு பிரச்சனையாக இருந்ததே இல்லை. என் வைத்தியர் ஆச்சரியப்பட்டார். வாந்திக்குக் காரணமான விஷயங்கள் இரத்தத்தில் இன்னும் நிலைகொண்டிருக்க எப்படி வாந்தி நின்றது என்பது அவரது கேள்வி. புறமதத்தைச் சார்ந்த அவருக்கு என் ஆண்டவரின் மகிமையைக் கூறியும், புரியாதபடியினாலே ஒரு புன்சிரிப்பை உதிர்த்துவிட்டு, அவர் கடந்துசென்றுவிட்டார்.

அந்த மரணநேரத்திலும் கர்த்தருக்குள் என்னைத் திடப்படுத்தவும் அவரையே இறுகப் பற்றிக்கொள்ளவும் இச் சம்பவம் எனக்கு வகை செய்தது என்றால் அது மிகையாகாது. அந்த வேளையில் தாவீதை நினைத்துக் கொண்டேன். சவுலுக்குப் பயந்து, உயிருக்குப் பயந்து, காடு மேடெல்லாம் அலைந்து திரிந்தவேளை, சிக்லாகு என்ற இடத்திலே மனைவி மக்கள், கூட இருந்தவர்களின் குடும்பத்தினர் யாவரையும் தாவீது இழக்கவேண்டியதாயிற்று. தமது குடும்பங்களை இழந்தவர்கள் தாவீதுக்கு விரோதமாக எழும்பினர். எல்லாப்பக்கத்திலும் நெருக்கப்பட்ட தாவீது, தனித்தவனானான். கலங்கி நின்ற அவனுக்கு ஆறுதல் கூறவும் யாரும் இருக்கவில்லை. அந்த வேளையில் அவன் செய்தது என்ன? *"தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்திக்கொண்டான்"* என்று வாசிக்கிறோம். (1சாமு.30:6)

தாவீதின் தனிமையில் தேவன்தாமே அவனது உறவானார். தனக்கு பேசுவதற்குக்கூட யாரும் இல்லாததினாலே தாவீது தேவனோடே பேசினான். தன் குடும்பத்தாரையும் மற்றவர்களையும் சிறைப்பிடித்துச்சென்ற அமலேக்கியரைப் பின்தொடரலாமா? என்று கர்த்தரிடமே கேட்டான். கர்த்தரும் ஆலோசனை கொடுத்தார். இறுதியில் தாவீது போய் சகலரையும் மீட்டு வந்தான். இதற்காக அவன் ஒரு பெரிய சேனையை அழைத்துச் செல்ல வில்லை, இருநூறுபேரை மாத்திரமே கூட்டிச்சென்று தன்னுடையவர்களை மீட்டு வந்தான். இதன் இரகசியம் என்ன? தனித்துவிடப்பட்ட தாவீது தன் தனிமையை நினைத்து வருந்தி மாண்டுவிடாமல், தன் தேவனையே பற்றிக் கொண்டான். கர்த்தரும் அவனது விண்ணப்பத்தைக் கேட்டு அவனுக்கு உறவானார். வனாந்தரத்தில் தனித்து நின்று கதறிய ஆகாரின் குரலுக்கு செவிகொடுத்த தேவன் அவளது தனிமையைக் கண்டு மனமிரங்கியதையும் நாம் மறக்கலாமா?

வியாதிப்பட்ட வேளைகளில் மாத்திரமல்ல, அன்றாட வாழ்விலும் பலவித சந்தர்ப்பங்களில் தனிமை நம்மை அப்படியே வாரிக்கொண்டு போய்விடுகிறது. குடும்பத்தினரை விட்டுப் பிரிந்து தூர இடங்களில் வசிக்கும் போதும், நண்பர்கள் உறவினர்கள் நம்மைவிட்டுத் தூரம் போகையிலும், நமக்கு அன்பானவர்கள் அருகிலிருந்தும் நம்மைப் புரிந்துகொள்ளா திருக்கும்போதும், மரணத்தினாலுண்டாகும் இழப்பின் மத்தியிலும், வெளியில்

சொல்லமுடியாத பாரங்கள் நம் உள்ளத்தை வருத்தும்போதும், இன்னும் பலவித சந்தர்ப்பங்களிலும் தனிமை நம்மை வாட்டுகிறது. இவ்விதமான நேரங்களில் நம் சிந்தனைகளை இருவழிகளில் திருப்பிக்கொள்வது நல்லது.

1. நம்முடைய தனிமையிலும் நம்மை விட்டுவிலகாத ஒருவர் நம்முடன் இருக்கிறார். எனவே நாமேதான் அவரைக் கண்டு கொள்ளவேண்டும்.

2. தனிமை உணர்வினால் தத்தளிக்கும் நமது ஆத்துமாவின் ஆழத்தை எந்தவொரு மனிதனாலும் தொடமுடியாது, ஆகவே, நம்மை முழுமையும் அறிந்தவராயிருக்கிற நம் தேவனையே முற்றிலும் சார்ந்து நிற்பது நல்லது.

நமது பிதாவுக்கு நாம் வேண்டும். அவரோடு தனித்திருக்கும்படி இத் தனிமையைத் திருப்பிவிடுவோமானால், நமக்கு ஏற்பட்ட இத் தனிமையே நமக்கு ஒரு பரலோகமாக மாறிவிடும். அப்படியிருக்க நாம் ஏன் தனிமையை வெறுக்கவேண்டும்! எந்தவொரு விசுவாசியும் இம்மையிலல்ல, மறுமையிலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் தனித்தவனேயல்ல. அவனோடேகூட ஒருவர் கூடவே நடந்துவருகிறார்.

**சிநேகிதர் கைவிட்டாலும் நம்பிக்கையை இழந்தாலும்**
**அவர் கரம் அணைத்தென்னை தேற்றும் குரல் கேட்கிறதே!**

வியாதியினாலே வருந்துகின்ற சகோதரனே, சகோதரியே, உன் நோவையும் அதன் வியாகுலத்தையும் ஒரு மனிதனால் முழுமையாகப் புரிந்துகொள்ளமுடியாது. ஆனால் அவற்றையெல்லாம் அறிந்தவரும், அனுபவித்தவரும், வெற்றிசிறந்தவருமான ஆண்டவர் உன்னோடேகூட இருக்கிறார். மரணப்பள்ளத்தாக்கென்றாலும் அவரோடு நடப்பது எத்தனை இன்பம் தெரியுமா! சகோதரனே சகோதரியே ஆண்டவரோடுகூட நட! 'தனிமை' என்ற அரக்கன் உன்னைத் தாக்கும்போதெல்லாம் 'உலகத்திலிருக் கிறவனிலும் என்னோடே இருக்கிறவர் பெரியவர்' என்று உரத்த சத்தமாய் கூறு. அப்போது உன் உள்ளம் கர்த்தருக்குள் திடன் கொள்ளும். ஒன்றை நினைவில் வைத்துக்கொள். *நம் மூச்சைவிட நமக்கு மிக அருகில் ஆண்டவர் இருக்கிறார்.*

***நானும் என் தேவனும் தனித்திருப்பதை,***
***நாடும் என் இதயம் களிப்பாகுதே***
***உலகமும் அதன் உவகையும் உவர்ப்பாகுதே,***
***உண்மையாய் தேவனுடன் உறவாகையிலே***
***ஆகவே என் தனிமைக்காய் துதி பாடுவேன்.***
***ஆண்டவரோடென்றும் தனித்திருப்பேன்!***

❖❖❖❖❖❖❖❖❖

# ஒன்றுமில்லாமையில் எல்லாமுமானார்!

*'இன்பமும் துன்பப்புயலும் கலந்ததே வாழ்க்கையாகும். எவனொருவன் வாழ்க்கையின் இன்ப துன்பங்களைச் சகித்து, துணிந்து, அதற்கு முழுமையாக எதிர்த்து நின்று, தனது ஆன்மாவின் அடித்தள ஆழத்திற்கு அது தன் வல்லமையையும், அதன் மறைமுகப் புதிர்களையும், அது தரும் துன்பங்களையும் செலுத்துமட்டும் அதை அனுமதிக்கின்றானோ, அவனே வாழ்க்கையில் நிறைவை அடைந்தவனாவான். இவ்வாறு வாழ்க்கையில் பெற்ற வெற்றி அவனுக்கு அது நித்திய காலமாகச் சொந்தமாயிருக்கும்.*

- சார்ல்ஸ் லூயி ஸ்லாட்டொரி.

ஆனால் சகித்தாகவேண்டுமே! பொறுமையோடு தாங்கி நின்று, ஆத்துமாவின் ஆழம்மட்டும் அப் புயலை அனுமதிக்க வேண்டுமே! அங்கேதானே வெற்றியின் இரகசியமே இருக்கிறது. சாதாரண போராட்டங்களுடனேயே தடுமாறும் மனிதன், தாங்கொணாத வேதனையில் என்ன செய்வான்! அதிலும் மரணப் போராட்டம் என்று வரும்போது மெய்யாகவே அது கடினம்தான். என்றாலும் அது முடியும் என்று சாதித்த அநேகருடைய வாழ்க்கை வரலாறுகள் நமக்கு முன்னே சவால்களாக வைக்கப்பட்டிருக்கின்றன. துன்பங்களை ஆத்துமாவின் அடித்தளத்திற்கு அனுமதிப்பது என்பது, அந்த இருளுக்கூடாக பொறுமையோடு கடந்து செல்லுவதிலேயே இருக்கிறது.

துன்பங்கள் பல ஆயுதங்களைக்கொண்டு நம்மைத் தாக்குகின்றன. அதிலே 'வெறுமை' என்ற ஆயுதத்தின் கூரை நீங்கள் சந்தித்ததுண்டா? இது, தான் இருப்பதையே காட்டிக்கொள்ளாது. அநேகமாக தனிமை நம்மை ஆட்கொள்ள இடமளிப்போமானால், வெறுமையானது, அதன் பின்னே தன்னை மறைத்துக்கொண்டு நம்மைத் தாக்க வந்துவிடுகிறது. வெறுமை உணர்வோ நம்மை விரக்தியின் பிடிக்குள் தள்ளிவிடுகிறது. வாழ்க்கையில் ஏற்படும் விரக்தியின் முடிவு இன்னதென்று நான் சொல்லி நீங்கள் அறியவேண்டியதில்லை.

இவ் வெறுமையுணர்வானது பல கோணங்களில் மனிதனைத் தாக்குகின்றது. இப்போது முக்கியமாக நோயாளிகளை வேதனைப்படுத்தும் குறிப்பிட்ட கோணங்களைக் கவனிப்போம்.

**நிறைவைத் தொடரும் வெறுமை:**

இதனை நகோமியின் வாழ்விலே நாம் காணலாம். கணவனோடும் இரண்டு பிள்ளைகளோடும் செழிப்புள்ள தேசத்திலே வாழ்ந்த நகோமி, பஞ்சத்திற்கு அஞ்சி மோவாப் தேசத்திற்குச் சென்ற கணவனைப் பின் தொடர்ந்தாள். எதிர்பாராதவிதமாக அங்கே தன் கணவனையும் பிள்ளை களையும் இழந்துபோனாள். மோவாப் தேசத்து மருமகளுடன் தன் சொந்த தேசத்திற்குத் திரும்பிய நகோமி, கர்த்தர் என்னை வெறுமையாய் திரும்பிவரப் பண்ணினார், என்று அங்கலாய்ப்பதைக் காண்கிறோம். எல்லாமே நிறைவாயிருந்து, பின்னர் அவை யாவையும் இழந்துவிடுவது மெய்யாகவே தாங்கமுடியாத அனுபவமாகும். நமது வாழ்வின் செழிப்புகள் மாத்திரமல்ல, திடகாத்திரமான நமது சரீர சுகம் பறிக்கப்படும்போதும் அந்த வெறுமை நம்மை மூடிப்போடுகிறது. நான் எப்படி இருந்தேன், இன்று இப்படி ஆகிவிட்டேனே! இப்படி மனதுக்குள் குமுறுகிறவர்கள் எத்தனைபேர்.

**நிறைவிலும் ஒரு வெறுமை:**

அடுத்ததாக, சகலமும் இருந்தும், எதுவும் இல்லாதது போன்ற ஒருவித வெறுமையுணர்வு. இது மிகக் கொடியதும் பயங்கரமானதுமாகும். நான் என் சிறு வயதிலிருந்தே இந்த உணர்வோடு போராடினேன். (இதுபற்றி என் முதல் புத்தகமாகிய தேவன் இணைத்ததை என்ற புத்தகத்தில் எழுதியுள்ளேன்.) வெளிவாழ்வு நிறைவானதாக இருந்தாலும், அந்தரங்கத்திலே ஒருவித வெறுமை. இது திருப்தியின்மையிலிருந்து வேறுபட்டதாகும். எல்லாம் இருந்தாலும் ஒன்றுமில்லாததுபோன்று பற்றற்ற ஒரு நிலைமை இது. அநேக நோயாளிகள், அதிலும் மரணப் போராட்டத்தில் துடிக்கும் பலர் இந்த அனுபவத்தினால் தாக்குண்டதை நான் அறிவேன். எத்தனை அன்புள்ளங்கள் நம்மைச் சூழ்ந்து நிற்கலாம். ஆனால் என்ன பலன்! என் வேதனை, நோவு, வியாதியின் கொடூரம் யாவையும் நான்தானே சுமக்க வேண்டும். இந்த எண்ணம் வெறுமையுணர்வை நமக்குள் தோற்றுவிக்கிறது.

அவர் ஒரு குறிப்பிட்ட நாட்டை ஆண்ட ஒரு சுல்தானின் தாயார், அவருக்கென்று பிரமாண்டமான அரண்மனை, ஏராளமான சேவகர்கள், அப்பப்பா! அவற்றை விவரிக்கமுடியாது. அந்த அம்மாளின் விருந்துபசாரங்கள் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். ஏராளமான வகைவகையான உணவுகள், பழங்கள், ரசங்கள் என்று மேசையே நிறைந்திருக்கும். விருந்துசாலை அழைக்கப்பட்டவர்களால் நிறைந்திருக்க, இந்த அம்மாவோ ஒரு சக்கரநாற்காலியிலேயே வருவார். அதுமாத்திரமா! விருந்தினர்கள் விருந்தை ருசித்து ருசித்து சாப்பிட, இந்த அம்மாவோ தனக்கென்று விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட நீர் ஆகாரத்தையே

உட்கொள்வார். அத்தனை வியாதிகள் அந்த அம்மாவுக்கு. என்ன பரிதாபமான நிலைமை இது! கொடுமை இல்லையா! சகலமும் குறைவில்லாமல் அவருக்கு முன்னே இருந்தும் எதையும் அனுபவிக்க முடியாதென்றால், உள்ளம் வெறுமையால் தாக்குண்ணாது என்பதற்கு என்ன நிச்சயம்!

இவ்விரு சந்தர்ப்பங்களும் எத்தனை வித்தியாசமானவை. நகோமி தான் இழந்துபோனவற்றையே நினைத்து நினைத்து அழுது, தன் வாழ்க்கையை வீணடித்தாளா? இல்லை. அடுத்தபடி செய்யவேண்டியதைக் கவனித்த அவள் பேரப்பிள்ளையையும் கண்டாள். தான் ஒன்றுமில்லாதவள் என்ற நினைவை அவள் மாற்றிக்கொண்டாள். ஆனால் இந்த அம்மாவின் நிலைமையோ சற்றுக் கடினமானது. பூனைக்கு முன்னே பாலை வைத்துவிட்டு, தொடாதே என்றால் எப்படி இருக்கும்? தன் கண்களை மூடிக் கொண்டாவது குடித்துவிட்டு, தண்டனையையும் பெற்றுக் கொள்ளுமே. மகள் சிறைக்குள்ளே, தந்தை வெளியே. இருவருக்குமிடையில் கண்ணாடியினாலான தடைச் சுவர். இருவரும் தமது கரங்களை கண்ணாடியின்மீது வைத்து ஒருவரையொருவர் தொட்டுப் பார்க்க முனைந்தால் முடியுமா? உள்ளம் புழுவாய் துடிக்காதா! ஒருதரம், ஒரேயொருதரம் தன் மகளைக் கட்டியணைக்கத் துடிக்கும் தந்தையின் உள்ளம் உடைந்து போகாதா!

இன்று இப்படி அல்லலுறுகிறவர்கள்தான் எத்தனைபேர்! வறுமையோ, வியாதியோ விபரீத நிலைமைகளோ, அவர்களை ஒன்றுமில்லாத வெறுமையுணர்வுக்குள் தள்ளிவிடுகின்றது.இந்த உணர்வுக்குள் அகப்பட்டால், அதிலிருந்து தப்பிப் பிழைப்பது மிகக் கடினமே. எனக்கு யாருமில்லை, எனக்கு ஒன்றுமில்லை என்று உள்ளத்துக்குள்ளே கதறும்போது சுயபரிதாபமும் இணைந்துவிடுகிறது. அப்படியானால் இதிலிருந்து விமோசனமே இல்லையா?

இருக்கிறது பிரியமானவர்களே! நம்முடைய ஒன்றுமில்லாமையிலே நமக்கு எல்லாமுமாக இருக்கக்கூடிய ஒருவர் இருக்கிறார். வியாதிப் படுக்கையில் உடைந்த உள்ளத்தோடு போராடும் சகோதரி! உனக்கு ஒருவர் இருக்கிறார். உனக்கு இவ்வுலகில் எதுவும் இல்லாமற் போகலாம். உன் சுகமும் கெட்டுப்போகலாம். ஆனாலும் உன் ஒன்றுமில்லாமையை அவர் நிறைவாக்குவார். அவர்தான் உன்னை நேசிக்கின்ற ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து. "என் தகப்பனும் என் தாயும் என்னைக் கைவிட்டாலும், கர்த்தர் என்னைச் சேர்த்துக்கொள்வார்." (சங்.27:10) சம்பூரணராகிய அவரேயல்லாமல் நம் வெறுமையில் நிறைவளிப்பவர் யாருமே இல்லை.

பாத்திரம் வெறுமையாக இருந்தாலும், மூடப்பட்டிருந்தால் அது நிறைக்கப்படமுடியாது. அதுபோலவே நம் வெறுமை நிரப்பப்படவேண்டும் என்று நாம் விரும்பினாலும், ஆண்டவரை நம் வாழ்வில் அனுமதிக்கும்

வரையிலும், அவர் நமது வாழ்வில் கிரியை செய்யமுடியாது. பூரணராகிய அவரை நம் வாழ்வில் நாமேதான் அனுமதிக்கவேண்டும்.

**இயேசு என் வாழ்வில்...**

இந்த இயேசு என் வெறுமையைப் போக்குவார் என்பதற்கு என்ன நிச்சயம்? வாழ்வில் அவரை அனுமதிப்பது என்பது என்ன?

ஒன்றுமில்லாததுபோல் ஆகிவிட்ட நம் வாழ்வில் தாமாகவே முன் வந்து நமக்கு உதவிசெய்ய அநேகர் காத்திருப்பர். அதிலும் நண்பர்களைப்போல நடிப்பவர்கள்தான் எத்தனை எத்தனை! கடலிலே தத்தளிக்கிறவனுக்கு ஒரு மரத்துண்டு போதும். அவன் அதை இறுகப் பிடித்துவிடுவான். இப்படித்தான் சில நண்பர்களும் தருணம் பார்த்து முன் வருவார்கள். தத்தளிப்பவன் என்ன செய்வான். பிடித்துக்கொள்வான். மரத்துண்டு சீறிப்பாயும் கடல் அலையுடன் போராடுமா? அது அலையின் திசையில்தானே போகும். நான் சேரவேண்டிய இடத்திற்கு அது கொண்டு செல்லுமா? இந்தச் சிந்தனையெல்லாம் அந்த நேரத்தில் வரவா போகிறது? உயிர் தப்பினால் போதும் என்ற எண்ணமே மேலோங்கி நிற்கும். பிரியமானவர்களே, மரத்துண்டு நல்லதுதான். ஆனால் அது நம்மை தவறான இடத்திற்கு கொண்டு செல்லாதவரைக்கும்தான் அது நல்லது.

நமக்கு அநேகர் உதவ முன்வரலாம். ஆனால் அவர்கள் உபத்திரவத்தைக் கூட்டாமல் இருக்கும்வரைக்கும் நல்லதுதான். நமது பெலவீனங்களையே தமது பெலனாக மாற்றிவிடுகின்ற போலி நண்பர்களை அந்த ஒன்றுமில்லாமையின் மத்தியிலே இனம் கண்டுகொள்வது கடினம். விழிப்புடன் இருப்போம். நமது வெறுமையைப் போக்குவதாகக் கூறிக்கொண்டு மதுவையும், மாதுவையும், தவறான உறவுகளையும், போலி நண்பர்களையும் நாடுவோமானால், நமது பின்நிலைமையல்ல முன்நிலைமையும் கூட நாசமாகிவிடும். வியாதிப்பட்டிருக்கும்போது நமது நொந்துபோன உள்ளங்களின் வெறுமையைப் போக்கும்படி உதவ வரும் சிலரது பேச்சுக்களுக்கும் அன்பொழுகும் வார்த்தைகளுக்கும் எச்சரிக்கையாயிருங்கள். அவற்றில் மயங்கி அவர்களிலேயே சார்ந்து விடாதபடிக்கு விழிப்புடன் இருங்கள். சிலசமயம் ஆறுதல் என்ற பெயரில் அவர்கள் சொல்லும் ஒரு சொல்லே, நம்மை வேதனைக் கடலில் தள்ளிவிடப் போதுமானதாகிவிடும். அந்த வேதனை வெறுமையைவிடவும் மோசமானது.

பிரியமானவர்களே, சூடுபட்டவனுக்குத்தான் நெருப்பின் தகிப்புத் தெரியும். அப்படிப்பட்ட ஒருவனே நெருப்புக்குத் தப்பவேண்டிய அவசியத்தை அடுத்தவனுக்குப் போதிப்பதற்குப் போதிய தகுதிபெற்றவனாவான். அதுபோலவே வெறுமையுணர்வினால் பாதிக்கப்பட்டவனுக்கு உதவ முன்வரும்

ஒருவன் முதலில், அவன் அதனை எதிர்கொண்டவனாக இருத்தல் நல்லது. அதிலும் வெற்றி சிறந்திருப்பானாயின் அவனாலேயே உணர்வுடன் செயல்படமுடியும்.

இத் தகமைகளை தம்மகத்தே பூரணமாகக் கொண்டவர் நமது ஆண்டவராகிய கிறிஸ்து ஒருவரே. அவர் ஐசுவரிய சம்பன்னர், பிதாவின் ஒரேபேறான குமாரன், அவராலேயே உலகம் உண்டானது. அப்படியிருக்க இவருக்கு எப்படி என்னுடைய வேதனை புரியும் என்று தடுமாறவேண்டாம். அவர் ஐசுவரியசம்பன்னராக இருந்தும், நாம் ஐசுவரியவான்களாகும் பொருட்டு தம்மை தாமே வெறுமையாக்கினார். (11கொரி.8:9) அவர் தேவகுமாரனாயிருந்தும் தம்மைத் தாமே வெறுமையாக்கினார். (பிலி.2:6,7) தமது பரலோக மேன்மைகள் யாவையும்விட்டு மனுஷனாய் வந்த அவர்தாமே பூரணராக இருந்தும் ஒன்றுமில்லாதவராயிருந்தார். இறுதியில் அவருக்கென்று இருந்த அங்கியையும் சீட்டுப்போட்டு விட்டார்கள். அவரை வைப்பதற்கு சொந்தமாக கல்லறையும் இருக்கவில்லை.

தேவகுமாரனுக்கு ஏன் இந்த அவலம்? தமக்கென்றிருந்த சகலத்தையும் இழந்தார். உலகில் அவருக்கு வந்த சகல வாய்ப்புகளையும் தவிர்த்தார். அவர் சிலுவையில் தொங்கிய வேளையில் அவருடைய வேதனையில் யார் பங்கேற்றார்? அவர் கரத்தில் நன்மை பெற்றவர்கள், சுகம் பெற்றவர்கள், தமது பசியைத் தீர்த்துக்கொண்டவர்கள் எல்லோரும் எங்கே ஒளிந்து கொண்டார்கள்? வெறுமை வெறுமை!! எல்லாமே இருந்தும் ஒன்றுமேயில்லாதவர்போல் ஒரு அனாதைபோல் தொங்கினாரே! அப்போ நானும் நீங்களும் எங்கே இருந்தோம்! இவரேயல்லாமல் நம்து வெறுமையுணர்வை உணரக்கூடியவர் யார்? அவர் சிலுவையிலே தொங்கியபோது அவர் யாரை அழைத்தார்? தாயை அழைத்தாரா? சீஷரைப் பார்த்துக் கதறினாரா? அவர் கூவி அழைத்தது தமது பிதா ஒருவரைத்தானே. அந்த வெறுமையின் மத்தியிலும் தமது பிதாவின் சித்தத்தைச் செய்வதிலேயே கிறிஸ்து நிறைவைக் கண்டார். அந்த நிறைவு அவரது உயிர்த்தெழுதலிலே பூரணமானது. அவர் உயிரோடெழுந்ததினாலே ஜீவனுள்ள நம்பிக்கை நமக்கும் உண்டாயிருக்கிறதே. ஒரு மனிதன் விழுந்துவிடக்கூடிய சகல நிலைகளிலும் வெற்றி சிறந்தவராய், நமது வெறுமையிலெல்லாம் நிறைவாய் நிற்கும் நம் இயேசுவைத் தவிர நமக்கு நிறைவைத் தரக்கூடியவர் யார்?

## வெறுமையின் சில அனுபவங்கள்:

### 1.பணம் விட்டுப்போனது!

நான் வியாதிப்படுக்கையில் இருந்த சமயம் ஒன்றுமில்லையே என்ற நினைவும் உணர்வும் என்னை அதிகமாக அலைக்கழித்தது. நான் செல்வந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவள் அல்ல, ஆனாலும் எனக்கு ஒரு குறைவும்

இருக்கவில்லை. வெளிநாட்டில் தொழில் செய்த என்னிடம் எனக்குப் பிடித்த எல்லாமே இருந்தது. நமது வாழ்க்கை முறைமைக்கு அங்கே உழைக்கும் பணம் மிக அதிகம். செலவுபோக மிஞ்சுவதும் எனக்கு அதிகமே. விடுமுறைக்கு வந்திருந்த நான், சில டாலர்களையும் பிரயாணக் காசோலை களையும் மாத்திரமே கைவசம் வைத்திருந்தேன். திடீரென மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டதினால் இப் பணத்தை மாற்றியெடுக்கவோ, ஏற்கனவே வங்கியிலிருந்த பணத்தை எடுக்கவோ தருணம் இருக்கவில்லை. அதுமாத்திரமல்லாமல், அந்நாட்களில் துரதிர்ஷ்டவசமாக எங்கள் வீட்டில் களவுபோனது. வீட்டினுள் நுழைந்த கள்வர் டாலர்களையும் காசோலைகளையும்கூட எடுத்துப்போய் மாற்றியும் விட்டனர். கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலைமை. யாவும் இருந்தும் ஒன்றுமில்லாத நிலைமை.

ஆனால் நடந்தது என்ன? கர்த்தர் எனக்குக் கிருபையாக அளித்துள்ள என் அன்பு சகோதர சகோதரிகள் எனக்குரிய சகல தேவைகளையும் நிறைவாகப் பூர்த்திசெய்தனர். அவர்களுக்காக என் தேவனைத் துதிக்கிறேன். தேவ கிருபையினாலே அவர்களிடம் பணமுமிருந்தது. அதனை அள்ளிக்கொடுக்கும் மனமுமிருந்தது. லட்சக்கணக்கில் செலவானது என்று அறிந்து மனம்நொந்து போனேன். இத்தனை லட்சத்திற்கும் நான் தகுதிவாய்ந்தவளா! சகோதரங்களுக்காக மாத்திரமல்ல, அவர்களது துணைவர் துணைவிகளுக்காகவும் நான் என் தேவனை கண்ணீரோடே துதிக்கிறேன். குடும்பத்திலே இது பெருத்த ஆசீர்வாதம் அல்லவா! இப் பணத்தினாலேயே எத்தனை குடும்பங்கள் நடுத்தெருவுக்கு வந்திருப்பது நாமறிந்ததே. மனைவிகளின் நச்சரிப்புத் தாங்காமல் குறுக்கு வழிகளை நாடும் கணவன்மார் எத்தனை! பணத்தேவையினிமித்தம் நாடுவிட்டு நாடு செல்லும் கண்ணீர்க் கதைகள்தான் எத்தனை! மருத்துவ செலவுக்குப் பணமின்றி அலைந்து திரிந்து, தந்திர வலைகளுக்குள் சிக்குபவர்கள்தான் எத்தனைபேர்!

இந்த நிலைமை உங்களுக்கு வேண்டாம். நம் தேவைகளைச் சந்திக்க வல்லவரிடம், உங்கள் தேவைகளையும் கவலைகளையும் விட்டுவிடுங்கள். "*உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு, அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.*" (சங்.37:5) கர்த்தர் வழியைத் திறக்கும்போது அதனை யார் மூடக்கூடும்? கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கும்போது அதனோடே வருத்தத்தையும் கூட்டமாட்டார். அதற்காக அவர் அள்ளி அள்ளி கொடுத்துவிடுகிறவர் அல்ல. நம் தேவைகளைச் சந்திக்கிறவர் அவர். நாம் நினைப்பதற்கும் கேட்பதற்கும் அதிகமாக செய்யவல்லவராயினும், நமது தேவைக்கும் நன்மைக்கும் ஏற்றபடியே செய்கிறார்.

இன்று, 'செழுமைக் கொள்கை' என்ற பெரிய நோய் விசுவாசக் கூட்டத்தாரை வெகுவாகத் தாக்கிக்கொண்டிருப்பதை மறுக்கமுடியாது. எச்சரிக்கை! நமது ஆண்டவர் சொகுசாகவா சிலுவையிலே தொங்கினார்? இல்லையே! அவர் வெறுமையாக தொங்கினார். அவரோடுகூட சிலுவையில் அறையப்பட நமக்கு அருளப்பட்டது எத்தனை மேன்மை. வெறுமையாய் தொங்கியவரே வெற்றி சிறந்தவரானார். தேவபிள்ளையே, நமது சேமிப்புக் கணக்குகள்கூட தகுந்த நேரத்தில் நமக்கு உதவாமற்போய்விடும். ஆகவே, எந்தவித பணத்தேவையோ முதலிலே தேவனை நோக்கிப் பார்க்கப் பழகிக்கொள். அப்புறம் நீ போகவேண்டிய வழியிலே அவர் உன்னை நடத்துவார்.

2. **உடைகளும் உதவாமற்போனது!**

"உடைக்காகவும் கவலைப்படவேண்டாம்" இதனையும் ஆண்டவர் தானே கூறினார். திடீரென வியாதிப்படுக்கையில் கிடப்பேன் என்று நான் கனவு கண்டேனா? மருத்துவமனையில் உபயோகிக்கக்கூடிய ஒரு உடையும் என்னிடம் இருக்கவில்லை. ஆனாலும் என் நண்பர்கள் அந்த உடனடித்தேவைகளை நிறைவாகவே சந்தித்தனர். நாட்கள் செல்லச் செல்ல, சரீர நோவும் அதிகரிக்க, அடுத்தடுத்து மேற்கொள்ளப்பட்ட அறுவை சிகிச்சையின் விளைவாக சரீரத்தில் பொருத்தப்பட்ட விதவிதமான குழாய்கள் உடலை அழுத்த, அணியும் உடையும் போர்வையும்கூட பாரமாகிவிட, உடையணிவதே பெரும்பாடாகிவிட்டது. இப்போது என் உபயோகத்திற்கு பழைய மெல்லிய துணிகளே தேவைப்பட்டன.

வகைவகையான உடைகள் என்னிடம் இருந்தும் என்ன பயன்? அலங்கார பொன் ஆபரணங்கள் எத்தனை! ஜிலுஜிலுக்கும் உடையும், மினுமினுக்கும் பாதணிகளும்தான் எத்தனை!. அலங்காரமும் ஆடம்பரமும் ஆறுதல் தருமோ! எனக்குத் தேவைப் பட்டதோ, யாருக்கும் தேவைப்படாத பழசாய்ப்போன துணிகள்தான். அந்த நிலைமையிலும் என் தேவன் அந்தத் தேவையையும் பூர்த்திசெய்தார். அதிலும் ஒரு நிறைவையும் சமாதானத்தையும் பெற்றுக்கொண்டேன்.

இவ்விடத்தில் இரு விஷயங்களைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். கந்தைத்துணியானாலும் தள்ளிவைக்கக்கூடாது. வேண்டாம் என்று தள்ளிவிடுபவைதான் தகுந்த நேரத்தில் நமக்கு உதவக்கூடிய நிலைமைகள் வரும். அப்படியே எந்த மனிதரையும் நாம் பகைத்தோ அல்லது வேண்டாமென்றோ தள்ளிவிடுவது உசிதமல்ல. நமது ஆபத்தில் அவர்கள்தான் நமக்கு உதவ வருவார்களோ யார் அறிவார்! அடுத்ததாக,

அவசியம் என்று நாம் கருதுபவைகள், நாம் நேசிப்பவர்கள், உதவும் என்று எண்ணும் உறவுகள், இவையாவும் தேவையான நேரத்தில் நம்மைக் கைவிடவும் நேரிடலாம். ஆகவே பொட்டரித்துப்போகக்கூடிய பூமிக்குரியவைகளில் அதிக பற்றுதல் வைக்காமல், எந்த இக்கட்டிலும் நம்மை விட்டகலாத தேவனை நாம் பற்றிக்கொள்வோமாயின் அவர் நமது தேவைகளை தகுந்த வேளையில், தகுதியானபடி நிச்சயம் சந்திப்பார்.

ஆம், என் வெறுமை நிலையில் எனக்கென்றிருந்த எந்த உடையும் எனக்குதவாமற்போனாலும், என் வெறுமையே நிறைவைத் தந்தது எனலாம். நான் உழைத்து சேகரித்த எந்த உடையும் எனக்கு உதவவில்லை. ஆனால் என் இயேசுவே என் போர்வையானார். உலக ஆடைகள் என் குளிரைப் போக்கவில்லை. ஆனால் ஆண்டவர் அளித்த துதியின் ஆடையோ என் துயரைத் துடைத்தது. என் இயேசுவும் குழந்தையாக கந்தையில்தானே சுற்றப்பட்டுக் கிடந்தார் என்று அந்நேரத்தில் நினைத்துக் கொண்டேன். அப்படியொரு தருணத்தை எனக்கும் அளித்ததற்காய் கோடி ஸ்தோத்திரங்களை ஏறெடுத்தேன். வெறுமையின் மத்தியிலும் நிறைவோடு காத்த கர்த்தரைத் துதிப்பது எத்தனை மகத்தான அனுபவம். தேவபிள்ளையே, கர்த்தர் உன்னை உன் வியாதியின் போது மாத்திரமல்ல, உன் ஜீவியம் முழுவதிலும் உடுத்துவிப்பார். ஆகவே அதிக ஆசைகளை விட்டுவிட்டு அவரை மாத்திரமே சார்ந்திருப்பாயாக.

### 3. உறவுகளும் பயமுறுத்தின!

கீழே விழுந்தவனை மாடு மிதித்த கதையை நாம் அறிவோம். பலருக்கு இதுவே வாழ்வாக மாறிவிடும்போது, அவலங்களும் அலைக்கழிவுகளும் சங்கிலித்தொடராக வந்து மனிதனை விழுங்கி விடுகின்றன. சாவோடு என் போராட்டம் தொடர்ந்தது. ஆனால் இது வாழவேண்டும் என்ற ஆசையினால் எழுந்த போராட்டம் அல்ல. பதிலுக்கு இயேசுவின் நாமத்தில் எப்படியாவது சாவை வென்றுவிடவேண்டும் என்ற எண்ணமே எனக்குள் மேலோங்கியிருந்தது.

மூன்றாவதும் முக்கியமானதுமான அறுவை சிகிச்சைக்காக நாள் குறிக்கப்பட்டது. தேசிய மருத்துவமனையில் முப்பதாவது வார்டில் அனுமதிக்கப்பட்ட நான், வாழ்வா சாவா என்று நிச்சயிக்கும் அந்த அறுவைசிகிச்சைக்காகக் காத்திருந்தேன். இது என் போராட்டத்தின் ஒரு உச்சக்கட்டம் என்று சொல்லலாம். சகலரும் கலங்கி நின்றனர். அப்படியானதொரு பலவீனமான தருணத்தைப் பார்த்திருந்தவனைப்போல சத்துருவானவன் தன் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்தான்.

எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரின் குடும்பத்திலும் சாவுக்குரிய போராட்டங்கள் ஆரம்பமாயின. ஒருவருக்கு விநோதமான நுரையீரல் வியாதி, அடுத்தவருக்கு உயிரைக் குடிக்குமளவிற்கு டெங்குக் காய்ச்சல். அதேசமயம் என் பெற்றோர் இருவரும்கூட மருத்துவமனையில் அனுமதிக்கப்படுமளவிற்கு நோயுற்றிருந்தனர் என்று பின்னர் கேள்விப்பட்டேன். இவைகள் இப்படியிருக்க அந்த நாளுக்கு முதல் நாளில் என் சகோதரி வீட்டிலே கள்வர்கள் தமது கைவரிசையைக் காட்டிவிட்டனர். மருத்துவ செலவுக்காக வைத்திருந்த பணமும் களவுபோய்விட்டது.

வெகு சாதாரணமாக இதனை எழுதிவிட்டேன். ஆனால் அந்த சமயத்தில் எனக்கு உலகமே இருளடைந்துவிட்டிருந்தது. பிரியமானவர்களே, எனக்கென்றிருந்த பணமும் உதவாமற் போயிற்று. உடை உடுத்த முடியவில்லை. உணவும் உண்ண முடியவில்லை. இவை போதாதென்று முழுக்குடும்பத்திலுமே வாழ்வு பறிபோகுமளவிற்கு பயங்கரங்கள் உண்டாயிருந்தன. இத்தனை இன்னல்கள் மத்தியிலும் என் தேவன் எனக்கும் எமது குடும்பத்தாருக்கும் போதுமானவராக மாத்திரமல்ல, நிறைவாகவும் இருந்தார்.

*"அவர்கள் அவரை நோக்கிப் பார்த்துப் பிரகாசமடைந்தார்கள். அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை. இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்."* (சங்.34:5,6) இது சத்தியம் என்று விசுவாசத்தினாலும், தேவபிள்ளைகளின் வாழ்வுகளுக்கூடாகவும் கண்டுகொண்ட நான், நானே அனுபவித்து ருசித்த போது, என் தேவனைத் துதித்தேன்.

பிரியமானவனே, பிரியமானவளே, வெறுமையான மனநிலையோடு போராடுகிறாயா? நீ எந்த சூழ்நிலையில் வெறுமைக்குள் தள்ளப்பட்டாய்? எந்த நிலைமையாயினும் என் இயேசுவை நோக்கிப் பார். அவர் வெறுமை யாக்கப்பட்டவராக உனக்காகத் தொங்கிய காட்சியைத் தியானித்துப் பார். அத் தியானம் ஒன்றே உன் வெறுமையை நிறைவாக்குவதை நீயே கண்டுகொள்வாய். உணவு உடை அற்றுப்போகலாம். சகலமும் அற்றுப் போகலாம். உடல் நிலையும் குன்றிப்போகலாம். கலங்காதே! ஆண்டவர் பட்ட பாடுகளில் ஒரு சிறிதேனும் நீயும் அனுபவிக்கக் கிடைத்த இத் தருணத்தைத் தவறவிட்டுவிடாதே.

இந் நிலைமையிலே, "இயேசு போதுமே, இயேசு போதுமே" என்று உள்ளத்தின் ஆழத்திலிருந்து நீ பாடக்கூடுமானால், அதுதான் மெய்யான வெற்றி. இந்த மனநிலைமையைப் பெற்றுக்கொண்டுவிட்டால்

[illegible] கர்த்தர் உங்கள் வெறுமையை நிறைவாக்குவாராக!

"வெறுமையாக்குகிறவர்கள் அவர்களை வெறுமையாக்கி, அவர்களுடைய திராட்சக்கொடிகளைக் கெடுத்துப்போட்டாலும், கர்த்தர் யாக்கோபின் மகிமையைத் திருப்பிக்கொடுப்பது போல,..." (நாகூம் 2:2) என்ற வாக்கின்படி உங்களுக்கும் நிறைவை அருளுவாராக! கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

◆◆◆◆◆◆◆◆